திருமூலர் அருளிய

திருமந்திரம்



இரண்டாம் தந்திரம்

உ

அன்பே சிவம்

பதிப்புரிமை © 2020

முதல் பதிப்பு 2020

திருமூலர் அருளிய

திருமந்திரம்

இரண்டாம் தந்திரம்

விளக்கம்

த. சரவணன்

திருமூலர் வரலாறு

திருக்கைலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல் பூண்ட திருநந்தி தேவரது திருவருள் பெற்ற மாணாக்கருள் அட்டமா சித்திகள் கைவரப்பெற்ற சுந்தரநாதர் என்னும் சிவயோகியார் ஒருவர் இருந்தார். இவர் திருக்கைலாய பரம்பரையைச் சேர்ந்தவர். சித்தர் மரபில் முதலானவராகிய அகத்தியருக்கு அடுத்தவர் இவர் எனக் கருதப்படுகின்றார். திருக்கைலாயத்தில் திருநந்தி தேவரின் உபதேசம் பெற்றவர்.

இவர் அகத்திய முனிவரிடத்தில் கொண்ட நட்பினால் அவரோடு சிலகாலம் தங்குவதற்கு எண்ணி அகத்தியர் எழுந்தருளியிருக்கும் பொதிகை மலையை அடையும் பொருட்டு திருக்கைலையிலிருந்து புறப்பட்டு தென்திசை நோக்கி சுந்தரநாதன் என்ற பெயருடன் சென்றார். அகத்தியரை காணச் செல்லும் வழியில் சாத்தனூர் என்னும் ஊரில் பசுக் கூட்டங்கள் கதறி அழுவதைக் கண்டார். பசுவை மேய்க்கும் மூலன் என்பவன் இறந்தமையால் அதனைத் தாங்காத பசுக்கள் உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச்சுற்றி வந்து வருந்தி அழுதன. மேய்ப்பான் இறந்தமையால் பசுக்களைடைந்த துயரத்தினைக் கண்ட சிவயோகியாரது உள்ளத்தில் இப்பசுக்களின் துயரத்தினை நீக்குதல் வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இந்த இடையன் உயிர் பெற்று எழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்காது என எண்ணிய சிவயோகியார் தம்முடைய திருமேனியைப் பாதுகாப்பாக ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்னும் சித்தியினால் தமது உயிரை இறந்த இடையனது உடம்பில் புகுமாறு செலுத்தினார். மூலன் அதுவரை உறங்கியிருந்தவன் போல் சட்டென்று கண் விழித்து திருமூலராய் எழுந்தார்.

திருமூலர் விழித்தெழுந்ததைக் கண்டு பசுக்கள் மகிழ்ந்து அவரது உடலை நாவினால் நக்கித் தங்களின் அன்பை வெளிப்படுத்தின. அவரும் பசுக்களைத் தட்டிக்கொடுத்து அவற்றோடு சேர்ந்து மகிழ்ந்தார். மாலை வந்ததும் வீடு நோக்கி பசுக்கள் புறப்பட திருமூலரும் கூடவே புறப்பட்டார். ஒவ்வொரு பசுவும் தத்தம் வீடு அறிந்து புகுந்து கொண்டன. திருமூலர் அவற்றை எல்லாம் வீடு சேர்த்தார். ஆனால் மூலன் மட்டும் அவரது வீட்டிற்கு போக விரும்பவில்லை. அவர் ஞான திருஷ்டியால் மூலனுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்பதை அறிந்தார். அதனால் தனியாக ஒரு இடத்தில் அமர்ந்தார்.

மூலனின் மனைவி கணவன் வரவை வெகு நேரமாக எதிர்பார்த்துப் பயன் ஏதும் இல்லாததால் கணவனைத் தேடிப் புறப்பட்டாள். வரும் வழியிலே ஓரிடத்தில் கணவன் அமர்ந்து இருப்பதைக் கண்டு அருகே சென்று வீட்டிற்கு வரக் காலதாமதம் ஆனது பற்றி கேள்விகளாக கேட்டாள். திருமூலர் மௌனமாகவே இருந்தார். மூலனின் மனைவிக்கு புரியவில்லை. திருமூலரின் கையைத் தொட்டு அழைக்க முற்பட்டாள். அம்மையார் செய்கை கண்டு திருமூலர் சிறிது எட்டி விலகினார். அதைக் கண்டு அந்தப் பெண்மணி அஞ்சி நடுங்கி உங்களுக்கு என்ன தீங்கு நேர்ந்தது? எதற்காக இப்படி விலகுகிறீர்கள்? என்று மன வருத்தத்தோடு கேட்டாள். என்னால் உன் வீட்டிற்கு வர முடியாது. உனக்கும் எனக்கும் இனி மேல் எவ்வித உறவும் கிடையாது. அதனால் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு அமைதி பெறுவாயாக என்று கூறினார். அதற்குமேல் அவள் முன்னால் நிற்பதும் தவறு என்பதை உணர்ந்து திருமூல யோகியார் அத்தலத்திலுள்ள திருமடம் ஒன்றுக்குச் சென்று சிவயோகத்தில் அமர்ந்தார். கணவனின் நிலையைக் கண்டு கதிகலங்கிப் போனாள் மனைவி. கணவனின் மனமாற்றத்தைப் பற்றி ஒன்றும் புரியாமல் கவலையோடு வீடு திரும்பினாள்.

மறுநாள் மூலனின் மனைவி சுற்றத்தாரை அழைத்துக்கொண்டு அவர் இருக்குமிடத்திற்கு வந்தாள். யோக நிலையில் அமர்ந்திருக்கும் திருமூலரின் முகத்தில் தெய்வ சக்தி தாண்டவமாடுவது போன்ற தனிப் பிரகாசம் பொலிவு பெறுவது கண்டு இவர் ஒரு முனிவர் என்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இருந்தும் அவர்கள் மூலனின் மனைவிக்காக திருமூலரிடம் வாதாடினார்கள். ஒரு பலனும் கிட்டவில்லை. அதன் பிறகு அவர்கள் மூலனின் மனைவியிடம் உன் கணவர் முன்னைப்போல் இல்லை. இப்பொழுது அவர் முற்றும் துறந்த முனிவராகி விட்டார். இனிமேல் இந்த மெய்ஞானியாரோடு வாழ வேண்டும் என்பது நடக்காத காரியம் என்று கூறினர். அவர்கள் கூறியதைக் கேட்ட மூலனின் மனைவி அவரது கால்களில் விழுந்து வணங்கி வேதனையோடு வீடு திரும்பினாள். பிறகு திருமூலர் மறைவாக இருந்த தமது திருமேனியைத் தேடினார். கிடைக்கவில்லை. முதலில் யோகியாருக்கு சற்று வியப்பாகவே இருந்தது. யோக நிலையில் அமர்ந்தார். தமது தபோ வலிமையால் இறைவன் அருளிய வேத ஆகமப் பொருள்களைத் தமிழிலே வகுத்து உலகோர்க்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவே இறைவன் தம் உடலை மறைத்தருளினார் என்பதை உணர்ந்து கொண்டார்.

அங்கிருந்து புறப்பட்ட திருமூலர் திருவாவடுதுறை திருத்தலத்தை அடைந்து மூலவர் பெருமானைப் பணிந்தவாறு மதிலுக்கு வெளியே மேற்கு பக்கமாக அமைந்துள்ள அரசமரத்தின் அடியில் அமர்ந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளையும் ஓர் ஆண்டிற்கு ஒரு மந்திரப் பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் இருந்து மூவாயிரம் பாடல்களை பாடினார். உலகோர் உய்யும் பொருட்டுத் திருமந்திர மாலையை அருளியபின் திருமூலர் சிதம்பரம் சென்று தில்லை நாதனுடன் கலந்து தனது குருவாகிய நந்தியிடம் தஞ்சம் அடைந்தார்.

திருமூலர் திருமந்திரம் எழுதி முடித்தவுடன் அதை வெளியிடவில்லை. யாரும் அறியாதவாறு தான் அமர்ந்திருந்த திருவாவடுதுறை ஆலயத்தின் கொடி மரத்தின் அடியில் தான் எழுதிய திருமந்திரம் அடங்கிய ஓலைச் சுவடிகளைப் புதைத்து வைத்துவிட்டு அவர் சிதம்பரம் சென்று நந்தீசுவரருடன் கலந்து விட்டார். அதன் பிறகு அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் சைவக் குரவர்கள் என்று போற்றப்படும் நால்வர்களில் ஒருவருமான திருஞான சம்பந்தர் திருவாவடுதுறை திருத்தலத்தின் வாயிலுக்குள் நுழைந்தவுடன் இறைவனின் திருவருளால் திருமூலர் அருளிய திருமந்திரத்தின் அற்புதமான தமிழ் வாசனை அவரை வந்தடைய அதனால் ஈர்க்கப்பட்டுத் தன்னுடன் வந்தவர்களிடம் இங்கே அருமையான தமிழ் வாசனை வருகின்றதே என்ன என்று பாருங்கள் என்று கூறி கொடி மரத்தின் அடியில் உள்ள மண்ணைத் தோண்டச் செய்து அங்கே திருமூலர் புதைத்து வைத்திருந்த திருமந்திர ஓலைச் சுவடிகளை கண்டு எடுத்தார். அவற்றை படித்து உணர்ந்து அதன் அருமை பெருமைகளை உலகோர் அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்று வெளியிட்டு அனைவருக்கும் ஓதி அருளச் செய்தார்.

பிற்காலத்தில் வந்த சேக்கிழார் பெருமான் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றித் தான் எழுதிய பெரிய புராணத்தில் திருமூலரை நாற்பத்து ஆறாவதாக சேர்த்து திருமூலரின் வாழ்க்கை வரலாற்றையும் திருமந்திரப் பாடல்களின் குறிப்பும் எழுதி வைத்தார். அவருக்குப் பின் வந்த நம்பியாண்டார் நம்பி சைவ சான்றோர்கள் பலர் அருளியிருந்த சைவத் திருமுறைகளை ஒன்றாகத் தொகுத்த போது திருமூலர் அருளிய திருமந்திரத்தையும் பத்தாவது திருமுறையாகத் தொகுத்து அருளினார்.

திருமந்திரம் முன்னுரை

திருமந்திரம் என்பது திருமூலரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் படைப்பு ஆகும். இது ஒன்பது தந்திரங்களுடன் மூவாயிரம் பாடல்கள் உடையது. ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளாகவும் ஒவ்வொரு வரியும் நான்கு சொற்களைக் கொண்டதாகவும் அந்த ஒவ்வொரு வரியிலும் புள்ளி எழுத்துக்கள் நீங்கலாக 12 எழுத்துக்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

வேதம் ஆகமம் ஆகிய இரண்டிற்கும் திருமந்திரம் விளக்கம் தருகிறது. திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாக பெரியோர்களால் வைக்கப்பட்டுள்ளது. தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்று சான்றோர் கூறுவர். மேலும் சிவமே அன்பு அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. திருமூலர் திருமந்திரத்தில் மூன்று அதிமுக்கியமான வாக்கியங்களை இன்றளவும் நாம் பயன்படுத்தும் விதமாக அருளியுள்ளார் அவையாவன:

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

அன்பே சிவம்

திருமந்திரம் நூலுக்கு தமிழ் மூவாயிரம் என்ற பெயரே முதலில் இருந்தது. அந்த நூலில் இறைவனை அடையும் எளிய வழிமுறைகளும் மிக நிரம்பிய மந்திரங்களும் சில தந்திரங்களும் நம் மனித ஸ்தூல சரீரத்துக்குத் தேவையான அனைத்தும் விளக்கமாக உள்ளதால் அந்த நூல் திருமூலர் திருமந்திரம் என்று பின்னர் வழங்கப்பட்டது.

எமது முன்னுரை

திருமந்திரம் பாயிரம் பகுதியில் திருமந்திரத் தொகை சிறப்பில் திருமூலர் திருமந்திரத்தை பற்றி விவரிக்கிறார்.

திருமூலனாகிய யாம் வழங்கிய இந்த மூவாயிரம் தமிழ் மந்திரங்களும் யாம் பெற்ற இன்பம் இந்த உலகத்திலுள்ள அனைத்து உயிர்களும் பெற வேண்டும் என்ற அன்பினாலேயே எம் குருநாதன் இறைவனின் அருளால் வழங்கப் பெற்றது. இந்த மந்திரங்களைக் காலையில் எழுந்து அவற்றின் பொருளை ஓதி உணர்ந்து அதில் உள்ள கருத்துக்களைக் கடைபிடித்து வந்தால் உலகங்கள் அனைத்திற்கும் தலைவனாகிய சதாசிவமூர்த்தியைச் சென்று அடைந்து யாம் பெற்ற பேரின்பத்தை அனைவரும் பெறலாம் என்று பாடல் #99 இல் அருளுகிறார்.

உயிர்கள் அனைத்தும் இறைவனை உணர்ந்து வீடு பேறு அடைய வேண்டும் என்கின்ற அன்பினால் யாம் உயிர்களுக்கு வைத்த பேரின்ப பரிசு திருமந்திரம் என்னும் பேரின்ப நன்மை தரும் நூலாகும். இந்த நூலிலுள்ள மூவாயிரம் பாடல்களில் யாம் வழங்கியிருப்பது இறைவனை அடைந்து முக்தி பெறும் வழிகளும் அதன் முடிவில் இறைவனோடு என்றும் கலந்து இருக்கும் பேரின்பத்தின் விளக்கங்களும் ஆகும். இறைவனின் அருளால் அறிவுப்பூர்வமாக இயற்றப்பெற்ற இந்த மூவாயிரம் பாடல்களும் அனைவருக்கும் பொதுவானவையாகும். இந்த மூவாயிரம் பாடல்களையும் தமது சிந்தையில் வைத்து அவற்றின் பொருளுணர்ந்து போற்றி வருபவர்களுக்கு அனைத்துவிதமான சிறப்புகளையும் கொடுக்குமென பாடல் #100 இல் அருளுகிறார்.

இறைவனை அடையும் எளிய வழிமுறைகளும் மிக நிரம்பிய மந்திரங்களும் சில தந்திரங்களும் நம் மனித ஸ்தூல சரீரத்துக்குத் தேவையான அனைத்தும் விளக்கமாகவும் சொல்லினால் விவரிக்க முடியாத இந்த சிறப்பு வாய்ந்த திருமந்திரம் பாடல்களுக்கு திருமூலரின் அருளாலும் எமது குருநாதர் ஆதி அருணாசல சித்தர் கே.வி. நாராயணன் அவர்களின் அருளாலும் தினம் ஒரு திருமந்திரம் பாடலுக்கு சில வருடங்களாக விளக்கம் எழுதிக் கொண்டிருக்கின்றோம்.

இன்னும் முழுமையாக எழுதி முடிக்கவில்லை. எழுதியவரை பாடல்களை சில வருடங்களாக தினந்தோறும் முகநூல் [பேஸ்புக்] வழியாகவும் புலனம் [வாட்ஸ்அப்] வழியாகவும் கேவிஎன்திருமூலர்.காம் வலைதளத்தின் வழியாகவும் பதிவேற்றிக் கொண்டிருக்கின்றோம். தினமும் ஒரு திருமந்திரம் பாடலுடன் விளக்கத்தை இவற்றின் மூலம் படித்து பயன் பெறுமாறு அன்பர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம். திருமந்திர விளக்கங்கள் அனைத்தும் இறுதியானவைகள் அல்ல. தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது அதன் உண்மை தன்மை விவாதிக்கப்பட்டு ஆராயப்பட்டு திருத்தப்படுகின்றன. படிப்பவர்கள் தங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு விடை தெரிந்து கொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள எமது மின்னஞ்சல் [ஈமெயில்] வழியாகவும் வலைதளம் மற்றும் முகநூல் [பேஸ்புக்] புலனம் [வாட்ஸ்அப்] வழியாகவும் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்.

திருமந்திரம் பாடல்களை 3000 வருடங்கள் தவம் இருந்து 3000 பாடல்கள் எழுதியிருக்கின்றோம் என்று திருமூலர் தனது பாடல்கள் வழியாகவே அருளியிருக்கின்றார். ஆனால் பல தலைமுறைகள் தாண்டி தற்போது நமக்கு கிடைத்திருப்பவை 3047 பாடல்கள். இதில் அதிகமாக இருக்கும் 47 பாடல்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் தெரிந்து கொள்ள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது எழுத்துப்பணிக்கு உதவி புரிந்த நண்பர் ஸ்ரீநிவாசன் அவரின் பணி மிகவும் மகத்தானது. அவருக்கு வணக்கத்துடன் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் தினந்தோறும் எழுதிய திருமந்திரத்தை புத்தக வடிவாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எம்மை உற்சாகப்படுத்திய இணையதள நண்பர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

PDF புத்தகமாக உள்ள திருமந்திரம் பாடல்களின் விளக்கங்கள் கொண்ட இந்த முதல் தந்திரத்தின் தொகுப்பு அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்றும் அனைவரும் படித்து பயன் பெற வேண்டும் என்றும் அமேசான் கிண்டிலிலும் பேஸ்புக் வாட்ஸ்அப் மற்றும் வலைதளங்களிலும் இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. இறை பணியாக செய்யும் இச்செயலை தயவு செய்து யாரும் தவறாக பயன்படுத்த வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

த. சரவணன்

https://kvnthirumoolar.com

https://www.facebook.com/groups/thirumandhiram.daily/

saravana.0801@gmail.com

வாழ்த்துரை

குருவருளும் திருவருளும் கொண்டு திரு. சரவணன் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிதனைப் பற்றி சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

ஆதி அருணாசல சித்தர் குருஜி ஸ்ரீ நாராயணன் அவர்களின் அன்பும் ஆசியாலும் காக்கப்பட்ட எங்களுக்கு சற்குரு பகவான் திருமூலரின் பேரருளும் வழிகாட்டுதலும் கிடைக்கப் பெற்றோம். திரு. சரவணன் அவர்கள் சிறு வயது முதலே சிறந்த பக்தியும் ஆன்மீக நாட்டமும் உள்ளவர். பல வழிபாடுகளில் அவர்தம் ஆற்றிய பணிகள் பல. அவரை "தம்பி சரவணன்" என சற்குரு பகவான் திருமூலரின் அருள்வாக்கில் அழைக்கப்பட்டு பாரட்டு பெற்று ஒரு எடுத்துக் காட்டாக திகழ்பவர்.

அவரது ஆர்வத்தினால் தொடர்ந்து பல ஆன்மீக நூல்களைப் படிப்பது மட்டுமல்லாது திருமந்திரத்தை பல முறை படித்து உட்பொருள் அறிந்து யாவருக்கும் பயன்படுமாறு எளிய முறையில் பதிவிட்டு வருகிறார். தன்னுடைய முதன் முயற்சியாக முதல் இரண்டு தந்திரங்களின் பாடலுடன் பொருளினை சிறந்த விளக்கத்துடன் யாவரும் பயனுறும் வண்ணம் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் PDF வடிவில் வெளியிட உள்ளார்.

இவரது முயற்சி தொடர வேண்டும். அதில் யாவரும் பயன் பெற சற்குரு பகவான் திருமூலரின் திருவடிகளை வணங்கி போற்றி அவருக்கு தொடர்ந்து வழிகாட்ட வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

வ.செ. தணிகைநாயகம்.

செயற் பொறியாளர் [ஓய்வு]

தமிழ்நாடு மின்சார வாரியம்.

சென்னை.

இரண்டாம் தந்திரம் முன்னுரை

இரண்டாம் தந்திரத்தில் வரும் பாடல்கள் இறைவனின் நடத்திய திருவிளையாடல் புராண கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் பற்றி கூறுவது போல் இருந்தாலும் அனைத்து பாடல்களும் ஒவ்வொரு கதாபாத்திரங்களின் தத்துவங்களுக்கான விளக்கங்களை கூறுகின்றது.

தத்துவம் என்பதை தத்–துவம் என்று பிரித்து தத் என்றால் உள்ளது என்றும் துவம் என்றால் தன்மை என்றும் பொருள் கொள்ளலாம். உள்ளது தன்மை அதாவது உண்மைத் தன்மை என்று பொருள்.

இரண்டாம் தந்திரத்தின் முதல் தலைப்பு அகத்தியம். இத்தலைப்பில் அகத்தியரின் தத்துவத்தை கூறுகிறார்.

இரண்டாம் தந்திரத்தின் இரண்டாவது தலைப்பு பதிவலியில் வீரட்டம். இதில் வரும் 8 பாடல்களும் இறைவன் தமது வீரத்தால் மறக்கருணை என்னும் அறியாமையால் ஆட்கொள்ளப்பட்ட அசுரர்களை வதம் செய்து அவர்களை ஆட்கொண்ட புராணக் கதைகளை பாடல்களில் கூறுவதாக இருந்தாலும் இதன் உட்கருத்து உயிர்கள் தமக்குள் இருக்கும் எட்டுவித அசுரர்களை வதம் செய்து இறைவனை அடையும் வழிகளை இப்பாடல்களின் மூலம் அறிவதே ஆகும்.

பாடல் #337: இரண்டாம் தந்திரம் – 1. அகத்தியம்
[அகம் + இயம் = அகத்தியம். உள்ளேயிருக்கும் ஒலி]

நடுவுநில் லாதிவ் வுலகம் சரிந்து
கெடுநின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே.

விளக்கம்:

இறைவனும் இறைவியும் திருமணம் செய்த போது அதைக் காண வேண்டும் என்ற ஆசையில் உலகத்திலுள்ள அனைத்து முனிவர்களும் யோகிகளும் சித்தர்களும் தேவர்களும் திருக்கயிலாயத்தில் வந்து சேர்ந்தனர். அதனால் அதுவரை சரிசமமாக நின்ற வடக்கு நிலங்களும் தெற்கு நிலங்களும் அதிக பளுவால் மாறி வடக்கு நிலங்கள் தாழ்ந்தும் தெற்கு நிலங்கள் உயர்ந்தும் நிற்க உலகத்திற்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து தேவர்கள் இறைவனிடம் சென்று எம்பெருமானே இப்படி உலகம் சமம் இல்லாமல் கெட்டு நிற்கின்றதே இதைக் காப்பாற்றுங்கள் என்று முறையிட சிவபெருமான் அகத்தியரைப் பார்த்து நீ சென்று உயர்ந்து நிற்கும் தெற்கு நிலங்களின் மேல் நின்று இரு என்று கூறினார். அதைக்கேட்டு அகத்தியரும் தென்னாடு சென்று பொதிகை மலையில் நிற்க தெற்கு நிலங்கள் சமம் பெற்றது.

உள்விளக்கம்:

உடலும் உயிரும் சேர்ந்து பிறந்த போது அது வளர வளர அதற்கு சிறிது சிறிதாக ஆசைகள் கோபம் காமம் என்று பல குணங்கள் சேரும் போது உடலோடு இருக்கும் உயிர் சரிசம நிலை இல்லாமல் கெட்டு அழிய ஆரம்பிக்கின்றது. அப்போது உயிர் தமக்கு ஆபத்து இறைவா என்னை காப்பாற்று என்று வணங்க உடம்பில் உயிர் தங்குவதற்கும் சாப்பிடும் உணவு செரிப்பதற்கும் அக்னியை வைத்து இருக்கும் பேரருளாளன் எம்பெருமான் ஈசன் உடம்பில் உள்ள அக்னியை கொண்டு எப்பொழுதும் அந்த அக்னி அழியாமல் இருக்க ஒலியை வைத்து அந்த அக்னியை வளர்த்துக்கொண்டே இருக்கின்றான். இந்த உடம்பு எப்பொழுதும் அழியாமல் இருக்க ஒலியால் குண்டலியில் உள்ள அக்னியை விரைவாக வளர்த்து தலையின் உச்சிக்கு கொண்டு சென்றால் அழியாமல் வைத்திருக்கலாம் என்று அருளுகிறார்.

பாடல் #338: இரண்டாம் தந்திரம் - 1. அகத்தியம் [அகம் + இயம் = அகத்தியம். உள்ளேயிருக்கும் ஒலி]

அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடும்
அங்கி உதயம் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்குஒளி தானே.

விளக்கம்:

உடலில் இருக்கும் ஒலியானது உடம்பில் தோன்றும் அக்னியை வளர்த்து அந்த அக்னியை குண்டலினி மூலம் மேல்நோக்கி தலைக்கு கொண்டு சென்று வலது புறமாக நகன்று இடப்பக்கம் தலை முழுவதும் பரவச்செய்தால் உடலோடு இருக்கும் உயிரிடம் அருள் தன்மை வளம் நிறைந்து ஒளியுடன் இருக்கும்.

முன்னுரை: இரண்டாம் தந்திரம் எண் - 2 பதிவலியில் வீரட்டம் என்னும் தலைப்பில் வரும் 8 பாடல்களும் இறைவன் தமது வீரத்தால் மறக்கருணை என்னும் அறியாமையால் ஆட்கொள்ளப்பட்ட அசுரர்களை வதம் செய்து அவர்களை ஆட்கொண்ட புராணக் கதைகளை பாடல்களில் கூறுவதாக இருந்தாலும் இதன் உட்கருத்து உயிர்கள் தமக்குள் இருக்கும் எட்டுவித அசுரர்களை வதம் செய்து இறைவனை அடையும் வழிகளை இப்பாடல்களின் மூலம் அறிவதே ஆகும்.

பாடல் #339: இரண்டாம் தந்திரம் - 2. பதிவலியில் வீரட்டம் [இறைவன் மறக்கருணையில் ஆட்கொண்ட எட்டு இடங்கள்]

கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே.

விளக்கம்:

கருத்த நிற மேனியோடு இரு கண்களும் தெரியாத அந்தகன் என்கிற அசுரன் மிகக் கடுமையான தவம் செய்து சாகா வரம் பெற்று ஈரேழு பதினான்கு உலகத்தையும் வெற்றி பெற்று அதில் வாழும் அனைத்து உயிர்களையும் கொடுமை படுத்தினான். இவனது கொடுமை தாங்காத தேவர்கள் இறைவனிடம் சென்று தங்களைக் காப்பாற்றுமாறு வேண்டிக்கொள்ள மனமிறங்கிய இறைவன் பைரவர் அவதாரம் எடுத்து குருத்து போன்ற மூன்று இலைகளில் நடு இலை மட்டும் மிகவும் நீண்டு இருக்கும் கூர்மையான சூலாயுதத்தால் அந்தகாசுரனின் கொன்று தேவர்களைக் காப்பாற்றினார்.

உட்கருத்து:

அறியாமையால் மாயையில் மயங்கி கண் தெரியாமல் இருட்டில் இருக்கும் மனம் உயிரை இறைவனை அடையவிடாமல் தீய எண்ணத்துடன் வதைத்துக்கொண்டிருக்கிறது. ஒரு நாள் உயிர் இறைவா என்னை காப்பாற்று என்று வேண்ணிக்கொள்ள இறைவன் மாயையில் சிக்கி இருட்டில் கண் தெரியாமல் இருக்கும் மனதில் ஒளியைக் கொடுத்து அறியாமை என்னும் தீய எண்ணங்களை கொன்று உயிரை காப்பாற்றி அருளினார்.

மனித முதுகெலும்பு முடியும் பகுதி கழுத்து எலும்புகளுக்கு மேல் உள்ளது இது பின் மூளைப் பகுதிக்கும் முன்மூளை பகுதிக்கும் இடையில் முடிவுறுகிறது இதற்கு குருந்தம் என்று பெயர். இதன்மேல் சோம ஒளி, சூரிய ஒளி, ஆன்ம ஒளி என்னும் மூன்று ஒளிகள் உள்ளன. இவைதான் குருத்துயர் சூலமாகும்.

இந்த குருத்துயர் சூலத்தின் மூலம் இறைவன் அருளால் அறியாமை என்னும் இருட்டை அகற்றி இறைவனை உணர்ந்துகொள்ளலாம்.

பாடல் #340: இரண்டாம் தந்திரம் – 2. பதிவலியில் வீரட்டம் [இறைவன் மறக்கருணையில் ஆட்கொண்ட எட்டு இடங்கள்]

கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே.

விளக்கம்:

பிரம்மாவின் மூத்தகுமாரனாகிய தட்சன் தவமிருந்து வானவர்கள் தனக்கு அடிபணிய வேண்டும் என்று வரம் பெற்றான். வரம் பெற்ற ஆணவத்தால் அண்டசராசரங்களுக்கும் தலைவன் ஆனான். பார்வதி தேவியைத் தனது மகளாக அடைந்தான். பார்வதி தேவி ஈசனைக் கண்டு தனது மாயை மறைந்து அவருடன் இணைந்துவிட்டாள். தந்தையாகிய தனது சம்மதம் இல்லாமல் இறைவனுடன் இணைந்துவிட்டாள் என்ற கோபத்தில் இறைவனை அழிக்க ஒரு மாபெரும் யாகம் செய்த தட்சன் அதில் இறைவனை அழைக்காமலும் தேவர்களுக்குத் தரவேண்டிய அவிர்பாகத்தை அவருக்குத் தராமலும் கொலைக்குற்றத்திற்கு மேலான குற்றம் புரிந்தான். அவன் குற்றத்தில் கோபம் கொண்ட இறைவன் பைரவர் அவதாரம் எடுத்து அவனது தலையைத் துண்டித்து வேள்வித் தீயில் போட்டு எரித்துவிட்டார். அதன்பிறகு பார்வதி தேவியும் பிரம்ம தேரும் உலக நன்மைக்கு தட்சன் தேவை என்று வேண்டிக்கொள்ள மனமிறங்கிய இறைவன் ஒரு ஆட்டின் தலையை எடுத்து தட்சனின் உடலில் பொருத்தி அவன் வாழும்படி செய்தார். தட்சனும் தனது ஆணவம் அழிந்து இறைவனை வணங்கினான். இந்த புராணம் நிகழ்ந்த இடம் திருப்பறியலூர் தலமாகும்.

உட்கருத்து:

உயிர்கள் தனது கர்மாக்களை தீர்க்க பிறந்து கர்மாக்கள் தீர்ந்ததும் இறைவனை அடைய காத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் உயிர்களிடம் ஆணவம் தலைவன் போல் குடிகொண்டு தான் சொல்லுவது தான் சரி அடுத்தவர் சொல்வதை கேட்கமாட்டேன் என்று தன் சொல்படி உயிரை ஆட்டிப்படைத்துக் கொண்டு இறைவனிடம் உயிர் செல்லவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறது. உயிர் இறைவா ஆணவத்திடம் இருந்து என்னைக்காப்பாற்று என்று வேண்டிட இறைவன் ஆணவம் என்னும் தலைவனின் தலையை வெட்டி உயிர்களுக்கு அருள் செய்தான். ஆணவம் முற்றிலும் அழிந்தால் இறைவனை அடைந்து விடலாம். ஆனால் உயிர்கள் தனது கர்மாக்கள் தீர்ந்தால் மட்டுமே இறைவனை அடையமுடியும் ஆகவே கர்மாக்கள் தீரும்வரை நன்மை தீமை என எது நடந்தாலும் எல்லாம் இறைவன் செயல் என்று எண்ணும் ஆட்டுத்தலை போன்ற எண்ணத்தை படைத்து உயிர்களுக்கு அருளினான்.

பாடல் #341: இரண்டாம் தந்திரம் – 2. பதிவலியில் வீரட்டம் [இறைவன் மறக்கருணையில் ஆட்கொண்ட எட்டு வீரச்செயல்கள்]

எங்கும் பரந்தும் இருநிலந் தாங்கியும்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற
அங்குஅச் சுதனை உதிரங்கொண் டானே.

விளக்கம்:

அண்டசராசரமெங்கும் பரவி இருப்பவனும் வாணுலகம் மண்ணுலகம் என்று இரண்டு நிலங்களையும் தாங்கி இருப்பவனும் தம்மை நாடி வருபவர்களுக்கு தஞ்சம் கொடுப்பவனுமாகிய இறைவனின் திருவடிகளின் பெருங்கருணையை உணர்ந்து இருக்கும் தேவர்கள் பிரம்மனைப் பார்த்துக் கோபம் கொண்டனர். பிரம்மன் படைப்புத் தொழிலைச் செய்வதாலும் ஐந்து தலைகளைக் கொண்டதாலும் மும்மூர்த்திகளிலேயே தாம்தான் உயர்ந்தவர் என்று தற்பெருமை கொண்டிருந்ததால் இறைவனது திருவடிக் கருணையை உணராமல் இருந்தார். பிரம்மனின் தற்பெருமையால் படைப்பு பாதிக்கப்படுவதைக் கண்ட இறைவன் பைரவ அவதாரம் எடுத்து பிரம்மனின் ஐந்து தலைகளின் ஒன்றைத் தனது விரல் நகத்தால் கிள்ளி எடுத்துவிட்டார். பிரம்மாவின் கிள்ளி எடுக்கப்பட்ட தலையிலிருந்து வந்த குருதியை அந்த கபாலத்திலேயே எடுத்து திருமாலை ஏற்றுக்கொள்ளச் செய்து அருளினார். இது நிகழ்ந்த இடம் திருக்கண்டியூர் தலமாகும்.

உட்கருத்து :

உயிர்களிடம் இருக்கும் நான் என்னும் அகங்காரம் அகந்தை தான் யார் என்பதை உணரவிடாமல் செய்து நல்ல எண்ணம் குணங்களை அழிப்பதுடன் இறைவனையும் அடையவிடாமல் செய்து விடுகிறது. மேலும் அகந்தை அகங்காரத்தினால் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து அதன் அடுத்த பிறவியையும் பாதிக்கிறது. [உதாரணமாக உயிருக்கு கர்மவினையின்படி 10 பிறவிகள் என்று எடுத்துக்கொண்டால் அகந்தை அகங்காரத்தினால் மேலும் பிறவிகள் எண்ணிக்கை கூடி அடுத்து வரும் பிறவிகளையும் பாதிக்கிறது] பிறவிகள் உயிர்கள் இறைவா என்னை காப்பாற்று என்று இறைவனை வேண்டிட தன்னை நாடி வருபவர்களுக்கு பெருங்கருணை செய்யும் இறைவன் அந்த அகந்தை அகங்காரத்தை அடியோடு வெட்டி எடுத்து உயிர்களை காக்கும் திருமாலிடம் அளித்து மீண்டும் இந்த உயிருக்கு மீண்டும் அகந்தை அகங்காரம் வராமல் இருக்க அருளினார்.

பாடல் #342: இரண்டாம் தந்திரம் - 2. பதிவலியில் வீரட்டம் (இறைவன் மறக்கருணையில் ஆட்கொண்ட எட்டு இடங்கள்)

எங்கும் கலந்துமென் உள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபால்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித்து ஆழிசெய் தானே.

விளக்கம்:

அனைத்து உயிருக்குள்ளும் எங்கும் எதிலும் இரண்டறக் கலந்திருப்பவனும், அனைத்து உயிர்களும் உய்ய வேதங்களை உலகிற்கு ஓதி அந்த வேதத்திற்கு முதல்வனாயும் இருக்கும் இறைவனை உணராமல் உயிர்கள் வீணாக ஒருவர் மேல் ஒருவர் குரோதம் கொண்டு ஆத்திரத்தில் அறிவிழந்து அடுத்த உயிருக்குள்ளும் இறைவன் இருக்கின்றான் என்பதை உணராமல் அந்த உயிரை அழிக்க பல கெட்ட செயல்களைச் செய்கின்றனர். உயிர்கள் இறைவா காப்பாற்று என்று வேண்டிட குரோதம் என்னும் அசுர குணத்தை உயிர்களிடம் உள்ள சக்திமய சக்கரங்களை கருவியாக பயன்படுத்தி இறைவன் தனது திருவடி மூலம் அழித்தான்.

இந்த பாடலுக்கான புராணம் நிகழ்ந்த இடம் திருவிற்குடி தலமாகும். ஒரு முறை இந்திரன் தான் என்ற அகந்தையுடன் சிவனை தரிசிக்க கைலாயத்திற்கு வந்தான். இதை அறிந்த சிவன் சேவகன் வடிவெடுத்து கைலாய வாசலில் நின்று உள்ளே செல்ல முடியாதபடி தடுத்தார். கோபமடைந்த இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் சிவனை அடித்தான். கோபத்தால் சிவன் தன் நெற்றிக்கண்ணை திறந்தார். காவல் காப்பவர் சிவன் என்பதை அறிந்த இந்திரன் ஆணவத்தால் தான் செய்த செயலை மன்னிக்க வேண்டினான். கோபத்தில் தன் உடலில் ஏற்பட்ட வியர்வைத்துளி பாற்கடலில் விழுந்தது. அதில் ஒரு குழந்தை தோன்றியது. இந்த குழந்தை பிரம்மனின் தாடியை பிடித்து இழுக்க வலி தாங்காத பிரம்மனின் கண்களிலிருந்து கண்ணீர் தோன்றி அந்த துளியும் குழந்தையின் மீது விழுந்தது. இப்படி சிவனின் வியர்வை துளி பாற்கடல் நீர் பிரம்மனின் கண்ணீர் துளி ஆகிய ஜலத்தினால் உருவான குழந்தைக்கு ஜலந்தராசூரன் என பெயர் வைக்கப்பட்டது. அவன் பெரியவனானதும் மூவுலகும் தனக்கு அடிமையாக வேண்டும் என்றும் சாகாவரமும் கேட்டான். பிரம்மன் மறுத்தார். அதற்கு ஜலந்தராசூரன் தர்ம பத்தினியான என் மனைவி பிருந்தை எப்போது மனதளவில் கெடுகிறாளோ அப்போது எனக்கு அழிவு வரட்டும் என வரம் வாங்கி விட்டான். இவனது அட்டகாசம் அதிகமானது. கடைசியில் சிவனையே அழிக்க சென்றான். சிவன் அந்தணர் வேடமிட்டு அசுரன் முன் வந்து நின்று தன் காலால் தரையில் சக்கர வடிவில் ஒரு வட்டம் போட்டார் இந்த சக்கரத்தை எடுத்து உன் தலையில் வை. அது உன்னை அழிக்கும் என்றார். ஆணவம் கொண்ட ஜலந்தரன் என் மனைவியின் கற்பின் திறனால்

எனக்கு அழிவு வராது என சவால் விட்டான். இந்த நேரத்தில் திருமாலை அழைத்த சிவன் நீர் ஜலந்தராசூரனைப் போல் வடிவெடுத்து அவன் மனைவி பிருந்தை முன் செல்லும்படி கூறினார். கணவன் தான் வந்திருக்கிறார் என வீட்டிற்குள் அழைத்தாள் பிருந்தை. ஒரு நொடியில் மாற்றானை தன் கணவன் என நினைத்ததால் அவளது மனம் களங்கமடைந்தது. இந்நேரத்தில் சக்கரத்தை அசுரன் எடுத்து தலையில் வைக்க அவன் கழுத்தை சக்கரம் துண்டித்து விடுகிறது.

பாடல் #343: இரண்டாம் தந்திரம் - 2. பதிவலியில் வீரட்டம் (இறைவன் மறக்கருணையில் ஆட்கொண்ட எட்டு இடங்கள்)

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாருமறி யாரே.

விளக்கம்:

கங்கையைத் தன் சிவந்த சடையில் சூடியவனும் எல்லாவற்றிற்கும் முதலாயும் மூலமாயும் இருப்பவனுமாகிய இறைவனை முப்புரம் என்னும் இடத்தை எரித்தவன் என்று கூறுபவர்கள் மூடர்கள். அவர்களுக்கும் முப்புரமாக இருப்பது மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை என்பது புரியவில்லை. அவற்றை இறைவன் அழிக்கிறான் என்பதை உணராமல் மூன்று புரங்களை எரித்ததாக கூறுபவர்களில் எவரும் அந்தப் புரங்கள் எரிந்த விதத்தை அறிந்தவர்கள் இல்லை.

இந்த புராணநிகழ்வு நடந்த இடம் திருவதிகை தலமாகும். தாருகாசுரன் என்கிற அசுரனின் மகன்களான வித்துன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் ஆகிய மூவரும் மிகச்சிறந்த இறை பக்தர்கள். அவர்கள் மூவரும் பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் செய்து நினைத்த இடத்திற்கு உடனே பறந்து செல்லும் மூன்று கோட்டைகளையும், அவை மூன்றும் ஒன்றாக இருக்கும்போது ஒரேயொரு அம்பினால் மட்டுமே தாங்கள் அழியவேண்டும் என்றும் வரம் பெற்றனர். வரம் கிடைத்ததும் அவர்கள் தேவலோகம் அனைத்தையும் ஆட்டிப்படைத்து வந்தனர். அவர்களின் அதிகாரம் தாங்காமல் தேவர்களும் பிரம்மரும் திருமாலும் இறைவனை வேண்ட மனமிறங்கிய இறைவன் அழகிய பைரவ அவதாரம் எடுத்து தேவதச்சன் விஸ்வகர்மாவிடம் ஒரு தேர் செய்யச் சொல்லி சந்திர சூரியரே தேர்ச் சக்கரங்களாகவும் நான்கு வேதங்களே தேரில் பூட்டிய குதிரைகளாகவும் பிரம்ம தேவரே தேரை ஓட்டும் சாரதியாகவும் மேரு மலையே வில்லாகவும், வாசுகி நாகமே வில்லைப் பூட்டும் நாணாகவும் அக்கினி அம்பின் முனையாகவும் வாயு அம்பின் வாலாகவும் திருமாலே அம்பாகவும் ஆக்கி எடுத்துக்கொண்டு முப்புரத்தை வந்து சேர்ந்தார். இறை பக்தியில் மிகவும் சிறந்து விளங்கும் அசுரர்களை அழிக்க வேண்டாமென்ற பெருங்கருணையில் தமது நெற்றிக் கண்ணைத் திறந்து ஒரு பார்வை பார்க்க மூன்று கோட்டைகளும் உடனே எரிந்து சாம்பலாகி மூவரும் இறைவனின் காலடியில் விழுந்து வணங்க இறைவனும் அவர்களை ஆட்கொண்டு தமது கோயிலின் வாயிற் காவலர்களாகவும் இருவரையும் கோயிலில் செய்யும் குடமுழுக்கை ஏற்பவராக ஒருவரையும் ஏற்றுக்கொண்டார்.

குறிப்பு: 113, 114, 115, 118, 210, 212, 218 ஆகிய திருமந்திர பாடல்களில் உயிர்களிடம் இருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை இறைவன் எப்படி அழித்து உயிர்களை காக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளலாம். இந்த பாடல்களை நமது http://kvnthirumoolar.com/topics/thirumanthiram/ வலைதளத்தில் தேடல் பகுதியில் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

பாடல் #344: இரண்டாம் தந்திரம் - 2. பதிவலியில் வீரட்டம் [இறைவன் மறக்கருணையில் ஆட்கொண்ட எட்டு இடங்கள்]

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர னாவ தறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயின் உள்ளெழுந்த தன்று கொலையே.

விளக்கம்:

தாருகா வனத்திலிருந்த முனிவர்கள் இறைவனை வணங்காமல் இறைவனின் அருளை விட தங்களின் மந்திர சக்தியே பெரிது தாம் கற்ற மந்திரங்களின் மூலமாக எதையும் அடையலாம் என்ற அகங்காரத்தில் இருந்தனர். இவர்களின் அறியாமையைப் போக்க இறைவன் அழகிய உருவம் கொண்ட பிக்ஷாடனராகத் தோன்றி அந்த முனிவர்களின் வீட்டுக்குச் சென்று அங்கு இருந்த முனி பத்தினிகளின் முன்னால் பிச்சை கேட்டு நின்றார். அவரின் அழகில் மயங்கிய முனி பத்தினிகள் அவர் பின்னாலேயே மயக்கத்தில் கூடி வர ஆரம்பித்தனர். தங்களது பத்தினிகள் இப்படி ஒரு ஆடவனின் பின்னால் மயங்கி வருவதைக் கண்டு கோபமுற்ற முனிவர்கள் தமது தவ வலிமையால் மூன்றுவிதமான தீயை வளர்த்து மந்திரங்கள் மூலமாக [ஆகவனீயம் - காட்டுத்தீ, காருகபத்தியம் - வீட்டுத்தீ, தட்சிணாக்கினியம் - ஏட்டுத்தீ] கரிய நிறமுடைய ஒரு பெரிய யானையைத் தோன்றுவித்தனர். யாகத் தீயில் தோன்றிய யானை அவரை அழித்துவிடும் என்று நினைத்தார்கள். ஆனால் அந்தத் தீயிலிருந்து வெளிவந்த யானையைக் காடே அதிரும்படி பிளந்து கொன்று அதன் தோலை தனக்குப் போர்வையாக போர்த்திக்கொண்டு மூன்று வகையாக நெருப்பும் அதில் சொல்லும் மந்திரங்களும் மந்திரத்தின் பலனாக அதிலிருந்து வரும் பலனும் அனைத்தும் யாமே என்று தாருகா வனத்திலிருந்த முனிவர்களுக்கு உணர்த்தினார், இந்த புராணநிகழ்வு நடந்த இடம் திருவழுவூர் தலமாகும்.

உள்விளக்கம்:

உயிர்களுக்கு வரும் கோபத்தினால் நான் என்ற அகங்காரம் அதிகரித்து என்ன செய்கின்றோம் என்ன பேசுகின்றோம் என்று தெரியாமல் மதம் பிடித்த யானை போல் இருக்கும் போது உயிர்கள் இறைவனை சரணடைய இறைவன் கோபத்தையும் அகங்காரத்தையும் அழித்து அனைத்தும் யாமே என்று உணர்த்துகிறார்.

பாடல் #345: இரண்டாம் தந்திரம் - 2. பதிவலியில் வீரட்டம் [இறைவன் மறக்கருணையில் ஆட்கொண்ட எட்டு இடங்கள்]

மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே.

விளக்கம்:

மூலாதாரத்தில் எரிந்து கொண்டு இருக்கும் குண்டலினி சக்தியை சுழுமுனை நாடி வழியே மேலேற்றி அங்கே சகஸ்ரரதளத்தில் சேர்த்து அதைத்தாண்டிய பரவெளியில் இருக்கும் இறைவனை உணரும் உயிர்களுக்கு காலனை உதைத்து சாகா வரம் அளிப்பான் இறைவன். இதை உலகத்தவர்க்கு உணர்த்தும் விதமாகவே திருக்கடவூரின் திருத்தலம் இறைவனின் அருளால் நன்றாக அமைந்தது.

இந்த பாடலுக்கான புராணம் நிகழ்ந்த இடம் திருக்கடவூர் தலமாகும். மிருகண்டு முனிவரும் அவருடைய மனைவியான மருத்துவவதி தேவியாரும் தங்களுக்கு குழந்தை பாக்கியம் தரும்படி இறைவனை வேண்ட குறைந்த ஆயுட்கொண்ட அறிவாளியான குழந்தை வேண்டுமா அல்லது அதிக ஆயுட்கொண்ட முட்டாளான குழந்தை வேண்டுமா என்று இறைவன் கேட்க அறிவாளியான குழந்தையே வேண்டும் என்று கேட்டு மார்க்கண்டேயன் எனும் குழந்தையைப் பெற்றுக் கொண்டனர். மார்க்கண்டேயர் பிறந்ததிலிருந்து ஆயுள் அதிகரிக்க இறைவனே சரணடைய வேண்டும் என்று போதித்து வந்தனர். அதனால் மிகச்சிறந்த இறை பக்தனான மார்க்கண்டேயர் எப்போதும் இறை பூஜையிலேயே வாழ்க்கையைக் கழித்து வந்தார். அவரது ஆயுட்காலம் முடியும் போது அவரை மேலுலகம் அழைத்துச்செல்ல எமதருமரும் எந்தப் பூஜையில் இருந்தாலும் அவரது ஆயுள் முடிந்தால் அழைத்துச் செல்லவேண்டியது தமது கடமை என்று எண்ணி அவரை அழைத்துச் செல்ல பாசக் கயிற்றை வீசுகிறார். சிவபூஜையில் இருந்த மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைக் கட்டி அணைத்திருக்கும் போது பாசக்கயிறு அவரோடு சிவலிங்கத்தின் மீதும் விழ அதிலிருந்து இறைவன் வெளிவந்து எமது பூஜையில் இருக்கும் அடியவர் எவரையும் கொண்டு செல்லும் உரிமை உமக்கு இல்லை என்று கூறி எமதருமரை காலால் எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு மார்க்கண்டேயருக்கும் என்றும் 16 வயதுடன் சிரஞ்சீவியாக இருக்கும் வரமளித்தார்.

உட்கருத்து:

தியானத்தில் இருந்து மூச்சுக்காற்றை உள்ளிழுத்து அடக்கி அதன் மூலம் மூலாதாரத்தில் எரிந்து கொண்டிருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி

சுழுமுனை நாடி வழியே மேல் நோக்கி எடுத்துச் சென்று ஏழாவதான சக்கரமான சகஸ்ரரதளத்தில் சேர்த்து அங்கு இருக்கும் இறைவனை உணர்ந்து விட்டால் மரண பயம் இன்றி சிரஞ்சீவியாக இறைவனிடம் பேரானந்தத்திலேயே இருக்கலாம்.



பாடல் #346: இரண்டாம் தந்திரம் – 2. பதிவலியில் வீரட்டம் (இறைவன் மறக்கருணையில் ஆட்கொண்ட எட்டு இடங்கள்)

இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித் தங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்தே.

விளக்கம்:

உலக நன்மைக்காக இன்னொரு உயிரை உருவாக்க தனது துணையுடன் சேரும் உயிர்கள் இறைவனை அடைய தடையாய் இருக்கும் காமம் என்னும் நோயில் சிக்காமல் இருக்க இறைவனை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒரு நிலைப்பட்ட மனமுடன் இறைவனை வேண்ட இறைவன் காமம் என்னும் நோயிலிருந்து உயிரை காப்பாற்றி உலக நன்மைக்காக இன்னொரு உடலுடன் கூடிய உயிரை உருவாக்க மட்டுமே இறை எண்ணத்துடன் தன்னுடைய துணையுடன் சேரும் உயிருக்கு அருந்தவ யோகத்தை அருளுவார்.

இந்த புராண நிகழ்வு நடந்த இடம் திருக்கொறுக்கை தலமாகும். சிவபெருமான் தியானத்தில் இருக்கும்போது உலக நன்மைக்காக அவர் தியானத்தை கலைக்க வேண்டும் என்று இந்திரன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி மன்மதன் இறைவனின் மீது மலர்க்கணைகளைத் தொடுத்தான். அப்போதும் இறைவன் தமது நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனைப் பார்க்க அந்த நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட நெருப்பில் மன்மதன் எரிந்து சாம்பலானான். பிறகு மன்மதனின் மனைவியான ரதி தேவி இறைவனை வேண்டிக்கொள்ள உருவமில்லாத அருவமாக மன்மதனை மறுபடியும் உயிர்ப்பித்துக் கொடுத்தார்.



பாடல் #347: இரண்டாம் தந்திரம் – 3. லிங்க புராணம் [லிங்க வடிவின் வரலாறு]

அடிசேர்வன் என்னளம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமக னார்மக ளாகித்
திடமாத வஞ்செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே.

விளக்கம்:

ஆதிமூலமாகிய சிவ பரம்பொருளை அடைய வேண்டும் என்று சக்தி உறுதி எடுத்துக் கொண்டு இமய மலையின் அரசனாகிய பர்வதராஜனின் மகளாகப் பிறந்து பல காலம் உறுதியுடன் மாபெரும் தவம் செய்து தேவர்களும் அறியாத வழிபாட்டு முறைகளை தேவர்களும் அறிய முறையாக பூஜை செய்து இறைவனை அடைந்தாள்.

உட்கருத்து:

ஆதிமூலமாகிய சிவ பரம்பொருளை அடைய வேண்டும் என்று ஆசைப்படும் உயிர்கள், தமது உறுதியிலிருந்து சற்றும் விலகாமல் தியானமும் தவமும் செய்து அசையும் சக்தியாகிய குண்டலினி சக்தியை மேலேற்றி தனது சிரசின் இடப்பக்கம் இருக்கும் அசையா சக்தியாகிய சிற்சக்தியுடன் சேர்த்தால் தேவர்களும் அறியாத இறைவனின் லிங்க உருவத்தையும், லிங்க தத்துவத்தையும் தனக்குள்ளேயே உணர்ந்து இறைவனின் திருவடிகளைச் சென்று அடையலாம்.

பாடல் #348: இரண்டாம் தந்திரம் – 3. லிங்க புராணம் (லிங்க வடிவின் வரலாறு)

திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை
அரியனென் றெண்ணி அயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே.

விளக்கம்:

எல்லா உயிர்களிடமும் இருக்கும் ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களை அழித்து அருளும் எம்பெருமான் ஈசன் கிடைப்பதற்கு மிகவும் அரிதானவன் என்று எண்ணிக்கொண்டு சோர்ந்து போக வேண்டாம். உண்மையான அன்புடன் தம்மை பூஜிக்கும் அடியவர்களுக்கு ஈசன் பொய்யானவன் அல்ல. பாடல் #347 ல் உள்ளபடி தனக்குள்ளேயே லிங்க உருவத்தையும், லிங்க தத்துவத்தையும் உணர்ந்து அன்போடு பூஜிக்கும் அடியவர்களின் அருகில் பேரன்புடன் பெருங்கருணையோடு நின்று அவர்களின் பக்திக்கு ஏற்ற பரிசை அருளுவான்.

பாடல் #349: இரண்டாம் தந்திரம் - 3. லிங்க புராணம் (லிங்க வடிவின் வரலாறு)

ஆழி வலங்கொண் டயன்மால் இருவரும்
ஊழி வலஞ்செய்ய ஒண்சுட ராதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி
வாழிப் பிரமருக்கும் வாள்கொடுத் தானே.

விளக்கம்:

கடல் போல் வலிமை கொண்ட பிரமன் திருமால் இருவரும் நெடுங்காலம் ஒளி வடிவாக இருக்கின்ற ஆதி இறைவனை வழிபட திருமாலுக்கு சக்ராயுதமும், பிரம்மனுக்கு வாளும் கொடுத்து அருளினான்.

உட்கருத்து:

பாடல் #347 ல் உள்ளபடி அசையா சக்தியாகிய நற்சக்தியுடன் சேர முதல் சக்கரம் மூலாதாரத்தில் இருந்து கிளம்பும் அசையும் சக்தியான குண்டலினி கடல் போல் வலிமை கொண்ட 2 வது சக்கரமாகிய பிரம்மன் வீற்றிருக்கும் சுவாதிட்டானம், 3 வது சக்கரமாகிய திருமால் வீற்றிருக்கும் மணிப்பூரகத்தை உணர்ந்தும் அசையா சக்தியாகிய நற்சக்தியுடன் சேர்ந்து தனக்குள் லிங்க உருவத்தை உணர்ந்தும் தத்துவத்தை உணர்ந்தும் நெடுங்காலம் ஒளி வடிவாய் இருக்கும் ஆதி இறைவனை வழிபட்டால் திருமால் செய்யும் காக்கும் வேலையும் பிரம்மன் செய்யும் படைக்கும் வேலையையும் இறைவன் கொடுத்து அருளுவான்.

இதனை திருமந்திர பாடல் #302, பாடல் #321 ன் மூலம் அறிந்து கொள்ளலாம். உதாரணமாக பல புராண வரலாறுகளில் பல மகான்கள் சித்தர்கள் தங்கள் வாழ்க்கை வரலாற்றில் இறந்தவர்களை மீண்டும் மீட்டு படைக்கும் பிரம்மனின் தொழிலை செய்துள்ளார்கள். கர்மவினைகளின் படி இறக்கவேண்டியவர்களை காத்து காக்கும் திருமாலின் தொழிலை செய்துள்ளார்கள்.

பாடல் #350: இரண்டாம் தந்திரம் - 3. லிங்க புராணம் [லிங்க வடிவின் தத்துவம்]

தாங்கி இருபது தோளுந் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்
நீங்காத அருள்செய்தான் நின்மலன் தானே.

விளக்கம்:

இறைவனிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்த இலங்கையின் அரசன் ராவணன் ஒரு முறை அவரைப் பார்க்க எண்ணி கையிலாய மலைக்கு வந்தான். அவன் மானிடனாக இருப்பதால் உள்ளே விட முடியாது என்று வாயிற் காவலர்கள் தடுத்துவிட இறைவனைக் காண முடியவில்லையே என்ற கோபத்தில் தனது இருபது தோள்களால் கையிலாய மலையை தூக்கி இலங்கைக்கு எடுத்துச் செல்ல முயன்றான். ராவணனை நிகரில்லாத பேராற்றலை உடைய இறைவன் தமது திருவடியின் பெருவிரலால் சிறிது அழுத்தம் கொடுக்க அதன் அழுத்தத்தால் தாங்க முடியாத பெரும் வேதனையை அடைந்த ராவணன் கோபம் நீங்கி இறைவா எம்மைக் காப்பாற்று என்று உரக்க அழைத்தான். ஒரு மாசும் இல்லாத இறைவனும் அவனின் உண்மையான பக்தியை மெச்சி அவன் முன்னே தோன்றி அவனுக்கு என்றும் நீங்காத திருவருளை வழங்கி அருளினார்.

உட்கருத்து:

உயிர்கள் பாடல் #347 ல் உள்ளபடி லிங்க தத்துவத்தையும் லிங்கத்தையும் தனக்குள் உணரும் போது மனிதனின் குணங்கள் பத்தும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும் அவற்றால் ஏற்படங்கூடிய உலகப்பற்றுகள் இறைவனை அடையவிடாமல் தடுக்கும் போது இறைவா காப்பாற்று என்று உயிர்கள் வேண்டிட அவர்களுக்கு திருவடி தீட்சை வழங்கி அவர்களின் குணங்கள், ஞானேந்திரிய, கன்மேந்திரியங்களை நீங்கி மீண்டும் வராமல் அருள் செய்வான்.

குணங்கள் உயிரை மனதால் பாதிப்பது, குணங்களுக்கான விளக்கம்:

1. காமம் - சிற்றின்பம்
2. குரோதம் - கோபம்
3. உலோபம் - பேராசை, கருமித்தனம்
4. மோகம் - மாயையால் நிகழும் மயக்க உணர்ச்சி,
5. மதம் - கொள்கை, செருக்கு,வெறி, மதுபானக் களிப்பு, பெருமை
6. மாச்சரியம் - பொறாமை, பகைமை

7. டம்பம் – ஆடம்பரம்
8. தர்ப்பம் – ஆசைகள்
9. அசூயை – பொறாமை
10. ஈரிசை – பிறர் துன்பம் கண்டு மகிழ்வது

ஞானேந்திரிய கர்மங்கள் என்பது ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றால் உயிரை பாதிப்பது.

கன்மேந்திரியம் என்றால் செயல் மனித உடல் செய்யும் ஐந்து வகையான செயல்கள் இந்த ஐந்து வகையான செயல்கள் தொடர்ந்து செயல்படுவதால் ஆத்மா உடலோடு கலந்து இருக்கிறது.

பாடல் #351: இரண்டாம் தந்திரம் - 3. லிங்க புராணம் [லிங்க வடிவின் தத்துவம்]

உறுவ தறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலை பெற்றானே.

விளக்கம்:

இந்த உலகத்தில் நடக்கும் செயல்கள் அனைத்துக்கும் காரணமாணவன் ஈசன் என்பதை அறிந்த தண்டி என்பவன் மணல்களைச் சேர்த்து ஒரு லிங்கம் செய்து அந்த மணல் லிங்கத்தை பசும்பாலால் வழிபட்டான். பசும்பால் வீணாவதைப் பார்த்துக் கோபப்பட்ட தண்டியின் தந்தை அந்த மணல் லிங்கத்தைக் காலால் எட்டி உதைத்தார். தந்தையின் இந்த செயலால் கோபம் கொண்ட தண்டி பசுவை மேய்க்க வைத்திருந்த கம்பை கையில் எடுக்க அந்தக் கம்பு மழு என்னும் ஆயுதமாக மாறியது. அந்த மழுவால் தன் தந்தையின் இரண்டு கால்களையும் வெட்டினான். தண்டீசனின் பக்தியைப் பார்த்த சிவபெருமான் தான் சூடியிருக்கும் கொன்றை மாலையை எடுத்து மகிழ்வுடன் சண்டேசுரருக்கு அணிவித்தான்.

உட்கருத்து:

லிங்க உருவத்தையும் லிங்க தத்துவத்தையும் உணர்ந்து இந்த உலகத்தில் நடக்கும் செயல்கள் அனைத்துக்கும் காரணமாணவன் ஈசன் என்பதை அறிந்த உயிர் உடலில் இருந்து உயிரை பிரிக்கவும் மீண்டும் பிறவாமல் பிறவியை அறுக்கவும் தான் உணர்ந்த இறைவனை பூஜை செய்யும் பொழுது உடல் தனது ஐம்புலன்களால் அதை தடுக்கிறது. குண்டலினி சக்தி என்னும் கம்பால் ஐம்புலன்களை அடிக்க குண்டலினி என்னும் கம்பு மழுவாக மாறி உடலில் இருக்கும் இடகலை பிங்கலை முச்சுக்காற்றை வெட்டி உடலில் இருந்து உயிரை பிரிக்கிறது, உயிரின் பக்தியைப் பார்த்த சிவபெருமான் தான் சூடியிருக்கும் கொன்றை மாலையை எடுத்து மகிழ்வுடன் அந்த உயிருக்கு அணிவித்து தனது அடியவர்களின் தலைவன் என்னும் பதவி அளிப்பார்.

பாடல் #352: இரண்டாம் தந்திரம் – 3. லிங்க புராணம் [லிங்க வடிவின் தத்துவம்]

ஓடிவந் தெல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று
நாடி இறைவா நமஎன்று கும்பிட
ஈடுஇல் புகழோன் எழுகவென் றானே.

விளக்கம்:

தேவர்கள் எல்லாம் தமக்குத் துன்பம் நேரும் போதெல்லாம் வாடிய முகத்துடன் மனம் வருந்தி இறைவனை விரும்பிச்சென்று இறைவா நமசிவாய என்று திருவடி பணிந்து கும்பிட ஈடு இணையில்லாத புகழை உடைய இறைவன் அவர்கள் மேல் கருணை கொண்டு எழுக என்று கூறி அவர்களின் துயரங்களைத் தீர்த்தான்.

உட்கருத்து:

தனக்குள் லிங்க உருவத்தையும் லிங்க தத்துவத்தை உணர்ந்த உயிர்களுக்கு படைக்கும் பிரம்மாவின் தொழிலையும் காக்கும் திருமாலின் தொழிலையும் அளித்து அந்த உயிருக்கு தேவர்கள் என்னும் தகுதியை அளிக்கும் இறைவன் [இதனை திருமந்திர பாடல் எண் #349 மூலம் அறியலாம்] அவர்கள் உணர்ந்த லிங்க தத்துவத்தை இறைவா நமசிவாய என்று வழிபட ஈடு இணையில்லாத புகழை உடைய இறைவன் அவர்கள் மேல் கருணை கொண்டு எழுக என்று கூறி அவர்களின் உடலில் இருந்து உயிரை பிரித்து பிறவா நிலையை அந்த உயிருக்கு அளிப்பார். லிங்க வடிவின் தத்துவமும் இறைவனும் ஒன்றே என்பதை இப்பாடலின் மூலம் உணரலாம்.

பாடல் #353: இரண்டாம் தந்திரம் - 4. தக்கன் வேள்வி (வேள்வியின் தத்துவம்)

தந்தைபி ரான்வெகுண் டான்தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்
சிதைந்தனர் அண்ணல் சினஞ்செய்த போதே.

விளக்கம்:

அனைத்து உயிர்களுக்கும் தந்தையாகவும் தலைவனாகவும் இருக்கும் இறைவனுக்குத் தரும் அவிர்பாகத்தையும் அவருக்குத் தராமலும் அவரை மதிக்காமலும் இறைவனை அழிக்க மாபெரும் யாகம் ஒன்றை செய்தான் தக்கன். அவனது அறியாமையைக் கண்டு கோபமுற்ற ஈசன் அந்த யாகத்தையும் அவனது செறுக்கையும் அழித்து அவனக்கு நல் அறிவைக் கொடுக்க மறக்கருணை கொண்டு வீரபத்திரர் எனும் பைரவ அவதாரத்தை அந்த மாபெரும் யாகத்தின் தீயிலிருந்து வெளிப்பட்டார். அந்த மாபெரும் யாகத்தை செய்தவர்கள் மற்றும் அதை ஏற்க வந்த தேவர்களும் இறைவனின் கோப முக தரிசனத்தைப் பார்த்த மறுகணமே அவனது அருளன்றி இந்த யாகத்தைப் பூர்த்தி செய்ய முடியாதென்பதை அறிந்து இறைவனின் கோபத்தைக் கண்டு மிகவும் அஞ்சி தமது நிலை தடுமாறி எல்லாத் திசையிலும் சிதைந்து போனார்கள்.

உட்கருத்து:

தாம் செய்யும் எந்த செயலானாலும் மனம், வாக்கு, உடம்பு மூன்றையும் ஒருநிலைப்படுத்தி இறையருளுடன் செய்வது வேள்வியாகும். மனம், வாக்கு, உடம்பு மூன்றை மட்டுமே வைத்து இறையருள் இல்லாமல் செய்வது தக்கன் வேள்வியாகும்.

பாடல் #354: இரண்டாம் தந்திரம் - 4. தக்கன் வேள்வி [வேள்வியின் தத்துவம்]

சந்தி செயக்கண் டெழுகின் றரிதானும்
எந்தை யிவனல்ல யாமே உலகினிற்
பந்தஞ்செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய
அந்தமி லாதானும் அருள்புரிந் தானே.

விளக்கம்:

தக்கன் யாகத்தையும் அதைச் செய்ய முற்பட்டவர்களையும் அதை ஏற்றுக்கொண்ட தேவர்களையும் இறைவனின் பைரவ அவதாரமான வீரபத்திரர் அளித்த தண்டனையை கண்டு யாகத்தீயில் இருந்து எழுந்து வந்த திருமால் இறைவனே தவறு செய்தவன் இவனல்ல உலகினில் பிறந்த சதியின் மேல் வைத்த பாசத்தாலும் கொண்ட பந்தத்தாலும் அறிவிழந்து இவன் செய்த யாகத்தின் அவிர்பாகத்தை ஏற்றுக்கொண்ட நாங்களே பெரும் தவறு செய்தவர்கள் எம்மை மன்னித்து அருளுங்கள் என்று கூறி இறைவனின் திருவடிகளில் விழுந்து தொழ என்றுமே இறப்பில்லாத இறைவனும் அவர்களுக்கு அருள் புரிந்தான்.

உட்கருத்து:

மனம், வாக்கு, உடம்பு மூன்றையும் ஒருநிலைப்படுத்தி பந்த பாசத்தினால் செயல்களை செய்தால் அந்த செயல் இறையருள் இல்லாமல் பூர்த்தியாகாமல் இருக்கும் அதை உணர்ந்து உயிர்கள் பந்த, பாசத்தில் இருந்து விடுபட்டு இறையருளுடன் செய்யும் போது இறைவன் அந்த உயிருக்கு அருள் செய்வான்.

பாடல் #355: இரண்டாம் தந்திரம் – 4. தக்கன் வேள்வி (இறை அருளோடு செய்யும் வேள்வியின் தத்துவம்)

அப்பரி சேஅய னார்பதி வேள்வியுள்
அப்பரி சேஅங்கி அதிசய மாகில்
அப்பரி சேஅது நீர்மை யுள்கலந்து
அப்பரி சேசிவனாய் ஆவிக்கின் றானே.

விளக்கம்:

இறைவனை அழிக்க தக்கன் செய்த மாபெரும் யாகத்தில் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டு அவிர்பாகங்களை ஏற்க வந்த பிரம்மன் மற்றும் தேவர்கள் அனைவருக்கும் அவரவர் தொழில்களைப் பரிசாக அளித்து அந்தத் தொழில்களைச் செய்யும் சக்தியாகவும் இருக்கும் இறைவனை அழிக்க யாகத்தில் மாபெரும் அக்னி வந்தது அதிசயமாக தெரிந்தாலும். தீயாகவும் தீயை வளர்க்க யாகத்தில் இடும் பொருட்களாகவும் அந்த பொருளின் தன்மையாகவும் அதனை ஏற்று ஆவியாக்குபவனும் இறைவனே.

உட்கருத்து:

உயிர்கள் நல்செயல்கள் செய்தால் நல்வினைகள் கிடைத்து சிவனின் அருளும், தீய செயல்கள் செய்தால் தீவினைகள் சேர்ந்து அதற்கான தண்டனைகளும் உயிருக்கு கிடைக்கும் இவை அனைத்திலும் சிவன் அணுவாய் கலந்திருப்பான். அனைத்தும் இறைவனே ஆவதால் நல்லவையானாலும் தீயவையானாலும் அவனின்றி எந்தச் செயலும் நிகழாது.

பாடல் #356: இரண்டாம் தந்திரம் – 4. தக்கன் வேள்வி (இறை அருளோடு செய்யும் வேள்வியின் தத்துவம்)

அப்பரி சேஅயன் மால்முதல் தேவர்கள்
அப்பரி சேஅவ ராகிய காரணம்
அப்பரி சேஅங்கி யுள்நாளும் உள்ளிட்டு
அப்பரி சேஆகி அலர்ந்திருந் தானே.

விளக்கம்:

தக்கன் செய்த யாகத்தில் அவிர்பாகத்தைப் பரிசாகப் பெற்ற பிரம்மன் திருமால் மற்றும் அனைத்து தேவர்களும் இறைவனே தாமாக இருக்கும் காரணத்தை அறிந்து தமது அறியாமையால் பிழை செய்துவிட்டோமே என்று வருந்தி அவனது திருவருளை வேண்டி நின்றனர். அக்கினிதேவனும் தமக்குள் தீயாகவும் ஒளியாகவும் வெப்பமாகவும் என்னாளும் இருப்பவன் இறைவனே என்பதை உணர்ந்து அவனது திருவருளை வேண்டி நின்றான். அவர்களின் வேண்டுதலை ஏற்ற இறைவனும் அனைவரின் பிழைகளை மன்னித்து ஒளிமயமாகி எங்கும் வியாபித்து இருந்தான்.

உட்கருத்து:

உயிர்கள் அறியாமையால் செய்யும் தவறுகளிலும் அணுவாய் கலந்திருக்கும் இறைவன் உயிர்கள் தன் தவறை உணரும் போது அவர்களை மன்னித்து அருள்செய்வான்.

பாடல் #357: இரண்டாம் தந்திரம் - 4. தக்கன் வேள்வி [இறை அருளோடு செய்யும் வேள்வியின் தத்துவம்]

அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக்
குலந்தரும் கீழங்கி கோளுற நோக்கிச்
சிவந்த பரமிது சென்று கதுவ
உவந்த பெருவழி யோடிவந் தானே.

விளக்கம்:

பாடல் #356 ல் உள்ளபடி அனைவரின் பிழைகளை மன்னித்து எங்கும் ஒளிமயமாகி வியாபித்து இருக்கும் சிவபெருமானை வானவர்கள் வணங்க அழுக்குகளையெல்லாம் எரித்து எதையும் தூய்மையாக்கும் அக்கினி தக்கன் யாகத்தில் கலந்து கொண்டு தூய்மை கெட்டதால் தன் குற்றம் நீங்க சிவனின் திருவடிகளை பற்றிக்கொள்ள சிவனும் அன்போடு அக்னிக்கு அருள் செய்ய ஓடிவந்தான்.

உட்கருத்து:

உயிர்கள் அறியாமையால் செய்யும் தவறுகளை உணர்ந்து தன்னை திருத்திக்கொண்டு அந்த தவறில் அணுவாய் கலந்திருக்கும் இறைவனின் திருவடிகளை நினைத்து உள்ளத்தில் பற்றிக்கொள்ள இறைவன் அன்போடு அவர்களுக்கு அருள் செய்ய ஓடிவருவான்.

பாடல் #358: இரண்டாம் தந்திரம் – 4. தக்கன் வேள்வி (இறை அருளோடு செய்யும் வேள்வியின் தத்துவம்)

அரிபிர மன்தக்கன் அருக்க னுடன்
வருமதி வாலை வன்னிநல் இந்திரன்
சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்
அரனருள் இன்றி அழிந்தநல் லோரே.

விளக்கம்:

திருமால், பிரம்மன், தக்கன், சூரியன் அவனுடன் வரும் சந்திரன், சரஸ்வதி, அக்கினி, தேவர் தலைவனாகிய இந்திரன் ஆகிய தேவர்களின் தலை, முகம், மூக்கு, சிறப்பான கைகள் அவற்றைத் தாங்கும் தோள்கள் இறைவனின் அருள் இன்றி அறியாமையில் தக்கன் செய்த யாகத்தில் கலந்து கொண்டதனால் இறைவனின் சினத்தினால் அழிந்தது. பிறகு தமது பிழை உணர்ந்து இறைவனை வேண்டி அவற்றினைத் திரும்ப நலமுடன் பெற்றார்கள்.

உட்கருத்து:

பாடல் #357ல் உள்ள உட்கருத்தின் படி அறியாமையால் செய்யும் தவறுகளை உணர்ந்து தன்னை திருத்திக்கொண்டு இறைவன் அருள் பெற்ற உயிர்கள் இறைவனை அடையும் வழிகளான பக்தி, யோக, கர்ம, யோகம் போன்ற மார்கங்களை மீண்டும் இறையருளால் செய்து இறைவனை அடையலாம்.

பாடல் #359: இரண்டாம் தந்திரம் - 4. தக்கன் வேள்வி (இறை அருளோடு செய்யும் வேள்வியின் தத்துவம்)

செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்தவத் தேவர்
அவிமந் திரத்தின் அடுக்களை கோலிச்
செவிமந் திரஞ்செய்து தாமுற நோக்குங்
குவிமந் திரம்கொல் கொடியது வாமே.

விளக்கம்:

இறைவனுக்காக மந்திரங்களை செபித்து இறையருள் பெற்ற தேவர்கள் தக்கனின் யாகத்தில் இறையருள் இல்லாத மந்திரங்களை சொல்லி தங்களுக்குப் பெரும் பொருள் கிடைக்கும் நோக்கத்திலேயே குறியாக இருந்து செய்து குவித்த மந்திரங்கள் இறைவனது அருள் பெறாமல் செய்யப்பட்டமையால் அவர்களையே கொல்லும் கொடிய மந்திரங்களாக மாறிவிட்டன.

உட்கருத்து:

உயிர்கள் வேள்வி போல் செய்யும் செயல்கள் யாவும் இறையருளுடன் செய்தால் அவர்களை நல்வழிக்கு அழைத்துச் செல்லும் உலக ஆசைக்காக இறையருள் இல்லாமல் செய்யும் செயல்கள் யாவும் அவர்களுக்கு தீமைகளையே செய்யும்.

பாடல் #360: இரண்டாம் தந்திரம் – 4. தக்கன் வேள்வி [இறை அருளோடு செய்யும் வேள்வியின் தத்துவம்]

நல்லார் நவகுண்டம் ஒன்பதும் இன்புறப்
பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென
வில்லாற் புரத்தை விளங்கெரி கோத்தவன்
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே.

விளக்கம்:

இறைவனின் அருள் வேண்டி வேள்விகள் அமைத்து தம்மை வணங்கும் நல்லவர்கள் அனைவரும் அனைத்துவித நலன்களும் பெற்று வாழ தயைகூர்ந்து அருள் புரியுமாறு பலகோடி தேவர்கள் அனைவரும் இறைவனை வேண்டிக்கொள்ள யாராலும் அழிக்க முடியாத அசுரர்களையும் அவர்களின் முப்புரங்களையும் வில்லேந்தி அம்புகொண்டு எரித்த எம்பெருமானும் கருணைகொண்டு உயிர்களை வாட்டும் பல கொடிய அசுரர்களையும் அழிக்கும் வலிமையை அவர்களுக்கு வழங்கி அருளினான்.

உட்கருத்து:

உயிர்கள் எந்த செயலைச் செய்தாலும் மனம், வாக்கு, உடம்பு ஆகிய மூன்றும் ஒன்றாக வைத்து இறைவனை மட்டுமே நினைத்து அவனது திருவருளை கொடுக்குமாறு வேண்டிக்கொண்டு இறை அருள் பெற்று செய்தால் எத்தகைய வேலையையும் செய்யத்தடையாக இருப்பவற்றை அழிக்கும் சக்தியை இறைவன் உயிர்களுக்கு அருளுவான்.

பாடல் #361: இரண்டாம் தந்திரம் - 4. தக்கன் வேள்வி [இறை அருளோடு செய்யும் வேள்வியின் தத்துவம்]

தெளிந்தார் கலங்கினும் நீகலங் காதே
அளிந்தாங் கடைவதெம் ஆதிப் பிரானை
விளிந்தா னதுதக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங் கருள்செய்த தூய்மொழி யானே.

விளக்கம்:

இறையருள் இல்லாத தக்கன் செய்த வேள்வியில் கலந்து கொண்டு பின்பு இறைவனின் கோபத்திற்குள்ளாகி இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டு அனைத்தும் இறைவனே என்று புரிந்துகொண்ட தேவர்கள் இப்படி ஒரு பிழை செய்துவிட்டோமே என்று கலங்கி இருக்கும் போது தேவர்களே நீங்கள் கலங்க வேண்டாம். இறைவன் மேல் உண்மையான அன்பு வைத்தவர்கள் அனைவருமே சென்று சேருமிடம் அவரது திருவடிகளே. தக்கனது வேள்வியை அழித்தது அவனது அறியாமையை நீக்கி அவனை ஆட்கொள்ள வேண்டும் என்ற கருணையினால்தான். தூய்மையான வாக்கை உடைய இறைவன் எது செய்தாலும் அது உயிர்களின் நன்மைக்கே ஆகும்.

உட்கருத்து:

உயிர்கள் மனம், வாக்கு, உடல் ஆகிய மூன்றையும் ஒன்றாக வைத்து இறைவனை வேண்டி இறையருளோடு பல செயல்களைச் செய்தாலும் சில சமயங்களில் அவை தோல்வியடைவதைக் கண்டு மனம் கலங்க வேண்டாம். அவை தோல்வியடைவதும் உயிர்கள் மீது இருக்கும் இறைவனது மாபெரும் கருணையினால்தான். அதற்கும் பின்னால் இறைவன் அடியவருக்கு வழங்கும் அருள் இருக்கும்.

பாடல் #362: இரண்டாம் தந்திரம் – 5. பிரளயம்

கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்
திருவருங் கோவென் றிகல இறைவன்
ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி
அருவரை யாய்நின் றருள் புரிந் தானே.

விளக்கம்:

பிரளய வெள்ளத்தில் பெரிய மலைகளும் நீரில் மூழ்கின. உலகெங்கும் படைத்தல் தொழில் நின்றது. அந்நேரத்தில் பிரமனும் திருமாலும் தங்கள் கடமையை செய்யாமல் யாமே தலைவர் என்று ஒருவருக்கொருவர் மாறுபட்டு கூறிக்கொண்டனர். சதாசிவமூர்த்தியான இறைவன் பேரொளி மிகுந்த நெருப்பு மலையாக நின்று வெள்ள நீரெல்லாம் வற்றச் செய்தான். சதாசிவமூர்த்தியின் ஆற்றலைக் கண்ட பிரமனும் திருமாலும் தலைவன் யார் என்பதை உணர்ந்தார்கள். தம் தவற்றை உணர்ந்த அவர்களுக்கு சதாசிவமூர்த்தி நெருப்பு மலையாக நின்று அருள் செய்தார்.



பாடல் #363: இரண்டாம் தந்திரம் – 5. பிரளயம்

அலைகடல் ஊடறுத் தண்டத்து வானோர்
தலைவன் எனும்பெயர் தான்றலை மேற்கொண்
டுலகார் அழலைக்கண் டுள்வீழா தோடி
அலைவாயில் வீழாமல் அஞ்சலென் றானே.

விளக்கம்

பாடல் #362ல் உள்ளபடி பேரொளி மிகுந்த நெருப்பு மலையாக இருந்த சதாசிவமூர்த்தி கடலை உடுறுவி கீழையும் வானத்தை ஊடுறுவி மேலேயும் இருந்து வானவர்கள் அனைவருக்கும் தலைவன் என்னும் பெயர் பெற்று உலகம் முழுவதும் நிறைந்த ஊழித்தீயில் உலக மக்கள் நெருப்புப் பிழம்பைப் பார்த்துப் பயந்து வெள்ள நீரில் விழுந்து விடாதபடிக்கு யாரும் அஞ்சாதீர்கள் என்று கூறி அருள் செய்தான்.



பாடல் #364: இரண்டாம் தந்திரம் - 5. பிரளயம்

தண்கடல் விட்ட தமரருந் தேவரும்
எண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சுவர்
விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்
கண்கடல் செய்யுங் கருத்துஅறி யாரே.

விளக்கம்

உலகம் முழுவதும் நிறைந்து இருந்த குளிர்ந்த பிரளய கடல் நீர் வடிந்தது. வானகத்தவர்களும், தேவர்களும் கடல் போன்ற எங்கள் எண்ணங்களில் சிவத்தைப் பற்றிய நினைவே வெள்ளம் போல சூழ்ந்து இருக்க வேண்டும் என்று வேண்டினார்கள். கடல்நீரை விண்ணகம் வரை பரவச் செய்த இறைவனும் கடைக்கண் பார்வையால் அருள் புரிந்து பேரொளியாய் எழுந்தருளினன். இத்தகைய பிரளயத்தை ஏற்படுத்தி பின்பு அனைவருக்கும் அருள் செய்த இறைவன் திருவுள்ளத்தை யாரும் அறியவில்லை.



பாடல் #365: இரண்டாம் தந்திரம் – 5. பிரளயம்

சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே
திகைத்ததெண் ணீரிற் கடலொலி யோசை
மிகைக்கொள அங்கி மிகாமைவைத் தானே.

விளக்கம்:

பிரளயத்தின் போது எழுந்த கடலோசையைக் கேட்ட உலகத்தவர் திகைத்துப் போனார்கள். அங்கு பேரோளி மிகுந்த நெருப்பு மலையாக இருந்த சதாசிவமூர்த்தியை அனைத்தையும் படைத்து சுயம்புவாய் தோன்றியவனே என்று இறைவனை மனதில் வைத்து வழிபட்ட உலகத்தில் உள்ள உயிர்களுக்காக கடல்நீர் வெள்ளம் கடலோசை மேலும் அதிகரிக்காமல் இருக்க அந்த நீரில் அக்னியை உண்டாக்கினார் இறைவன்.

உட்கருத்து:

பிரளயத்தை ஏற்படுத்தி அனைத்தையும் அழித்த இறைவன் தன்னை வழிபட்டு சரணடைந்த உயிர்களை காப்பாற்றினார்.

பாடல் #366: இரண்டாம் தந்திரம் - 5. பிரளயம்

பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்
விண்பழி யாத விருத்தியைக்கொண் டானே.

விளக்கம்:

இறைவனை ஏற்காமல் அவரை குற்றப்படுத்தும் வழிகளைப் பின்பற்றி நடக்கும் உயிர்களை பிரளய காலத்தில் மாபெரும் அழிவிலிருந்து காப்பாற்ற தன் மேல் உண்மையான அன்பை வைக்க முடியாதபடி அந்த உயிர்களின் தலையின் உச்சியில் இருந்து ஆட்சி செய்யும் ஆணவத்தை அழித்து அவர்களையும் ஆட்கொண்டு விண்ணுலகத் தேவர்களும் குற்றம் கூற முடியாதபடி புதிய உலகங்களையும் உயிர்களையும் உருவாக்கினான்.

உட்கருத்து:

பிரளய காலத்தில் தம் மீது அன்புகொண்ட அடியவர்களை மட்டுமே காப்பாற்றுவான் என்று இல்லாமல் தம்மை பழிக்கும் உயிர்களையும் காப்பாற்றும் பெரும் கருணை கொண்டவன் இறைவன். பிரளய காலத்தில் தம் மீது அன்பு கொள்ளாத பிற உயிர்களின் தலையில் இருக்கும் அகங்காரம் ஆணவத்தை அழித்து அந்த உயிர்களையும் ஆட்கொண்டு அருளும் இறைவன் பிறகு புதியதாக உலகங்களையும் உயிர்களையும் உருவாக்கி அருளுகின்றான்.



பாடல் #367: இரண்டாம் தந்திரம் – 6. சக்கரப் பேறு [சக்கரத்தின் தத்துவம்]

மால்போ தகனென்னும் வண்மைக்கிங் காங்காரங்
கால்போதம் கையினோ டந்தரச் சக்கர
மேல்போக வெள்ளி மலைஅம ராபதி
பார்ப்போக மேழும் படைத்துடை யானே.

விளக்கம்:

திருக்கயிலாய வெள்ளி மலையின் மீது அமர்ந்திருக்கும் பிறப்பு இறப்பு இல்லாத இறைவன். ஏழு உலகங்களை படைத்து அந்த உலக தொழில்கள் சீராக நடைபெற திருமாலுக்கு கை பெருவிரலினை ஒட்டி அந்தரத்தில் பறப்பது போல் சக்கரம் தந்து அருளினான். இவ்வுலக தொழில்கள் சீராக நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அகங்காரத்தினால் ஏதேனும் தடை ஏற்பட்டால் திருமால் தனது சக்கராயுதத்தால் அகங்காரத்தை அழித்து இவ்வுலகைக் காப்பான்.

பாடல் #368: இரண்டாம் தந்திரம் – 6. சக்கரப் பேறு [சக்கரத்தின் தத்துவம்]

சக்கரம் பெற்றுநல் தாமோ தரன்தானும்
சக்கரந் தன்னைத் தரிக்கஒண் ணாமையால்
மிக்கரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்கநற் சக்தியைத் தான்கூறு செய்ததே.

விளக்கம்:

பாடல் #367ல் உள்ளபடி இறைவனிடம் பெற்ற உலகைக்காக்கும் வலிமை மிக்க சக்கரத்தை தனது கரத்தில் தாங்கும் சக்தி இல்லாததால் திருமால் அனைத்திலும் மேலான வலிமையுடைய இறைவனை அன்புடன் அர்ச்சனை செய்து வேண்டிக்கொள்ள அவனது வேண்டுதலுக்கு மனமிறங்கிய இறைவனும் தனது சக்தியிலிருந்து ஒரு பகுதியை திருமாலுக்குக் கொடுத்து சக்கரத்தைத் தாங்கும் வல்லமை பெறச்செய்து அருளினான்.

பாடல் #369: இரண்டாம் தந்திரம் - 6. சக்கரப் பேறு (சக்கரத்தின் தத்துவம்)

கூறது வாகக் குறித்துநற் சக்கரம்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சக்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே.

விளக்கம்:

உலகைக்காத்து உலகத்தொழில்கள் சீராக நடைபெற இறைவன் தனது ஆற்றலின் ஒரு பகுதியில் சக்கரத்தை படைத்தார். தனது ஆற்றலின் ஒரு பகுதியான சக்கரத்தை திருமாலுக்கு கொடுத்தாருளினார். திருமால் அந்த சக்கரத்தை தாங்கும் வலிமை பெறுவதற்காக தமது சக்தியிலிருந்து ஒரு பகுதியையே கொடுத்து அருளினார். தனது ஆற்றலின் ஒரு பகுதியாக இருந்த சக்கரமும் அதன் சக்தியையும் திருமாலுக்கு கொடுத்தாலும் சக்கரமும் அதன் சக்தியாகவும் இருப்பவர் இறைவனே.

பாடல் #370: இரண்டாம் தந்திரம் - 6. சக்கரப் பேறு (சக்கரத்தின் தத்துவம்)

தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பால்
தக்கன்றன் வேள்வியில் தாமோ தரன்தானும்
சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட
அக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே.

விளக்கம்:

அறியாமையால் இறைவனை அழிக்க தக்கன் செய்த பெரிய வேள்வியை இறைவனின் அவதாரமான வீரபத்திரர் அழித்துத் தகர்த்தார். அப்போது வந்திருந்த திருமால் பிறை சந்திரனைச் சூடியிருக்கும் வீரபத்திரர் இறைவனின் அவதாரம் என்பதை உணராமல் வேள்வியை முறையின்றி அழித்துவிட்டதாக எண்ணி சக்கராயுதத்தை வீரபத்திரரின் பிறை சூடிய தலையை நோக்கி ஏவினான். அதைப் பார்த்த வீரபத்திரர் தமது கண்களில் நெருப்பு உமிழ அந்தச் சக்கரத்தைப் பார்த்து வாயிலிந்து ஒரு உக்கிர மிரட்டல் விட சக்கரம் வலுவிழந்து கீழே விழுந்தது.

குறிப்பு:

பாடல் #369 ல் உள்ளபடி தனது ஆற்றலின் ஒரு பகுதியாக இருந்த சக்கரமும் அதன் சக்தியையும் திருமாலுக்கு கொடுத்தாலும் சக்கரமும் அதன் சக்தியாகவும் இருப்பவர் இறைவனே ஆகையால் இறைவனின் அவதாரமாய் இருந்த வீரபத்திரின் கட்டளைக்கிணங்க சக்கரம் வலுவிழந்து கீழே விழுந்தது.

பாடல் #371: இரண்டாம் தந்திரம் - 7. எலும்பும் கபாலமும் (இறைவன் அணிந்திருக்கும் எலும்பும் கபாலமும் தத்துவம்)

எலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம்பன் மணிமுடி வானவ ராதி
எலும்புங் கபாலமும் ஏந்தில னாகில்
எலும்புங் கபாலமும் இற்றுமண் ணாமே.

விளக்கம்:

ஊழிக்காலத்தில் மனித உடலின் எலும்புகளையும் மண்டையோடுகளையும் மாலையாகத் தரித்து எழுந்தருளும் இறைவன் வீரர்களுக்கெல்லாம் மிகச் சிறந்த வீரனும் மணிமுடி சூடிய விண்ணுலகத் தேவர்களுக்கெல்லாம் முதன்மையானவனும் ஆவான். ஊழிக்காலத்தில் இறைவன் மானிட உடலின் எலும்புகளையும் மண்டையோடுகளையும் ஏந்தி நிற்கவில்லை என்றால் அனைத்து உயிர்களின் எலும்புகளும் மண்டையோடுகளும் மண்ணோடு மண்ணாக மக்கிப் போய் அழிந்துவிடும்.

உட்கருத்து:

ஊழிக்காலத்தில் (பிரளயம்) உயிர்கள் மொத்தமாக சுவடின்றி மண்ணோடு மண்ணாக அழிந்து போய்விடாமல் காக்கும் மாபெரும் கருணையினால் இறைவனே மனித உடலின் எலும்புகளையும் மண்டையோடுகளையும் தாங்கி நிற்கின்றான். அப்படி அவன் நிற்கவில்லையெனில் உயிர்களின் சுவடுகூட மிஞ்சாது மொத்த உலகமும் அழிந்துபோய்விடும்.

பாடல் #372: இரண்டாம் தந்திரம் - 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றாரே.

விளக்கம்:

பிரளயம் முடிந்து புதிய உலகங்கள் உருவாகிய காலத்தில் உலகங்களில் எல்லாம் புதிய உயிர்களைப் படைப்பதால் தாமே இறைவன் என்று பிரம்மனும் அந்த உயிர்களை எல்லாம் காப்பதால் தாமே இறைவன் என்று திருமாலும் அறியாமையால் ஒருவருக்கொருவர் எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அப்போது இறைவன் அவர்களின் முன்பு ஒரு மாபெரும் தீப்பிழம்பாக வந்து நின்று இப்பிழம்பின் அடி அல்லது உச்சியைக் காணுபவரே இறைவன் என்று கூற இருவரும் தீப்பிழம்பின் அடியையோ உச்சியையோ காண இயலாமல் புலம்ப ஆரம்பித்தனர்.

பாடல் #373: இரண்டாம் தந்திரம் – 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

ஆமே ழுலகுற நின்றஎம் அண்ணலும்
தாமே ழுலகில் தழற்பிழம் பாய்நிற்கும்
வானே ழுலகுறு மாமணி கண்டனை
நானே அறிந்தேன் அவனாண்மையி னாலே.

விளக்கம்:

பிரம்மனும் திருமாலும் அடியையோ உச்சியையோ காண முடியாத அளவிற்கு ஈரேழு பதினான்கு உலகங்களையும் கடந்து நிற்கின்றான் எம்பெருமான் சதாசிவமூர்த்தி. அவன் தாமாகவே ஏழுலகிற்கும் தீப்பிழம்பாக நிற்கின்றான். ஏழுலகமும் வியாபித்திருக்கும் வானத்திலும் மாபெரும் ஒளிப்பிழம்பாக ஊடுருவி நிற்பவன் நீலநிறமடைந்த கழுத்தை உடைய சிவபெருமான். இறைவன் என்னை ஆட்கொண்ட இறைதன்மையாலே நானும் இதை அறிந்தேன்.

பாடல் #374: இரண்டாம் தந்திரம் – 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய்முன்னம்
சேணாய்வா னோங்கி திருவுரு வாய்அண்டத்
தாணுவும் ஞாயிறும் தண்மதி யுங்கடந்
தாண்முழுது அண்டமு மாகிநின் றானே.

விளக்கம்:

சதாசிவமூர்த்தியாகிய இறைவன் ஒருவனே அனைத்து உயிர்களின் உடம்பாகவும், உயிராகவும், உணர்வாகவும், உள்ளிருக்கும் நெருப்பாகவும், மண்ணுக்கும் விண்ணுக்கும் ஓங்கி நின்ற தீப்பிழம்பு உருவமாகவும், அண்டங்கள் அனைத்தையும் தாங்கி நிற்கும் தூணாகவும், சூரியனாகவும், குளிர்ந்த சந்திரனாகவும் பரவி இருக்கின்ற அண்டங்கள் மொத்தமும் தாமாகவும் நிற்கின்றான்.

பாடல் #375: இரண்டாம் தந்திரம் – 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

நின்றான் நிலமுழு தண்டத்துள் நீளியன்
அன்றே யவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றார் இருவர் திருமுடி மேற்செல
நன்றுஆங் கழலடி நாடஒண் ணாதே.

விளக்கம்:

மண்ணுலகிலிருந்து அண்டங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு விண்ணுலகமும் தாண்டி நீண்டு வளர்ந்த தீப்பிழம்பாக நின்றான் சதாசிவமூர்த்தி. அவனது அக்னி உருவத்தை ஆராய முற்பட்டு பிரம்மன் இறைவனின் திருமுடியைக் காணவும் திருமால் இறைவனின் திருவடியைக் காணவும் சென்றனர். பிரம்மன் மேல் செல்ல செல்ல இறைவனின் திருமுடி மேலே வளர்ந்து கொண்டே இருக்க திருமால் கீழே செல்ல செல்ல நன்மையை அருளும் இறைவனின் கழல்கள் அணிந்த திருவடி கீழே வளர்ந்து கொண்டே இருந்து இருவருக்கும் எதையும் காண இயலவில்லை.

உள்விளக்கம்:

இறைவனை உணர்ந்தால் இறைவன் எந்த ரூபத்தில் இருந்தாலும் இறைவனை அறியலாம். இறைவனை ஆராய்ச்சி செய்து தெரிந்து கொள்ள முயன்றால் அவரை அறிய இயலாது.

பாடல் #376: இரண்டாம் தந்திரம் – 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றவனும் முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனும்
தாவடி யிட்டுத் தலைப்புஎய்து மாறே.

விளக்கம்:

இறைவனின் சிவந்த திருவடிகளை போற்றி வணங்கும் பலகோடி தேவர்களும் மாபலியிடம் மூன்று அடி நிலம் தா என்று கேட்டு வென்ற திருமாலும் இறைவனிடம் அருள் வேண்டி தவமிருக்கும் முனிவர்களும் இறைவன் வகுத்துக்கொடுத்த வேதங்களை ஓதி உயிர்களைப் படைக்கும் பிரம்மனும் எவ்வளவு தூரம் தான் அலைந்து தேடினாலும் இறைவனின் திருவடிகளையோ திருமுடியையோ காண இயலாது.

உள்விளக்கம்:

தேவர்கள், முனிவர்கள், திருமால், பிரம்மா என்று எவ்வளவு உயர்ந்த இறைநிலையில் இருந்தாலும் நானே செய்கிறேன் என்ற எண்ணத்துடன் இறைவனை தனக்குள் உணராமல் வெளியில் தேடினால் இறைவனை காண இயலாது.

பாடல் #377: இரண்டாம் தந்திரம் – 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

தானக் கமலத் திருந்த சதுமுகன்
தானக் கருங்கட லூழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொருள் தன்மையது ஆமே.

விளக்கம்:

நான்கு முகங்களோடு தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்டு அமர்ந்திருக்கும் பிரம்மனும், கருமையான நிறத்தோடு பாற்கடலை இருப்பிடமாகக் கொண்டு படுத்திருக்கும் திருமாலும் ஊழிக்காலத்தில் அழிவின் தலைவனாக இருக்கும் உருத்திரனும் உயிர்களின் உடலாகவும் உயிராகவும், உயிரின் உணர்வாகவும் உயிர்களுடனே கலந்து இருக்கும் மாபெரும் பரம்பொருளாகிய சதாசிவமூர்த்தியின் தன்மையை ஒத்தவர்கள் ஆக முடியாது.

பாடல் #378: இரண்டாம் தந்திரம் – 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்டு
ஆலிங் கனஞ்செய் துலகம் வலம்வரும்
கோலிங்கு அமைஞ்சருள் கூடலு மாமே.

விளக்கம்:

அண்டங்கள் அனைத்தலும் இரண்டறக்கலந்து எழுந்து நின்ற மாபெரும் தீப்பிழம்பான பரம்பொருள் உயிர்கள் தம்மை நாடி வந்து சேர பெருங்கருணை கொண்டு உண்மையான வழிமுறைகளை கொடுத்து உலகத்துப்பொருட்கள் எல்லாவற்றிலும் கலந்து உலா வருகிறது. இறைவனை அடையவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் அந்த உண்மையான வழிமுறைகளை பின்பற்றினால் எல்லாவற்றிலும் கலந்திருக்கும் அடிமுடி காண முடியாத பரம்பொருள் இறைவனை உணரலாம்.

உட்கருத்து:

அடிமுடி காண முடியாத அளவு மிகப்பெரும் மகோன்னதம் மிக்கவனாக இறைவன் காட்டிய நெறி வழிகளைப் பின்பற்றி சென்றால் எல்லாவற்றிலும் கலந்திருக்கும் அடிமுடி காண முடியாத பரம்பொருள் இறைவனை உணரலாம்.



பாடல் #379: இரண்டாம் தந்திரம் - 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போல் அரனை அறிகிலர்
ஆள்கொடுத் தின்பமுங் கொடுத்துக் கோளாகத்
தாள்கொடுத் தானதடி சாரகி லாரே.

விளக்கம்:

ஒளிபொருந்திய உடலைக் கொடுத்த இறைவனை வழிபடுகின்ற தேவர்கள் எம்மைப் போல இறைவனிடம் தம்மையே ஒப்படைத்தாலும் இறைவனின் தன்மையை அறிய மாட்டார்கள். இறைவனிடம் தன்னைக் கொடுத்தால் இறைவனை அறியலாம். தன்னைக் கொடுத்தவர்க்கு இறைவனும் தன்னையும் தந்து பேரின்பத்தையும் தருவான். அந்த இன்பத்திலேயே மூழ்கித் தம்மை மறந்துவிடாதபடி வலிமை பெறும் பொருட்டு தம் திருவடியையும் தருகிறான் இறைவன். ஆனால் தேவர்கள் யாம் இறைவனின் திருவடியை சார்ந்திருப்பதைப்போல தேவர்கள் இறைவனின் திருவடியைச் சார்ந்திருக்கவில்லை.

பாடல் #380: இரண்டாம் தந்திரம் – 8. அடிமுடி தேடல் [இறைவனது மகோன்னதம்]

ஊழி வலஞ்செய்தங் கோரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென
ஊழிக் கதிரவன் ஒளியைவென் றானே.

விளக்கம்:

ஊழிக்காலம் முடிந்ததும் இறைவனை சரணடைந்து ஒளி உடலோடு வாழும் அடியவர்களில் ஒருவரை நான்கு முகங்கள் கொண்டு படைத்தல் தொழில் புரியும் பிரம்மனின் தொழிலை செய்ய இறைவன் தேர்ந்தெடுக்கின்றான். புதியதாக பிரம்மனின் தொழில் பெற்ற அடியவரும் இறைவனை நாடி வந்து என்ன வேலை செய்ய வேண்டும் என்று அதைத் தந்தருளுங்கள் என்று வேண்டிக்கொள்ள ஊழிக்காலத்தில் அனைத்தையும் சுட்டெரிக்கும் சூரியனையும் மிஞ்சி நிற்கும் மாபெரும் ஒளியாகிய இறைவனும் அவருக்கு படைக்கும் தொழிலைக் கொடுத்து அருளினான்.

குறிப்பு:

பிரம்மன் திருமால் மற்றும் உலக தொழில்கள் செய்யும் தேவர்கள் அனைவருமே பல காலமாக இறைவனின் அடியவர்களாக இருந்து தவம் புரிந்தவர்கள்தான். தற்போது இருக்கும் பிரம்மன் திருமால் மற்றும் உலக தொழில்கள் செய்யும் தேவர்களின் பதவிக்காலம் முடிந்ததும் அடுத்த அடியவர்களுக்கு அந்த தொழிலை செய்யும் தகுதி இறைவனது திருவருளால் கிடைத்ததும் அவர்களுக்கு ஏற்ற தொழிலை இறைவன் கொடுத்து அருளுகின்றார்.



பாடல் #381: இரண்டாம் தந்திரம் - 9. சர்வசிருஷ்டி [அண்டங்கள் அனைத்தும் உருவாகிய முறை]

ஆதியோ டந்தம் இலாத பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்
தீதில் பரையதன் பால்திகழ் நாதமே.

விளக்கம்:

முதலும் முடிவும் இல்லாத பரம்பொருள் அசையா சக்தியாகிய பராபரமாக இருக்கிறார். அறிவு வடிவாக இருக்கும் அந்த பராபரத்தில் உலகை படைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதும் அசையும் சக்தியாகிய பராபரை உருவாகிறது. அசையும் சக்தி உருவானதும் அதிலிருந்து சோதி உருவாகிறது. அந்த சோதியில் இருந்து ஒலி உருவாகிறது.

பாடல் #382: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி [அண்டங்கள் அனைத்தும் உருவாகிய முறை]

நாதத்தில் விந்துவும் நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவன்சத்தி என்றே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே.

விளக்கம்:

பாடல் #381 இல் உள்ளபடி பராபரையாகிய எண்ணத்தில் சுத்தமான ஒலியும் ஒளியும் இருக்கிறது. அந்த சுத்தமான ஒலி ஒளிக்கு சிவன் சக்தி என்று பெயர். அந்த பராபரையாகிய எண்ணம் ஒலி ஒளி என்று பிரிந்து இருப்பதற்கு காரணம் அசையாத அறிவு சக்தியில் இருந்து உலகை உருவாக்கும் செயல் சக்தி பிறப்பதற்காக. அசையாத அறிவு சக்தியில் அசைகின்ற எண்ண சக்தி கலக்க ஒலியும் ஒளியும் தோன்றுகிறது.

பாடல் #383: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி [அண்டங்கள் அனைத்தும் உருவாகிய முறை]

இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்
கல்லொளி போலக் கலந்துள் இருந்திடும்
வல்லது ஆக வழிசெய்த அப்பொருள்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே.

விளக்கம்:

ஒலியாய் இருக்கும் சிவத்தோடு எப்போதும் பிரியாமல் ஒளியாய் இருக்கும் சக்தி சேர்ந்தே இருக்கிறது. நவரத்தினத்தில் உள்ள வைரமும் அந்த வைரத்தில் இருந்து வரும் ஒளியும் வேறு வேறாய் அறியப்பட்டாலும் இரண்டும் ஒன்றே ஆகும். அது போல் சிவமும் சக்தியும் ஒன்றேவாகும். இப்படி இருக்கின்ற சிவசக்தியை உருவாக்கிய பரம்பொருளின் வலிமைகளை விளக்கிச் சொல்லினால் அது பலகாத தூரத்திற்கும் நீண்டு போய்க்கொண்டே இருக்குமே தவிர முடியாது.

பாடல் #384: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அண்டங்கள் அனைத்தும் உருவாகிய முறை)

தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்திஒரு சாத்துமா னாமே.

விளக்கம்:

வார்த்தைகளில் விவரிக்க இயலாத மாபெரும் வல்லமை பொருந்திய ஜோதி வடிவான இறைவன் அண்டம் முதல் அனைத்தையும் உருவாக்க எண்ணி தனது ஒரு கூறு சக்தியை சேர்ந்தே இருக்கும் ஒலிக்கும், ஒளிக்கும் கொடுத்து பஞ்ச பூதங்கள் முதல் உலகம் வரை அனைத்தையும் உருவாக்குகின்றான்.

பாடல் #385: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

மானின்கண் வானாகி வாயு வளர்ந்திடும்
கானின்கண் நீரும் கலந்து கடினமாய்த்
தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப்
பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே.

விளக்கம்:

ஜோதி வடிவான இறைவனின் மாபெரும் சக்தியிலிருந்து ஒளியும் ஒலியும் தோன்றி இரண்டும் கலந்து அதிலிருந்து ஆகாயம் உருவாகியது. ஆகாயத்திலிருந்து காற்று உருவாகியது. காற்றிலிருந்து வெப்பம் (நெருப்பு) உருவாகியது. வெப்பம் குளிர்ந்து நீர் உருவாகியது. இவை நான்கும் கலந்து நிலம் உருவாகியது. இவை ஐந்தும் முழுமையடைந்து உலகம் உருவாகியது. பூவுக்குள் கலந்திருக்கும் தேன் போல உலகங்களில் பஞ்சபூதங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் கலந்திருக்கிறது.

பாடல் #386: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி [அனைத்தும் உருவாகிய முறை]

புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்
புவனம் படைப்பானப் புண்ணியன் தானே.

விளக்கம்:

உலகங்களைப் படைப்பது ஒலியாகிய சிவமும் ஒளியாகிய சக்தியுமாகும். அந்த உலகங்களில் பல தொழில்களைப் புரிவதற்காக இவர்களின் சக்தியிலிருந்து தோன்றிய பிள்ளைகள் ஐந்து பேர். அவர்கள் உயிர்களைப் படைக்கும் பிரம்மன், உயிர்களைக் காக்கும் திருமால், உயிர்களை அழிக்கும் உருத்திரன், உயிர்களை மாயையால் மறைக்கும் மகேசுவரன், உயிர்களுக்கு அருளும் சதாசிவன் ஆகிய ஐந்து பேராவார்கள். அனைத்தையும் படைப்பதற்குக் காரணமான சதாசிவமூர்த்தியே ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலரில் வீற்றிருந்து உலகங்கள் அனைத்துமாகவும் அதிலிருக்கும் உயிர்கள் அனைத்துமாகவும் இருக்கின்றான்.

பாடல் #387: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

புண்ணியன் நந்தி பொருந்தி உலகெங்கும்
தண்ணிய மானை வளர்த்திடும் சத்தியும்
கண்ணியல் பாகக் கலவி முழுதுமாய்
மண்ணியல் பாக மலர்ந்தெழு பூவிலே.

விளக்கம்:

குளிர்ந்த நீரையும், மண்ணையும் படைத்து அதற்கான தன்மைகளை குருவாக இருந்து சதாசிவமூர்த்தி கொடுக்கின்றார். அதன் மூலம் நல்வினைகளை அருளி சதாசிவமூர்த்தியுடன் ஒன்றாகச் சேர்ந்து உலகங்கள் அனைத்திலும் நீரையும் மண்ணையும் சக்தி வளர்க்கின்றாள். சதாசிவமூர்த்தியின் அசையும் சக்தியான எண்ணத்திலே உதித்த கருத்தானது சிவத்துடன் கலந்து மண்ணாகவும் சக்தியோடு கலந்து நீராகவும் இரண்டும் கலந்து உலகங்களாகவும் மாறுகின்றது. இதில் சிவமும் சக்தியும் மலரில் கலந்திருக்கும் வாசனை போல உலகமெங்கும் ஒன்றாகக் கலந்தே இருக்கின்றனர்.

பாடல் #388: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை
காயத்திற் சோதி பிறக்கும்அக் காற்றிடை
ஓர்வுடை நல்லுயிர்ப் பாதம் ஒலிசத்தி
நீரிடை மண்ணின் நிலைப்பிறப்பு ஆமே.

விளக்கம்:

இறைவனது தன்மையானது பஞ்ச பூதங்களில் நீரில் சுவையாகவும் நெருப்பில் ஒளியாகவும் காற்றில் உணர்வாகவும், ஆகாயத்தில் ஒலியாகவும் நிலத்தில் உடல் சார்ந்த உயிர்களாகவும் பிறந்து இருக்கின்றது.

உட்கருத்து:

பஞ்ச பூதங்கள் ஐந்தும் இறைவனது பண்புகளில் இருந்து உருவானவையே. உலகங்கள் அனைத்தும் இவற்றில் அடக்கம்.

பாடல் #389: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனாகி
அண்டத் தமரர் தலைவனும் ஆதியும்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னொடும்
பண்டுஇவ் வுலகம் படைக்கும் பொருளே.

விளக்கம்:

ஏழு உலகங்களையும் காப்பாற்றி பிறகு வெளிப்படுத்திய திருமால், அண்டங்கள் அனைத்திலும் இருக்கின்ற தேவர்களின் தலைவனாகவும் ஆதிமூல நாயகனாகவும் விளங்குகின்ற சிவபெருமான், கர்வத்தினால் தனது ஐந்து தலைகளில் ஒன்றை இறைவனால் கொய்யப்பட்டு நான்கு முகங்களை மட்டுமே கொண்டவனாகிய பிரம்மன் ஆகிய இந்த மூவருடனும் கலந்து இருந்து பழமை வாய்ந்த இந்த உலகங்கள் அனைத்தையும் படைக்கும் பரம்பொருள் சதாசிவமூர்த்தி ஒருவனே ஆவான்.

பாடல் #390: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

ஓங்கு பெருங்கடல் உள்ளுறு வானொடும்
பாங்குஆர் கயிலைப் பராபரன் தானும்
வீங்குங் கமல மலர்மிசை மேலயன்
ஆங்குஉயிர் வைக்கும் அதுவுணர்ந் தானே.

விளக்கம்:

ஓங்கிய பாற்கடலின் மேல் இருக்கும் திருமாலும், அழகிய கயிலை மலையின் மேல் இருக்கும் பரம்பொருளான சிவபெருமானும், மலர்ந்து விரிந்து இருக்கின்ற தாமரை மலரின் மேல் இருக்கும் பிரம்மனும், ஒவ்வொரு உயிருக்குள்ளும் ஆன்மாவை வைக்கின்ற மூலப் பொருளான சதாசிவமூர்த்தியை உணர்ந்து இருக்கின்றார்கள்.

உட்கருத்து:

பிரம்மன் படைத்தலும், திருமால் காத்தலும், சிவன் அழித்தலும் செய்யும் உயிர்கள் அனைத்திலும் ஆன்மாவாக இருப்பது சதாசிவமூர்த்தியே என்பதை மூவரும் உணர்ந்திருக்கின்றார்கள்.



பாடல் #391: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடுவுட லாய்நிற்கும்
பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரணனு மாய்உல காய்அமர்ந் தானே.

விளக்கம்:

அண்ட சராசரங்கள் அனைத்தும் உருவாகக் காரணமானவனாகிய சதாசிவமூர்த்தி அனைத்திலும் அன்பாகக் கலந்து இருக்கின்றான். அண்ட சராசரங்கள் அனைத்திலும் உடலாக இருக்கும் பொருட்கள் அனைத்தையும் தாங்கிக் காப்பாற்றி நிற்கும் திருமாலாகவும் அவனே இருக்கின்றான். அந்த அண்ட சராசரங்கள் அனைத்திலும் உயிர்களை அன்போடு வேதங்கள் ஓதி உருவாக்கும் நான்கு முகங்களைக் கொண்ட பிரம்மனாகவும் அவனே இருக்கின்றேன். அண்ட சராசரங்கள் அனைத்துமாகவும், அதிலிருக்கும் பொருட்களாகவும், அதில் வாழும் உயிர்களாகவும் இருந்து அன்பினால் கட்டி வைத்திருப்பவன் சதாசிவமூர்த்தியாகிய இறைவனே.



பாடல் #392: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

பயன்எளி தாம்பரு மாமணி செய்ய
நயன்எளி தாகிய நம்பன்ஒன் றுண்டு
அயன்ஒளி யாயிருந் தங்கே படைக்கும்
பயன்எளி தாம்வய ணந்தெளிந் தேனே.

விளக்கம்:

எல்லாப்பயன்களையும் எளிதில் அளிக்கக் கூடியதும் பேரின்பத்தை வழங்கக் கூடியதும் நம்பிக்கைக்கு உரியதுமான ஒரு மாணிக்ககல் இருக்கிறது. அந்தக் மாணிக்ககல்லே உயிர்களைப் படைக்கும் பிரம்மனுக்கு ஒளியாக இருந்து வழிகாட்டுகிறது. அந்த மாணிக்ககல்லாக இறைவன் இருக்கும் காரணத்தை யாம் அறிந்து தெளிந்து கொண்டோம்.



பாடல் #393: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்
தாக்கமுஞ் சிந்தைய தாகின்ற காலத்து
மேக்கு மிகநின்ற எட்டுத் திசையொடுந்
தாக்குங் கலக்குந் தயாபரன் தானே.

விளக்கம்

உலகத்தில் இருக்கும் அனைத்தையும் தனது அருளால் படைத்து காத்து பின்பு அழிக்கின்றான் இறைவன். இந்த மூன்று தொழிலையும் செய்யும் இறைவன் எதனாலும் பாதிக்காமல் புனிதனாக இருந்து எண்ணங்களுக்கு எட்டாத உயரத்தில் எட்டுத்திசைகளில் உள்ள எல்லாவற்றிலும் அவன் கலந்து பரவியிருக்கிறான்.

பாடல் #394: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

நின்றுயி ராக்கு நிமலன்என் னாருயிர்
ஒன்றுயி ராக்கும் அளவை உடலுற
முன்துய ராக்கும் உடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானே நடுவுநின் றானே.

விளக்கம் :

உடலில் ஆன்மாவை வைத்து உயிராக மாற்றுபவன் என் ஆருயிர் இறைவனே உயிர்களிடத்தில் கொண்ட மாபெரும் கருணையினால் உடலில் இணைந்த ஆன்மாவுடன் உயிராகக் கலந்து இருக்கின்றான். முன்பிறவியின் வினைகளைத் தீர்க்க வேண்டிப் பிறவி எடுத்த அந்த உயிரின் காலம் முடியும் வரை அந்த உயிர் செய்யும் எந்த செயலிலும் தலையிடாமல் நடு நிலையாக நின்று கவனித்துக் கொண்டு அந்த உயிர் வாழ வேண்டிய காலம் வரை அந்த உயிரின் உடலோடு ஒன்றாகக் கலந்து நன்றாகக் காத்துக் கொண்டு நிற்கின்றான் இறைவன்.



பாடல் #395: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

ஆகின்ற தன்மையி லக்கணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்துட லாயுளன்
ஆகின்ற தன்மைசெய் ஆண்டகை யானே.

விளக்கம் :

எலும்புகளை அணிந்து கொன்றை மலரைச் சூடியிருக்கும் சிவபெருமான் உலகத்தில் நிகழும் அனைத்து தொழிலின் தன்மையாக இருக்கின்றான். உருகுகின்ற தங்கம் போன்ற மினுமினுப்பான உடல் கொண்டவன் அவன். பிறவிக்கு செல்லும் உயிர்கள் வாழும் உடலாயும் இருக்கின்றான். பிறவி எடுத்த உயிருக்கு நிகழும் தன்மையிலும் அவனே கலந்திருந்து துணையாக இருப்பான்.

பாடல் #396: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்
பருவங்கள் தோறும் பயன்பல வான
திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே.

விளக்கம்:

பரம்பொருள் அனைத்தையும் உருவாக்க வேண்டும் என்கிற எண்ணத்தால் சிவமாகவும் சக்தியாகவும் வெளிப்பட்டு இருவரின் திருவிளையாடலால் அனைத்தும் உருவாகும். அப்படி உருவாகிய அனைத்தும் காலத்திற்கு ஏற்ற மாதிரியும் அவைகள் அடைந்த பக்குவத்திற்கு ஏற்ற மாதிரியும் பலவகையான வினைப் பயன்களைப் பெறும். எப்போது இறைவனது திருவிளையாட்டால் உருவாகிய ஒன்று இறைவனிடமே சென்று சேர்கின்றதோ அப்போது அதன் உலக வாழ்க்கை முற்றுப் பெற்றுவிடும்.

உட்கருத்து:

உலகத்தில் அனைத்தும் இறைவனது திருவிளையாட்டால்தான் உருவாகின்றது. அவை பிறந்து, வாழ்ந்து, இறந்து மீண்டும் பிறக்கும் உலகச் சுழற்சி அந்தந்த ஆன்மாக்களின் காலத்திற்கு ஏற்ற பக்குவத்தைப் பொறுத்து வினைப் பயனாக அமையும். எப்போது இறைவனிடமிருந்து வெளிவந்த ஆன்மா அதன் வினைப் பயன் முழுவதையும் கழித்து இறைவனிடமே சென்று கலந்து விடுகின்றதோ அப்போது அதன் உலகச் சுழற்சி முற்றுப் பெற்றுவிடுகிறது.

பாடல் #397: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி [அனைத்தும் உருவாகிய முறை]

புகுந்தறி வான்புவ னாபதி அண்ணல்
புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்
புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி யும்முடிக் காகிநின் றாரே.

விளக்கம்:

உலகத்தை அழிக்கும் உருத்திரனும், சங்கு சக்கரத்தைத் தரித்து காக்கின்ற திருமாலும், தாமரை மலரின் மேல் அமர்ந்து படைக்கின்ற பிரம்மனும் தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை தமக்குள் புகுந்து தம்மோடு கலந்து நிற்கும் பரம்பொருளாகிய சதாசிவமூர்த்தியை உணர்ந்து அறிந்து கொள்வதனால் பரம்பொருளின் விருப்பத்தை செய்லாக்கும் கருவிகளாகவே இவர்கள் மூவரும் இருக்கின்றார்கள்.

உட்கருத்து:

உயிர்கள் சென்று அடைய வேண்டியது அழிக்கின்ற உருத்திரனையோ, காக்கின்ற திருமாலையோ, படைக்கின்ற பிரம்மனையோ இல்லை. இவர்கள் மூவரையும் தம் விருப்பத்தை செயலாக்கும் படி வைத்து இயக்கும் பரம்பொருளாகிய சதாசிவமூர்த்தியை அடைந்தால் மட்டுமே பாடல் #396 இல் கூறியுள்ளபடி உயிர்களின் உலகச் சுழற்சி முற்றுப் பெறும்.

பாடல் #398: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

ஆணவச் சத்தியும் ஆம்அதில் ஐவருங்
காரிய காரண ஈசர் கடைமுறை
பேணிய ஐந்தொழி லால்விந்து விற்பிறந்
தாணவம் நீங்கா தவரென லாகுமே.

விளக்கம்:

சதாசிவமூர்த்தியாகிய பரம்பொருளின் திருவிளையாடலால் ஆணவ மாயையில் நின்று உயிர்களைப் படைக்கும் தொழிலை பிரம்மனும், காக்கும் தொழிலை திருமாலும், அழிக்கும் தொழிலை உருத்திரனும், மாயையால் மறைக்கும் தொழிலை மகேசுவரனும், கருணையால் அருளும் தொழிலை சதாசிவனும் செய்கின்றனர். இவர்களும் உடலெடுத்து உயிர்களாகப் பிறந்து இறைவனை வேண்டித் தவமிருந்து இறைவனது அருளால் இந்த ஐந்து தொழில்களையும் பெற்று அவரவர்களுக்கு உரிய தொழிலைச் செய்தாலும் ஆணவம் முற்றிலும் நீங்காமல் இருப்பவர்கள் தான்.

குறிப்பு:

பிரம்மன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய ஐந்து தேவர்களும் சிறிதளவு ஆணவம் இருப்பதினால் தான் அவர்கள் ஐந்து பெயர்களில் குறிக்கப்பட்டு தனியாக ஐந்து தொழில்களை செய்து கொண்டிருக்கின்றனர். அந்த சிறிதளவு ஆணவமும் இல்லையெனில் அவர்கள் அசையா சக்தியாக இருக்கும் சதாசிவமூர்த்தியுடன் கலந்திருப்பார்கள். இவர்களும் உடலெடுத்து உயிர்களாக பிறப்பெடுத்து சிவனடியார்களாக இருந்தவர்கள் தான் என்பதை திருமந்திரம் பாடல் எண் 302, 380 பாடல்களின் மூலம் அறியலாம்.



பாடல் #399: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி [அனைத்தும் உருவாகிய முறை]

உற்றமுப் பாலொன்று மாயாள் உதயமாம்
மற்றைய மூன்றுமா மாயோ தயம்விந்து
பெற்றவள் நாதம் பரையிற் பிறத்தலால்
துற்ற பரசிவன் தொல்விளை யாட்டிதே.

விளக்கம்:

மாயையாகிய சக்தியிலிருந்து சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூன்றும் தோற்றுவிக்கப்படுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றும் சுத்த மாயையின் தொழிலாகும். இந்த மாயைகளைத் தாண்டி ஒலியும் ஒளியும் இருக்கின்றது. இவை இரண்டும் அசையும் சக்தியாகிய பரையிடமிருந்து பிறப்பதால் இவை அனைத்தும் அசையாத சக்தியாகிய பரம்பொருள் சதாசிவமூர்த்தியின் திருவிளையாடலால் உருவானவையே ஆகும்.

உட்கருத்து:

அசையாத சக்தியாகிய பராவிடம் திருவிளையாடல் புரிய எண்ணம் தோன்றும்போது அசையும் சக்தியாகிய பரையிடமிருந்து ஒளியும், ஒலியும் தோன்றுகின்றது. இதிலிருந்து மாயைகள் அனைத்தும் உருவாகின்றது. இவை அனைத்துமே அசையாத சக்தியாகிய பரம்பொருளின் திருவிளையாடலாகும்.

பாடல் #400: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

ஆகாய மாதி சதாசிவ ராதியென்
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய ஈசன் அரன்மால் பிரமனாம்
ஆகாயம் பூமிமுன் காண அளித்தலே.

விளக்கம்:

ஆகாயம், நீர், நெருப்பு, காற்று, மண் ஆகிய பஞ்ச பூதங்களும். சிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரம்மன் ஆகிய பஞ்ச தெய்வங்களும் என்றும் அழியாத மாபெரும் சக்தியினுள்ளிருந்தே தோன்றியவர்களாகும். பஞ்ச தெய்வங்களில் உருவமில்லாமல் அருவமாக முதலில் தோன்றிய சிவனிடமிருந்து தூல உருவமுள்ள மகேசுவரன் தோன்றி, மகேசுவரனிடமிருந்து உருத்திரன் தோன்றி, உருத்திரனிடமிருந்து திருமால் தோன்றி, திருமாலிடமிருந்து பிரம்மன் தோன்றினான். அதுபோலவே பஞ்ச பூதங்களில் உருவமில்லாத அருவமாக முதலில் தோன்றிய ஆகாயத்திலிருந்து சூட்சும உருவமான வாயு தோன்றி, வாயுவிலிருந்து தூல உருவமான நெருப்பு தோன்றி, நெருப்பிலிருந்து நீர் தோன்றி, நீரிலிருந்து நிலம் தோன்றியது. இவை அனைத்தும் சேர்ந்தே உலகம் என்ற பொருள் தோன்றி கண்ணால் காண முடியும்படி அளிக்கப்பட்டது.

பாடல் #401: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி [அனைத்தும் உருவாகிய முறை]

அளியார் முக்கோணம் வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரை யாம்அவள் தானே
அளியார் சதாசிவ மாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்துசெய் வாளே.

விளக்கம்:

பரவிந்து, அபரநாதம், அபரவிந்து எனும் மூன்று முக்கோணம் போன்ற ஒளி, ஒலியாகிய அசையும் சக்தியின் மையப்பகுதியில் இருந்து திரிபுரை என்ற பெயருடைய சக்தி தோன்றுவாள். அவளே சதாசிவமூர்த்தியின் தொழிலை செயல்படுத்துவாள். அவளது மாபெரும் கருணையினால் சிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரம்மன் ஆகிய ஐந்து மூர்த்திகளின் சக்தியாக உடன் இருந்து அருளல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் ஆகிய ஐந்து தொழில்களையும் செய்வாள்.

பாடல் #402: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரண காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி வானவர் மோகினி
பூரணி போதஅதி போதமு மாமே.

விளக்கம்:

சூரிய சந்திரனை மார்புக் கச்சையாக சூடியிருக்கும் சிவனின் சக்தியான மனோன்மணி மங்கள சொரூபமானவள். அவளே அனைத்திற்கும் காரணமாகிய அசையா சக்தியான இறைவனுடன் அசையும் சக்தியாகவும் உலக காரியங்களை செய்யும் சிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரம்மன் ஆகியோருடன் காரிய சக்திகளாகவும் கலந்து நிற்கின்றாள். அவளே ஓங்கார வடிவாகவும் அழிக்கும் தொழிலில் வாரணியாகவும், படைக்கும் தொழிலில் ஆரணியாகவும், காக்கும் தொழிலில் வானவர் கொண்டாடும் மோகினியாகவும் மறைக்கும் தொழிலில் பூரணியாகவும் பேரறிவாக இருக்கின்றாள்.

உட்கருத்து:

அசையா சக்தியாகிய இறைவனின் அசையும் சக்தியாகிய இறைவி உலகம் உருவாக வேண்டும் என்கிற காரணத்தில் பேரறிவு ஞானமாக இருந்து அதை செயலாக்கும் பொருட்டு காரிய சக்திகளாக ஐந்து தேவர்களுடன் ஐந்து தேவிகளாக இருந்து அனைத்தையும் செயல்படுத்துகின்றாள்.

காரணம் - இறைவன் (அசையாசக்தி) - இறைவி (அசையும்சக்தி) - அனைத்தும் உருவாக்குதல்
காரியம் - பிரம்மன் - ஆரணி (சரஸ்வதி) - படைத்தல்
காரியம் - திருமால் - மோகினி (இலட்சுமி) - காத்தல்
காரியம் - உருத்திரன் - வாரணி - அழித்தல்
காரியம் - மகேஸ்வரன் - பூரணி (உமா மகேஸ்வரி) - மறைத்தல்
காரியம் - சிவன் - மனோன்மணி (பார்வதி) - அருளல்

பாடல் #403: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கி அரன்திரு மாலவன்
மன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராக இசைந்துஇருந் தானே.

விளக்கம்:

அசையா சக்தியும், அசையும் சக்தியும் சேர்ந்த ரூபமான அருளல் தொழிலை செய்யும் சிவனின் அம்சம் முழுவதும் நிறைந்து தாமாகவே சதாசிவனிடமிருந்து தோன்றியவர் மறைத்தல் தொழில் செய்யும் மகேஸ்வரன். இவரே காத்தலையும் அழித்தலையும் செய்யும் உருத்திரன் திருமாலின் செயல்களில் இயக்கமாக இருக்கிறார். திருமாலின் தொப்புள் கொடியிலிருந்து வெளி வந்த தாமரை மலரின் மீது உருவானவர் அனைத்தையும் படைக்கும் தொழிலை செய்யும் பிரம்மன் ஆவார். ஆகவே இந்த ஐந்து தேவர்களாகவும் அசையா சக்தியான இறைவன் ஒருவனே ஒவ்வொருவருடனும் ஒவ்வொருவராகக் கலந்து இருக்கின்றான்.

பாடல் #404: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉட லோடுயிர் தானே.

விளக்கம்:

ஏழு உலகங்களையும் படைக்கின்ற பிரம்மனாகவும், ஏழு உலகங்களையும் காக்கின்ற திருமாலாகவும், ஏழு உலகங்களையும் அழிக்கின்ற சிவபெருமானாகவும் இருப்பவன் இறைவன் ஒருவனே. சதாசிவமூர்த்தியாக இருந்து ஒவ்வொரு உயிரின் உடலோடு உயிராக கலந்து இருப்பவனும் இறைவன் ஒருவனே.

பாடல் #405: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

செந்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை
மஞ்சார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்துக்
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்து
மைந்தார் பிறவியை அமைந்துநின் றானே.

விளக்கம்:

சிவந்த தாமரை மலரின் நிறத்தைப் போன்ற பிரம்மனும், கொழுந்து விட்டு எரியும் தீப் பிழம்பின் நிறத்தைக் கொண்ட எமது இறைவன் சிவபெருமானும், நீர் நிறைந்த மேகங்களைப் போன்ற கருமை நிறம் கொண்ட திருமாலும் சேர்ந்து மாயையால் பாசப்பிணைப்புகளை உண்டாக்கி உயிர்களை மயக்கி பூக்களை தங்களது கூந்தலில் சூடியிருக்கின்ற பெண்கள் கூட்டத்துடன் ஆண்களை கூடுமாறு செய்து அவர்களின் கூடுதலில் பிறவியை அமைத்து நிற்கின்றான் இறைவன்.

பாடல் #406: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி [அனைத்தும் உருவாகிய முறை]

தேடும் திசைஎட்டுஞ் சீவன் உடலுயிர்
கூடும் பிறவிக் குணஞ்செய்த மாநந்தி
ஊடும் அவர்தம துள்ளத்தி னுள்நின்று
நாடும் வழக்கமும் நானுமறிந் தேனே.

விளக்கம்:

உயிர்கள் தேடிப் பார்க்கக்கூடிய எட்டுத் திசைகளிலும் உடலோடு உயிராக ஆன்மா கூடித் தனது வினையின் பயனாக பிறவி எடுக்கும்படி செய்த மாபெரும் குருவான இறைவன் ஆணாகவும் பெண்ணாகவும் பிறவி பெற்ற அந்த உயிர்களின் உள்ளத்துக்குள் நின்று காதல் மயக்கத்தினால் ஒருவரை ஒருவர் நாடிச் சென்று மேலும் பிறவிகளை உருவாக்க காரணமாகவும் இருப்பதை இறைவனது திருவருளால் யான் அறிந்துகொண்டேன்.

பாடல் #407: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

ஓராய மேஉல கேழும் படைப்பதும்
ஓராய மேஉல கேழும் அளிப்பதும்
ஓராய மேஉல கேழும் துடைப்பதும்
ஓராய மேஉட லோடுஉயிர் தானே.

விளக்கம்:

தேவர்கள் உடல் கொண்ட மூர்த்தியாகவும் தேவியர்கள் உயிர்கொண்ட சக்தியாகவும் கூடி நின்று ஏழு உலகங்களையும் படைத்து, காத்து, அழிக்கின்றனர்.

பாடல் #408: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

நாதன் ஒருவனும் நல்ல இருவரும்
கோது குலத்தொடுங் கூட்டிக் குழைத்தனர்
ஏது பணியென் றிசையும் இவர்கட்கு
ஆதி இவனேதான் அருளுகின் றானே.

விளக்கம்:

அனைத்திற்கும் தலைவனாகிய சிவம் ஒருவனும் அவனிடமிருந்து நன்மை புரியத் தோன்றிய சிவன் சக்தியாகிய இருவரும் சேர்ந்து அசுத்த மாயையில் பிறக்கும் மனித பிறப்பினரோடு சுத்தமாயையை கூட்டிச் சேர்த்து தேவர்களைப் படைத்தனர். இந்த தேவர்கள் இறைவனிடம் வந்து எங்களுக்கு இடும் பணி என்ன என்று கேட்டுப் பெற்று அப்படியே செய்வதாக ஏற்றுக்கொண்டு அதை செயல் படுத்துகின்றனர். இந்த தேவர்கள் அனைவருக்கும் தத்தமது பணிகளை கருணையால் அருளுபவன் ஆதியிலிருந்தே இருக்கின்ற இறைவன் ஆவான்.

உட்கருத்து:

தேவர்கள் அனைவருமே முதலில் மனிதர்களாகப் பிறந்து பிறகு தவம் செய்து இறைவனிடம் தமக்கு கொடுக்கும் வேலைகளைக் கேட்டு அவனது அருளால் பெற்று அதை நடத்துபவர்களாகும். இதை 302, 380, 398 பாடல்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பாடல் #409: இரண்டாம் தந்திரம் – 9. சர்வ சிருஷ்டி [அனைத்தும் உருவாகிய முறை]

அப்பரி செண்பத்து நான்குநூ றாயிரம்
மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கும்
அப்பரி சேதென்று புகலும் மனிதர்
அப்பரி சேஇருளாய் மூடிநின் றாரே.

விளக்கம்:

இறைவன் உலகத்தில் பரிசாகக் கொடுத்தது என்பத்து நான்கு இலட்சம் வகை உயிரினங்களாகும். இந்த அனைத்து உயிர்களிலும் உண்மையான பரிசாக அவற்றுடன் கலந்து உயிராக நிற்பது இறைவனே ஆகும். ஆனால் இறைவனை தமக்குள் அறியாமல் ஆணவத்தால் அவன் எங்கே இருக்கின்றான் என்று கேட்கும் மனிதர்களை மாயை என்னும் ஆணவ இருளாய் உயிர்களுக்கு பரிசாய் இருக்கும் இறைவனே மூடியிருகின்றான்.



பாடல் #410: இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி (அனைத்தும் உருவாகிய முறை)

ஆதித்தன் சந்திரன் அங்கி எண்பாலர்கள்
போதித்த வானொலி பொங்கெரி நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே.

விளக்கம்:

சூரியன், சந்திரன் மற்றும் அக்கினி, இந்திரன், இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எட்டுத்திசைகளுக்கான காவலர்களும் போதனை செய்யும் ஆகாயம், ஒலியை பரப்பும் காற்று, சுட்டெரிக்கும் நெருப்பு, நீர் இருக்கும் பூமி ஆகிய பஞ்ச பூதங்களும், கேட்டல், ருசித்தல், முகர்தல், பார்த்தல், உணர்தல் ஆகிய ஐந்து ஞானேந்திரியங்களும். வாக்கு, கைகள், கால்கள், உடல்கழிவுகளை வெளியே தள்ளும் உறுப்புகள், பிறப்புறுப்புக்கள் ஆகிய ஐந்து கர்மேந்திரியங்களும். செயல், புத்தி, சித்தம், அஹங்காரம் என நான்கு அந்தக்கரணங்கள் இவை அனைத்தும் அசையா சக்தி, அசையும் சக்தியினால் தோன்றிய சுத்தமாயை அசுத்த மாயையில் இருந்து தோன்றியவையாகும்.

பாடல் #411: இரண்டாம் தந்திரம் - 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

புகுந்துநின் றான்வெளி யாய்இரு ளாகிப்
புகுந்துநின் றான்புகழ் வாய்இகழ் வாகிப்
புகுந்துநின் றான்உட லாய்உயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே.

விளக்கம்:

உயிரின் உடலில் புகுந்து நிலையாய் நின்ற இறைவன் அவ்வுயிரின் அருள் அறிவு என்னும் வெளிச்சமாகவும் அறியாமை என்னும் இருளாகவும் அவ்வுயிருக்கு கிடைக்கும் புகழ்ச்சியாகவும் இகழ்ச்சியாகவும், அவ்வுயிரின் உடலாகவும் உயிராகவும் ஒன்றி அவ்வுயிரின் அறிவாகவும் நிரந்தரமாக கலந்து அவை வாழும் காலம் வரை அருளுகின்றான்.

பாடல் #412: இரண்டாம் தந்திரம் - 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே கடல்மலை யாதியு மாய்நிற்கும்
தானே உலகினில் தலைவனு மாமே.

விளக்கம்:

உலகத்தை படைத்து அதனைக்காக்க இறைவன் ஒருவனே பத்து திசைகளாகவும் [எட்டுத் திசைகள், மேல், கீழ்] அவற்றைக் காத்து நிற்கும் தேவர்களாகவும் அனைத்து உயிர்களின் ஸ்தூல உடலாகவும் சூட்சும உயிராகவும் அவை இரண்டும் உணர்த்தும் இருபத்து நான்கு வகை தத்துவங்களாகவும் காணுகின்ற கடல் போன்ற நீர் நிலைகளாகவும் மலை போன்ற நிலப் பரப்புகளாகவும் அனைத்திற்கும் முதலாகவும் உலகத்திலுள்ள அனைத்திற்கும் தலைவனாகவும் இருக்கின்றான்.

பாடல் #413: இரண்டாம் தந்திரம் - 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

உடலாய் உயிராய் உலகம தாகிக்
கடலாய் கார்முகில் நீர்பொழியும் வானாய்
இடையாய் உலப்பிலி எங்குந்தா னாகி
அடையார் பெருவழி அண்ணல்நின் றானே.

விளக்கம்:

உலகத்தை படைத்து அதனைக்காக்க அனைத்து உயிர்களின் உடலாகவும் சூட்சுமத்தில் உயிராகவும் அவை பிறந்து வாழும் அனைத்து உலகங்களாகவும் அந்த உலகங்களில் உயிர் தோன்ற வழி செய்யும் கடல்களாகவும் அவை வாழ வழி செய்யும் மழை நீரைப் பொழியும் கருத்த மேகங்களைக் கொண்ட வானமாகவும் வானத்துக்கும் பூமிக்கும் இடையில் இருக்கும் வெற்றிட ஆகாயமாகவும் அனைத்தும் தானே ஆகவும் உண்மையான அடியவர்கள் தேடி அடையும் முக்தியாகவும் இறைவன் ஒருவனே நிற்கின்றான்.

உட்கருத்து:

உயிர்கள் அடைவதற்குரிய பெருவழியான முக்தியை அருளிய இறைவன் உலகப்பொருட்களில் அதுவாகவே இருக்கின்றான்.

பாடல் #414: இரண்டாம் தந்திரம் – 10. திதி [வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

தேடுந் திசைஎட்டுஞ் சீவன் உடலுயிர்
கூடு மரபிற் குணஞ்செய்து மாநந்தி
ஊடும் அவர்தம துள்ளத்து ளேநின்று
நாடும் வழக்கமும் நானுமறிந் தேனே.

விளக்கம்:

உயிர்கள் தேடிப் பார்க்கக்கூடிய எட்டுத் திசைகளிலும் பிறவி எடுத்திருக்கும் பல ஆன்மாக்கள் கூடி நிற்கின்ற உடல்களின் உயிராகவும் அப்படிக் கூடுகின்ற காரணமான வினைப் பயனாகவும் இருக்கின்றவன் மாபெரும் குருவான இறைவன். அவனே உயிர்களின் உள்ளத்துக்குள் மன சாட்சியாய் நின்று அவற்றின் வினைப் பயனுக்கு ஏற்ப அவை அனுபவிக்கும் இன்பம் துன்பமாகவும் விருப்பு வெறுப்பாகவும் இருக்கும் முறையையும் அவனது கருணையினால் யான் அறிந்தேன்.

உட்கருத்து:

பாடல் #406 இந்த பாடல் போலவே இருந்தாலும் அதில் பிறப்பைக் கூறிய திருமூலர் இதில் காப்பதைக் கூறியிருக்கின்றார். இதை ஒரு வார்த்தையையும் ஒரு எழுத்தையும் மாற்றி உணர்த்தி நிற்கின்றார் திருமூலர்.

பாடல் #415: இரண்டாம் தந்திரம் - 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்கும்
தானொரு கால்சண்ட மாருத மாய்நிற்கும்
தானொரு காலந் தளிமழை யாய்நிற்கும்
தானொரு காலந்தண் மாயவனு மாமே.

விளக்கம்:

இறைவன் ஒருவனே ஆதி காலத்தில் இருந்தே மாபெரும் தனிச்சுடர் கொண்ட பேரொளியாய் நிற்கின்றான். அழிக்கின்ற காலத்தில் சூராவளிப் புயலாக இருக்கின்றான். உயிர்களை வாழ்விக்கின்ற காலத்தில் குளிர்ச்சியுடைய மழையாய் வருகின்றான். காலத்திற்கு ஏற்ப உருவம் கொண்டு உயிர்களைக் காப்பாற்றும் திருமாலின் தன்மையாகவும் அவனே இருக்கின்றான்.

பாடல் #416: இரண்டாம் தந்திரம் - 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்திலும் அமர்ந்துநின் றானே.

விளக்கம்:

அனைத்து உயிர்களுக்குள்ளும் தோன்றும் உண்மையான அன்பாகவும் அறிவாகவும் அவை பெறும் ஒழுக்கமான அடக்கமாகவும் இருப்பவன் இறைவனே. நல் வினையால் உயிர்கள் பெறும் இன்பமாகவும் இன்பத்தில் மற்ற உயிர்களோடு கலக்கும் புணர்ச்சியாகவும் இருப்பவன் இறைவனே. உலகம் உருவான ஆதிகாலமாகவும் அந்த உலகம் இறுதியில் அழியும் ஊழிக் காலமாகவும் இருப்பவன் இறைவனே. அவனே உயிர்களிடத்தில் கொண்ட மாபெரும் அன்பினால் ஐந்து பூதங்களிலும் அமர்ந்து இருந்து உயிர்களை எப்போதும் காத்து அருளுகின்றான்.

பாடல் #417: இரண்டாம் தந்திரம் - 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

உற்று வனைவான் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியைச்
சுற்றிய சாலும் குடமுஞ் சிறுதூதை
மற்றதும் அவனே வனையவல் லானே.

விளக்கம்:

உயிர்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தில் உயிர்களைப் பல்வேறு உலகங்களிலும் உருவாக்குபவன் இறைவனே. அவனே உயிர்களின் வினைப் பயனைப் பெற்று அதன் காரணமாக பிறவியை உருவாக்குபவன். ஒரு குயவன் தனது அச்சுச் சக்கரத்தில் களிமண்ணை வைத்துச் சுற்றி அந்தக் களிமண்ணைப் பிடித்து தாழியும், குடமும், சிறு பாண்டங்களும் மற்றும் பலவிதமான மண் பாத்திரங்களும் செய்வதைப் போல இறைவன் உயிர்களின் வினைகளுக்கு ஏற்ப பல்வேறு விதமான உடல்களை வடித்து அருளும் வல்லமை உள்ளவன் ஆவான்.

பாடல் #418: இரண்டாம் தந்திரம் – 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றான்நந்தி
வெள்ளுயி ராகும் வெளியான் இலங்கொளி
உள்ளுயிர்க் கும்உணர் வேயுட லுட்பரந்
தள்ளுயி ராதவண்ணந் தாங்கிநின் றானே.

விளக்கம்:

அனைத்து உயிர்களுக்கும் உள்ளிருக்கும் உயிராகவும் வெளியிலிருக்கும் உடலாகவும், மூச்சுக்காற்றாகவும் நின்று கர்மாக்கள், வினைகள் சூழ்ந்த அசுத்த மாயையில் இருக்கும் உலக உயிர்களையும் கர்மாக்கள், வினைகள் இல்லாத சுத்த மாயையில் இருக்கும் தேவர்களையும் தாண்டிய பரவெளியில் உண்மைப் பொருளை உணர வைக்கும் பேரொளியாக குருவாய் நின்று அருளுகின்றான் இறைவன். அனைத்து உயிர்களுக்குள் உயிராகவும் உணர்வாகவும் அவற்றின் உடலுக்குள் பரவி இருந்து அந்த உயிர்களின் மூச்சுக்காற்று உடலை விட்டு செல்லாதபடி உடலையும் உயிரையும் உள்ளுக்குள்ளிருந்து தாங்கிக் கொண்டு நிற்பவனும் இறைவனே.

பாடல் #419: இரண்டாம் தந்திரம் - 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

தாங்கருந் ..தன்மையுந் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்த மவ்வழி
தாங்கிநின் றானும்அத் தாரணியன் தானே.

விளக்கம்:

பல்வேறு விதமான உயிர்களுக்கும் அவற்றின் உடலுக்குள் இருந்து உயிரைத் தாங்கும் தன்மையாக இருக்கும் இறைவனே அவை அழியும் காலத்தில் உள்ளிருந்து வெளியே வரும் உயிரை வாங்குகின்றவனாகவும் இருக்கின்றான். அவனைத் தவிர உயிர்களைத் தாங்கவும் வாங்கவும் அருள் செய்யும் தெய்வம் வேறு ஒன்று இல்லை. இப்படி ஏழு உலகங்களையும் அதிலிருக்கும் அனைத்து உயிர்களையும் தாங்கி நிற்கின்ற இறைவனே அதைத் தாண்டிய விண்ணுலகத்தையும் தாங்கி நிற்கின்றான். அவனே உயிர்கள் தமது பிறவிச் சூழலிலிருந்து விடுபட்டு விண்ணுலகம் அடைய வழியாக யோக முறைகளையும் அருளி அந்த முறைகளைப் பின்பற்றி வரும் உயிர்களின் வழிமுழுவதும் அவற்றைக் காத்தும் அருளுகின்றான்.

பாடல் #420: இரண்டாம் தந்திரம் - 10. திதி
[வினைப் பயனாக அனைத்தையும் காக்கும் முறை]

அணுகினுஞ் சேயவன் அங்கியிற் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணியினும் பார்மிசைப் பல்லுயி ராகித்
தணியினும் மண்ணுடல் அண்ணல்செய் வானே.

விளக்கம்:

அனைத்து உயிர்களின் உள்ளுக்குள்ளும் இறைவன் இருந்தாலும் அவனை அறிந்து கொள்ள முடியாதபடி மாயையால் மறைக்கப்பட்டு இருக்கின்றான். அவனை மூச்சுக்காற்றின் மூலம் குண்டலினியை மேலெழுப்பி சகஸ்ரர தளத்தில் கொண்டு சேர்த்துவிட்டால் பேரறிவு ஞானத்தைத் தந்து அருளுவான். அதன் மூலம் பிறவிச் சுழற்சியை அறுத்து முக்தி பெறலாம். இறைவனை எவ்வளவு தான் பணிந்து தொழுதாலும் ஞானத்தை அடைய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் உலக ஆசைகளோடு இருந்தால் உலகத்தில் பல்வேறு விதமான உயிர்களாக உடலெடுத்துப் பிறந்து அழிந்தாலும் மீண்டும் மீண்டும் மண்ணுலகத்தில் உடல் பெறவே செய்வான் உலகத்தின் தலைவனாகிய இறைவன்.

பாடல் #421: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் (வினையின் படி நன்மைக்காக அழித்தல்)

அங்கிசெய் தீசன் அகலிடஞ் சுட்டது
அங்கிசெய் தீசன் அலைகடற் சுட்டது
அங்கிசெய் தீசன் அசுரரைச் சுட்டது
அங்கியவ் வீசருக்கு கைஅம்பு தானே.

விளக்கம்:

இறைவன் பஞ்சபூதங்களில் ஒன்றான நெருப்பின் மூலம் பிரளய காலத்தில் பரந்து விரிந்த உலகத்தையும் அலைகள் நிறைந்த கடல்களையும் அறியாமையாகிய அசுரர்களையும் அழித்து அருளினான். இறைவனால் உருவாக்கப்பட்ட அனைத்தும் அதனதன் வினையின்படி அழிந்து நன்மை பெறுவதற்காக இறைவன் அழித்தல் தொழிலை செய்யும் போது நெருப்பு அவனது திருக்கரத்தில் அம்பாக இருக்கின்றது.

பாடல் #422: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் (வினையின் படி நன்மைக்காக அழித்தல்)

இலயங்கள் மூன்றினும் ஒன்றுகற் பாந்த
நிலையன் றிழிந்தமை நின்றுணர்ந் தேனால்
உலைதந்த மெல்லரி போலும் உலகம்
மலைதந்த மாநிலம் தான்வெந் ததுவே.

விளக்கம்:

இறைவன் வினையின்படி அனைத்தையும் அழிக்கும் மூன்று விதமான பிரளய வகைகளில் கற்பாந்தப் பிரளயத்தில் நிலையில்லாத இந்த உலகம் இழிவு நிலை பெற்று அழிந்து போனதை யானும் இறைவனின் திருவருளால் அவனோடு நின்று கண்டு உணர்ந்தேன். உலையில் இடப்பட்ட அரிசி நெருப்பினால் சூடு பெற்று கொதித்து வெந்து சாதமாகிறதோ அதுபோல மலைகளால் சூழப்பட்ட மாபெரும் நிலப்பரப்பான இந்த உலகமும் இறைவன் தந்த நெருப்பினால் வெந்து அழிந்தது.

மூன்று வகை பிரளயங்கள்:

1. தினப் பிரளயம் - ஒவ்வொரு உயிரும் தினமும் தூங்கி எழும் இடைவெளியில் நிகழும் அழிவுகள்
2. கற்பாந்தப் பிரளயம் - வினை முடிந்தபின் வரும் அழிவுகள் (உயிர்களோடு உலகமும் அழிவது)
3. மகாப் பிரளயம் - ஊழிக்காலத்தில் வரும் பேரழிவு (அண்டங்களையே அழிக்கக் கூடியது)

பாடல் #423: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் [வினையின் படி நன்மைக்காக அழித்தல்]

பதஞ்செய்யும் பாரும் பனிவரை எட்டும்
உதஞ்செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாம்
குதஞ்செய்யும் அங்கி கொளுவியா காச
விதஞ்செய்யும் நெஞ்சின் வியப்பில்லை தானே.

விளக்கம்:

உயிர்களுக்கு இயற்கையை வழங்கி அவர்களை வாழ வைக்கும் உலகமும், பனிபடர்ந்து ஓங்கி நிற்கும் எட்டு விதமான மலைகளும், ஓசை எழுப்பும் அலைகளைக் கொண்ட ஏழு விதமான கடல்களின் வெள்ளப் பெருக்கும் ஆகிய இவை அனைத்தும் இறைவனின் சிறிதளவு நெருப்பினால் அழிந்து ஆகாயம் போல வெற்றிடமாகும் விதத்தைக் கண்ட உண்மை ஞானிகளுக்கு வியப்பாக இருக்காது.

பாடல் #424: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் [வினையின் படி நன்மைக்காக அழித்தல்]

கொண்டல் வரைநின் றிழிந்த குலக்கொடி
அண்டத்துள் ஊறி யிருந்தெண் திசையாதி
ஒன்றின் பதஞ்செய்த ஓம்என்ற அப்புறக்
குண்டத்தின் மேல்அங்கியும் கோலிக்கொண் டானே.

விளக்கம்:

மழை நீரைக் கொண்டிருப்பதால் கருத்த மேகங்கள் காற்றினால் தள்ளப்பட்டு மலைகளின் மழையாகப் பொழிந்து மழை அருவியாகி அருவி ஆறாகி ஆறு எட்டுத்திசையிலும் உள்ள நிலங்களிலெல்லாம் பரவி ஆற்றின் தண்ணீர் நிலத்தில் ஊறி உயிர்களை காக்கும் அனைத்துவிதமான உணவு பொருட்களையும் விளைவித்து பின் ஆற்றின் தண்ணீர் கடலில் கலந்து அதுவே பெருங்கடலாக உருவெடுத்து நிலங்களையெல்லாம் சூழ்ந்து கடல் இருக்கும். வினையின் படி நன்மைக்காக இறைவன் தனது சக்தியை ஓம் எனும் மந்திரத்தை பதம் செய்து யாகக் குண்டத்தின் மேலெழும்பி வரும் சிறிய நெருப்பினால் அழித்து தன்னுள் அடக்கிக் கொள்கிறான் இறைவன்.

உள்விளக்கம்:

நல்வினையின் காரணமாக கருத்த மேகங்கள் அழிந்து மழையாகப்பொழிகிறது. மழைநீர் நிலங்களுக்கு பரவி உணவு பொருட்களை உற்பத்தி செய்ய அழிந்து போகின்றது. மீதம் இருக்கும் நல்ல மழை நீர் கடலினில் கலந்து அழிந்து உப்பு நீராகிறது. அந்த நீர் மீண்டும் அழிந்து கருத்த நீர் இருக்கும் மேகமாகின்றது. இது போல் உலகத்தில் நடக்கும் பல அழிவுகளும் உலக நன்மைக்காக இறைவன் ஓம் என்னும் மந்திரத்தை பதம் செய்து உலகம் என்னும் குண்டத்தில் அக்னியை உருவாக்கி செய்கின்றான்.

பாடல் #425: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் (வினையின் படி நன்மைக்காக அழித்தல்)

நித்தசங் காரம் உறக்கத்து நீள்மூடம்
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாம்
சுத்தசங் காரத் தொழிலற்ற கேவலம்
உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே.

விளக்கம்:

நித்த சங்காரம் என்பது உயிர்கள் உறங்கும் போது தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை முற்றிலும் அறியாத நிலையாகும். வைத்த சங்காரம் என்பது உயிர்கள் இளைப்பாற வேண்டும் என்று உறங்கும்போது ஏற்படும் கனவு நிலையாகும். சுத்த சங்காரம் என்பது உயிர்கள் உடலை விட்டு உயிர் பிரிந்த ஆன்மா ஆணவ மலத்திலேயே இருந்து பிறக்கவும் முடியாமல் இறைவனிடம் செல்ல முடியாமல் எந்தச் செயலும் செய்ய முடியாமல் கிடக்கும் கேவலமான நிலையாகும். உய்த்த சங்காரம் என்பது இறைவனது திருவருளால் ஆன்மா உண்மைப் பொருளான இறைவனுடனே சென்று இரண்டறக் கலந்துவிடுகின்ற நிலையாகும்.

உள்விளக்கம்

நித்த சங்காரம் - தூங்கும் போது நான் என்ற எண்ணம் அழிந்திருந்த நிலை.
வைத்த சங்காரம் - தூங்கும் போது கனவில் எல்லாம் தன்னுடையது போல் இருக்கும் ஆனால் விழித்ததும் எதுவும் தனது இல்லை என்று அனைத்தும் அழிந்த நிலை.
சுத்த சங்காரம் - உடல் அழிந்த பின் உயிர் தான் என்ற அகங்காரத்தினால் உடலெடுக்கவும் முடியாமல் இறைவனுடன் கலக்கவும் முடியாத நிலை. இதனை கேவலமான நிலை என்று பாடலில் கூறுகிறார்.
உய்த்த சங்காரம் - உடல், உயிர் அனைத்தும் அழிந்து இறைவனுடன் கலக்கும் நிலை.

பாடல் #426: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் [வினையின் படி நன்மைக்காக அழித்தல்]

நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்
வைத்தசங் காரமும் மாயாசங் காரமாம்
சுத்தசங் காரம் மனாதீதந் தோய்வுறல்
உய்த்தசங் காரஞ் சிவனருள் உண்மையே.

விளக்கம்:

நித்த சங்காரத்தில் உயிர் ஸ்தூல சூட்சும சரீரங்களுடன் தொடர்பு கொண்டிருக்கும். வைத்த சங்காரத்தில் மாயையுடன் கனவு நிலையில் உயிர் ஸ்தூல உடலை விட்டு விலகி சூட்சும உடலுடன் தொடர்பு கொண்டிருக்கும். சுத்த சங்காரத்தில் மனம் எந்த எண்ணமும் இல்லாமல் செயல் ஒன்றும் இல்லாது இருக்கும். உய்த்த சங்காரத்தில் சிவன் அருளில் லயித்து இருக்கும். இதுவே உண்மையான சங்காரம் ஆகும்.

பாடல் #427: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் (வினையின் படி நன்மைக்காக அழித்தல்)

நித்தசங் காரங் கருஇடர் நீக்கினால்
ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்
வைத்தசங் காரம் கேவலம் ஆன்மாவுக்கு
உய்த்தசங் காரம் சிவமாகும் உண்மையே.

விளக்கம்:

உலகத்தில் பிறவி எடுக்க தாய் வயிற்றில் கருவாகப் பிறந்த அனைத்து உயிர்களுமே தங்களின் வினைப் பயனாகிய துன்பங்களையும் சேர்த்துக் கொண்டுதான் பிறக்கின்றன. இறைவனது கருணையினால் அந்த துன்பங்கள் சிறிது நேரமாவது நீங்கித் தம்மை மறந்து உயிர்கள் இருக்கும் தூக்க நிலை தினமும் நிகழும் நித்த சங்காரமாகும். உடலை விட்டு உயிர் பிரிந்து ஆன்மா மட்டுமே இருக்கின்ற நிலை சுத்த சங்காரமாகும் ஸ்தூல உடலும் சூட்சும உடலும் பிரிந்து இருக்கும் கனவு நிலையில் ஆன்மா மாயையிலேயே மூழ்கி கேவலப்பட்டு இருக்கின்ற நிலை வைத்த சங்காரமாகும். வினைகளையெல்லாம் தீர்த்துவிட்ட உயிர் ஸ்தூல உடலை விட்டுப் பிரிந்து சூட்சும உடலும் அழிந்து தனித்தன்மையோடு இருந்த ஆன்மா உண்மைப் பொருளான இறைவனுடனே இரண்டறக் கலந்துவிடும் போது நான் எனும் தனித்தன்மை முற்றிலும் அழிந்து சிவமாக மாறும் நிலை உய்த்த சங்காரமாகும்.

பாடல் #428: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் (வினையின் படி நன்மைக்காக அழித்தல்)

நித்தசங் காரமும் நீடிளைப் பாற்றுதல்
வைத்தசங் காரமும் மன்னும் அனாதியிற்
சுத்தசங் காரமுந் தோயாப் பரனருள்
வைத்தசங் காரமும் நாலாம் மதிக்கிலே.

விளக்கம்:

உயிர்கள் தங்களது துன்பங்களை மறந்து நீண்ட நேரத்திற்கு இளைப்பாற வேண்டும் என்கிற இறைவனது கருணையினால் நித்த சங்காரம் நிகழ்கிறது. ஆரம்பம் இல்லாத கனவு நிலையில் உலக மாயைகளெல்லாம் மறைந்து எண்ணங்களும் இல்லாமல் உயிர்கள் சிறிது நேரமாவது இளைப்பாற வேண்டும் என்கிற இறைவனது கருணையினால் வைத்த சங்காரம் நிகழ்கிறது. இறைவனது திருவருளை மட்டுமே எண்ணிக் கொண்டு மற்ற அனைத்தையும் விட்டு விலகி ஆன்மா திரும்ப வர வேண்டும் என்கிற இறைவனது கருணையினால் சுத்த சங்காரம் நிகழ்கிறது. அனைத்து வினைகளையும் கழித்த ஆன்மா இனி தனித்தன்மை இல்லாமல் உண்மைப் பொருளான இறைவனுடனே கலந்துவிட வேண்டும் என்கிற இறைவனது கருணையினால் உய்த்த சங்காரம் நிகழ்கிறது. இறைவனது கருணையை மதித்துப் பார்த்தால் இந்த நான்கு சங்காரங்களும் உயிர்களின் நன்மைக்காகவே இறைவன் வைத்திருக்கின்றான்.



பாடல் #429: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் [வினையின் படி நன்மைக்காக அழித்தல்]

பாழே முதலா எழும்பயிர் அவ்விடம்
பாழே அடங்கினும் பண்டைப்பாழ் ஆகாவாம்
வாழாச்சங் காரத்தின் மாலயன் செய்தியாம்
பாழாம் பயிராய் அடங்கும்அப் பாழிலே.

விளக்கம்:

சேற்றுச் சகதியில் விதைத்த விதை அந்தச் சகதியையே ஆதாரமாகக் கொண்டு அதனிடமிருந்து வெளிப்பட்டு பயிராக மேலெழும்பி வருவதைப் போல அனைத்திற்கும் பழைமையான இறைவனிடமிருந்து அவனையே முதலாகக் கொண்டு அவனிடமிருந்து வெளிப்பட்டு உலகத்தில் கருவாக வந்து பிறக்கின்றது ஆன்மா. விளைந்த பயிர் பயன்படுத்தப்பட்ட பிறகு அழிந்து திரும்பவும் மண்ணோடு மண்ணாகவே ஆகிவிட்டாலும் அது எப்படி முன்பு விதைத்த விதைக்குள் மீண்டும் போய் சேர முடியாதோ அதுபோலவே உலகத்தில் கருவாக வந்து பிறந்த ஆன்மா உலகத்தில் வாழ்ந்து இறந்த பிறகும் திரும்பவும் இறைவனிடமே சென்று சேர்ந்துவிட முடியாது. இதனாலேயே ஆன்மாவுக்குத் தனித்த வாழ்வு என்பது இல்லாத சங்காரச் சுழற்சியில் தள்ளப்பட்டு மீண்டும் பிரம்மனால் கருவாக பிறந்து திருமாலால் காக்கப்பட்டு வளர்ந்து மறுபடியும் சங்காரத்தில் இறந்து கொண்டே இருக்கும். எப்போது மண்ணில் பிறந்த பயிர் மண்ணிலே கலந்து அந்த மண்ணும் ஒரு நாள் மறைந்து போகின்றபோது அந்தப் பயிரின் தடயமே அழிந்து போய்விடுவது போல உலகத்தில் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து இறக்கும் ஆன்மா எப்போது வினைகளை முடித்துத் தான் என்கிற தடயத்தை [ஆணவ மலம்] முற்றிலும் துறந்து மாயைகளை நீக்கி உண்மையை உணருகின்றதோ அப்போது அது தோன்றிய இறைவனிடமே சென்று அடங்கிவிடும்.

உட்கருத்து:

ஆன்மாவைப் பயிராகவும் இறைவனை சகதியாகவும் உருவகிக்கும் திருமூலர் இந்த உவமையின் மூலம் சங்காரத்தின் தத்துவமும் அது ஏன் நிகழ்கிறது என்கிற விளக்கத்தையும் தந்து அருளுகிறார். இறைவனிடமிருந்து முதலில் தோன்றிய ஆன்மா உலகத்தில் பிறவி எடுத்து வினையினால் பிறவிச் சுழலில் சிக்கித் தன் வினைகளையெல்லாம் முடித்துவிட்டு பிறகு இறைவனிடமே வந்து அடங்கிவிடுவதே சங்காரத்தின் தத்துவமும் அதன் பயனுமாகும்.

பாடல் #430: இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம் (வினையின் படி நன்மைக்காக அழித்தல்)

தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை
மாயம்வைத் தான்வைத்த வன்பதி ஒன்றுண்டு
காயம்வைத் தான்கலந் தெங்கும் நினைப்பதோர்
ஆயம்வைத் தாயுணர்வு ஆரவைத் தானே.

விளக்கம்:

இறைவனிடமிருந்து தோன்றிய ஆன்மா தனது ஆசைகளை அனுபவித்துத் தீர்த்துக் கொள்ள செய்யும் செயலினால் சேரும் வினைகளைத் தீர்க்க மாயையை வைத்து அந்த வினைகள் தீர உடலையும் ஆன்மாவிற்கு கொடுத்துப் பிறவி எடுக்க வைக்கின்றான். பிறவி எடுத்த ஆன்மா வினைச் சுழலில் சிக்கி மீண்டும் மீண்டும் பிறவி எடுத்துக் கொண்டே இருக்கக் கூடாது என்கிற கருணையினால் உலகத்திலுள்ள அனைத்திலும் கலந்து இருக்கும் இறைவன் தன்னை அடையும் வழிகள் அறிந்த கலந்து குருவாய் இருக்கும் அடியார்களோடு சேர வைத்து தன்னை எப்போதும் நினைக்கக் கூடிய எண்ணத்தை வைக்கின்றான். இறைவனின் சிந்தனையிலேயே இருப்பதால் மாயை அழிந்து நான் என்கின்ற அகங்காரம் அழிந்து ஆன்மா மீண்டும் தம்மை வந்து அடையும் மெய்யுணர்வு வரச் செய்கிறான் இறைவன்.

பாடல் #431: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனது உருவறி யாதே.

விளக்கம்:

ஒவ்வொரு உயிரின் உள்ளத்திற்குள்ளும் கண்டு உணரக் கூடிய ஜோதி உருவமாக இறைவன் வீற்றிருக்கின்றான். அவன் உயிர்களின் உள்ளத்தை விட்டு ஒரு அடி கூட விலகி நிற்பதில்லை. எப்போதும் உயிர்களின் உள்ளத்துடனே சேர்ந்து இறைவன் இருந்தாலும் மாயையினால் மறைக்கப்பட்ட உயிர்களின் உள்ளம் அவனது உருவத்தை அறியாது.

பாடல் #432: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

இன்பப் பிறவி படைத்த இறைவனும்
துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்
என்பிற் கொளுவி இசைந்துறு தோல்தசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாக்குமே.

விளக்கம்:

இறைவனோடு இருந்த ஆன்மாக்கள் ஆசைப்பட்டுவிடும் போது அந்த ஆசைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டி உலகத்தில் பிறவி எடுக்கும்படி உயிர்களாகப் படைக்கின்றான் இறைவன். அந்த உயிர்கள் ஆசைகளைத் தீர்த்துக் கொள்ளும் போது சில வினைகளும் சேர்த்து விடுகிறது. இந்த வினைகளை அனுபவிக்க வேண்டி உலகப்பற்று, குடும்பம், பாசம் என்னும் துயரத்துக்குள் உயிர்களை மாயையால் பூட்டி அடைத்துவிடுகின்றான். எலும்பை முழுவதும் தோல் தசைகளால் மூடி அந்த எலும்போடு ஒன்றாகச் சேர்ந்து செயல்படும் இந்த உலக உடம்பானது உயிர்களின் பிறவிக்கு காரணமாகிய வினைகள் முடியும் வரை ஒன்றாகச் சேர்ந்து இருக்கும். இந்தப் பிறவியின் வினைகள் முடிந்ததும் உயிரை முடிப்பதாக இருக்கின்றது.

உட்கருத்து:

ஆன்மாக்கள் ஆசையினால் இன்பம் பெறுவதற்காகப் பிறவி எடுப்பதால் அந்த இன்பத்தை அனுபவித்து தீர்க்கும்வரை பேரின்பத்தை மறைத்து அருளும் இறைவன் அந்த ஆன்மாக்கள் எடுத்த பிறவியில் இன்பத்தை அனுபவிப்பதினால் கிடைக்கும் வினைகளையும், அதன் விளைவுகளால் ஏற்படும் துன்பத்தையும், அந்தத் துன்பத்திற்குக் காரணமாக இருக்கும் உலகப் பற்றுக்களையும் சேர்த்து பிறவிக்குள் அடைத்துவிடுகின்றான். இதில் எலும்பும் தோலும் போர்த்திய உடலே சிறையாகவும் உலகப் பற்று எனும் மாயை பூட்டாகவும் வினைகள் சாவியாகவும் இருக்கின்றது. எப்போது உயிர்கள் தமது வினைகளை அனுபவித்துக் கழித்து முடிக்கின்றதோ அப்போது இந்தப் பூட்டு திறந்து உலகத்தில் அதுவரை ஆன்மா அனைத்தையும் அனுபவிக்க உதவிய உடலையும் உயிரையும் அழித்து ஆன்மா விடுதலை பெறுகின்றது.

பாடல் #433: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் (வினைகள் முடியும் வரை மறைத்தல்)

இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி யாரே.

விளக்கம்:

இறைவன் உயிர்களை படைக்கும் தொழிலுக்கு காரியம் புரியும் தெய்வங்களாகிய உருத்திரன் மாபெரும் தவம் புரிபவனாகிய திருமால் வேதங்கள் ஓதி உயிர்களையும் அவை உலகத்தில் அடையும் இன்பத்தையும் படைத்த பிரம்மன் ஆகிய மூவரும் ஒன்றாகச் சேர்ந்து இறைவனின் கட்டளைக்கு ஏற்ப செய்த வலிமை மிக்க இரும்பாலான இயந்திரம் போன்ற உடலுக்குள் மாயையால் மறைத்து இறைவன் வைத்த ஒரு மாபெரும் பரிசு இருக்கின்றது. அதை உயிர்கள் அறியவில்லை.

உட்கருத்து:

உலகத்தில் உயிர்களை படைத்த இறைவன் அதன் வினைகளை அனுபவித்துக் கழிக்கும் வரை அந்த உயிர்களைப் பாதுகாக்க இறைவனே மாபெரும் பரிசாக உயிர்களின் உள்ளத்திற்குள் இருக்கின்றதை மாயையால் மறைத்து அருளுகின்றான்.

பாடல் #434: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

காண்கின்ற கண்ணொளி காதல்செய் யீசனை
ஆண்பெண் அலியுரு வாய்நின்ற ஆதியைப்
பூண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கையின் செயல்அணை யாரே.

விளக்கம்:

உயிர்களின் மேலுள்ள மாபெரும் அன்பினால் உயிர்களுடனே இருந்து அவர்களின் கண்ணில் காணும் ஒளியாகவும் காட்சிகளைக் காட்டும் ஒளியாகவும் இருக்கின்றான் இறைவன். ஆதியாக இருக்கும் இறைவனே அனைத்து உயிர்களின் உருவத்தில் ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும் இருக்கின்றான். உண்ணும் உணவை நாக்கினால் சுவைத்து அதன் இன்பத்தை நெஞ்சத்தில் உணர்வதைப்போலவே தமது தலையின் உச்சியில் இறைவனாக இருக்கும் அமிர்தத்தை நெஞ்சத்தில் உணராத உயிர்கள் பேரின்பத்தைக் கொடுக்கும் அமிர்தத்தின் செயலை உணராமல் இருக்கின்றார்கள்.

உட்கருத்து:

உண்ணும் உணவை நாக்கினால் சுவைத்து அதன் இன்பத்தை நெஞ்சத்தில் உணர்வதைப்போலவே கண்ணில் காணும் ஒளியாகவும் காட்சிகளைக் காட்டும் ஒளியாகவும் இருப்பவன் இறைவன் என்பதையும் நெஞ்சத்தில் உணர்ந்து விட்டால் ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும் இருப்பவன் இறைவன் என்பதையும் தலை உச்சியில் பேரின்பத்தைக் கொடுக்கும் இறைவனாக இருக்கும் அமிர்தத்தையும் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் உயிர்கள் உணவு உண்ணும் ருசிக்கு ஆசைப்பட்டு அதனால் கிடைக்கும் வினையின் காரணமாக மறைக்கப்பட்டு உணராமல் இருக்கின்றார்கள்.

பாடல் #435: இரண்டாம் தந்திரம் – 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

தெருளும் உலகிற்கும் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகைசெய்யும் ஆதிப் பிரானும்
சுருளுஞ் சுடருறு தூவெஞ் சுடரும்
இருளும் அறிநின் றிருட்டறை யாமே.

விளக்கம்:

உண்மை ஞானத்தை அடைந்த உலக உயிர்களுக்கும் விண்ணுலகத் தேவர்களுக்கும் பேரின்பத்தைப் பெறும் வழியை அருளிச் செய்கின்றான் ஆதியிலிருந்தே இருக்கின்ற தலைவனாகிய இறைவன். உண்மை ஞானத்தை அடையாமல் உலக ஆசையில் இருக்கின்ற உயிர்களுக்கு தினமும் மாறி மாறி வரும் சூரியனின் ஒளியையும் அந்தச் சூரியனின் ஒளியை தன்னுள் வாங்கிக் கொடுக்கும் நிலாவின் ஒளியையும் வெப்பமான தீயினால் கிடைக்கும் ஒளியையும் இந்த மூன்றுவித ஒளியும் இல்லாதபோது இருக்கும் இருளை உணர்வினால் அறிந்திருக்கின்ற உயிர்களுக்கு உணர்வினால் அறியமுடியாத மாயை எனும் இருளைக் கொண்ட உள்ளம் எனும் இருட்டறையில் வீற்றிருக்கின்றான் இறைவன்.

உட்கருத்து:

உண்மை ஞானம் பெற்ற உலகத்து உயிர்களுக்கும் விண்ணுலக உயிர்களுக்கும் பேரின்பத்தைக் கொடுக்கும் இறைவன் உண்மை ஞானம் பெறாத உயிர்களுக்கு மாயை எனும் இருட்டையே கொடுக்கின்றான்.



பாடல் #436: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

அரைக்கின் றருள்தரும் அங்கங்கள் ஓசை
உரைக்கின்ற ஆசையும் ஒன்றொடொன் றொவ்வாப்
பரக்கும் உருவமும் பாரகந் தானாய்க்
கரக்கின் றவைசெய்த காண்டகை யானே.

விளக்கம்:

இன்ப துன்பத்திற்கு ஓர் காரணமாய் இருக்கும் உடல் உறுப்புகள், கேட்கின்ற ஓசை, பேசுகின்ற உரை, இவற்றிலெல்லாம் உணருகின்ற ஆசை, ஒன்றுக்கு ஒன்று பொருந்தாமல் வித்தியாசமாய் பலவித உருவங்களில் எங்கும் பரவி இருக்கும் உயிர்கள், பரந்து விரிந்த உலகம் ஆகிய இவை அனைத்தும் இறைவனாகவே இருக்கின்ற பெரிய உண்மையை மறைத்து உயிர்களுக்குள் உணர்ந்து காணக்கூடியவனாக இருக்கின்றான் இறைவன்.

உட்கருத்து:

உயிர்கள் தமது ஐந்து புலன்களால் பார்த்து, கேட்டு, பேசி, சுவைத்து, உணர்ந்து ஆசையைத் தீர்த்துக் கொண்டு வினைகளைப் புரிந்து கொண்டு இருக்கின்றன. இந்த ஐம்புலன்களால் இறைவனை அறிய முடியாது. உள்ளத்துக்குள்ளே உணர்ந்தால் மட்டுமே காணக்கூடியவனாக இருக்கின்றான் இறைவன்.

பாடல் #437: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

ஒளித்துவைத் தென்னுள் ளுறவுணர்ந் தீசன்
வெளிப்பட்டு நின்றருள் செய்திடும் ஈண்டே
களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே.

விளக்கம்:

இறைவன் எமக்குள் மறைத்திருந்ததை அவனது திருவருளால் எமது உள்ளத்துக்குள்ளேயே உணர்ந்து வேண்டிட அவன் யாம் இருந்த இடத்திலேயே வெளிப்பட்டு நின்று அருள் புரிந்தான். எப்போதுமே தெகிட்டி விடாத பேரின்பத்தை வழங்கும் பெருமைக்குரிய இறைவனை உயிரின் உள்ளத்துக்குள் ஒளிந்து கொண்டு இருந்தாலும் உண்மையான அன்போடு உள்ளம் உருக வேண்டினால் தமக்கு முன்னால் வந்து நின்று அருள் புரிவதை உணரலாம்.

பாடல் #438: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கும் அரன்திரு மாலவன்
நன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராகி இசைந்துஇருந் தானே.

விளக்கம்:

ஒவ்வொரு உயிரின் உள்ளத்துக்குள்ளும் தாமாகவே நிறைந்து நின்று மாயையால் மறைக்கும் மகேசுவரன் அழிக்கவும் காக்கவும் சென்று உலகங்களிலெல்லாம் இயங்கிக் கொண்டிருக்கும் உருத்திரன், திருமால், நன்மைக்காக படைப்புகளைச் செய்து கொண்டு தாமரை மலரின் மீது வீற்றிருக்கும் பிரம்மன் ஆகிய இவர்கள் அனைவரும் தாமாகவே இருந்தும் அவர்கள் புரியும் தொழில்களில் ஒன்றாகவே இணைந்து இருக்கின்றான் இறைவன்.

குறிப்பு:

இந்தப் பாடலும் #403 ஆவது பாடலும் ஒன்று போல இருந்தாலும் இப்பாடலில் சிறிது வார்த்தைகளை மாற்றி இறைவனது மாயா காரியங்களைச் சொல்லி அருளுகின்றார் திருமூலர். பாடல் #403 இல் அனைத்தையும் படைக்கவும், காக்கவும், அழிக்கவும் மூவர்களாக இருக்கும் இறைவனே இந்தப் பாடலில் எங்கும் நிறைந்து மறைக்கவும் அனைத்து உயிர்களுக்கும் அருளவும் செய்து ஐவராக இருக்கின்றான் என்பதையும் ஐவராக இருந்து அவன் புரியும் இந்தத் தொழில்களை உயிர்களின் மேல் கொண்ட கருணையினால் மறைத்து வைத்திருக்கின்றான் என்பதையும் திருமூலர் சொல்லியிருக்கின்றார்.



பாடல் #439: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தன்
இருங்கரை மேலிருந் தின்புற நாடி
வருங்கரை ஓரா வகையினிற் கங்கை
அருங்கரை பேணா தழுக்கது வாமே.

விளக்கம்:

மாயையால் உலகப் பற்றுக்களில் சிக்கிக் கொண்ட உயிர்கள் அந்த உலகப் பற்றுக்களின் மேல் வைத்திருக்கும் பாசத்திலேயே மூழ்கிக் கொண்டு தமது உள்ளத்துக்குள் உத்தமனாக வீற்றிருக்கும் இறைவனை உணர்ந்து அவன் அருளிய அமிர்தத்தை அருந்தி பேரின்பத்தில் திளைக்காமல் இருப்பது எப்படி இருக்கின்றதென்றால் கங்கையின் புனித நீரில் மூழ்கித் தமது பாவ அழுக்குகளைப் போக்கிக் கொள்ள முயற்சி செய்யாமல் கரையிலேயே நின்று பார்த்துக் கொண்டிருப்பதைப் போல இருக்கின்றது.

உட்கருத்து:

கங்கையில் மூழ்கி பாவத்தைத் தீர்த்துக்கொள்ள முடிந்த போதும் அதைச் செய்யாமல் கரையிலேயே நின்று பார்ப்பது போல தமக்குள்ளேயே இறைவனை உணர்ந்து பேரின்பத்தைப் பெற முடிந்த போதும் அதைச் செய்யாமல் உலகச் சிற்றின்பங்களிலேயே திளைத்து இருப்பதைத்தான் உயிர்கள் விரும்புகின்றன.



பாடல் #440: இரண்டாம் தந்திரம் - 12. திரோபாவம் [வினைகள் முடியும் வரை மறைத்தல்]

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணமே ஆகிநின் றானே.

விளக்கம்:

உயிர்களுக்கு நல்ல முறையில் பயன்படும் பல்வேறு விதமான பாத்திரங்களை குயவன் செய்தாலும் அனைத்தையும் ஒரே விதமான களிமண்ணில் இருந்து தான் செய்கின்றான். அதுபோலவே உலகத்தில் பல்வேறு உருவங்களில் பல பிறவிகள் எடுத்தாலும் அனைத்து பிறவிகளிலும் ஆத்மாவாக இறைவன் ஒருவனே இருக்கின்றான். உயிர்களின் கண்கள் இரண்டாக இருந்தாலும் அவை ஒரேவிதமான காட்சிகளைக் கண்டாலும் தமது உருவத்தை அவற்றால் காண முடியாது. அதுபோலத்தான் இறைவனும் ஒவ்வொரு உயிரின் உள்ளத்துக்குள் இருந்து உயிர்களுக்கு அனைத்தையும் உணர வைத்தாலும் தம்மையே உணர முடியாதவனாக இருக்கின்றான்.

உட்கருத்து:

அனைத்தையும் தமது கண்களால் பார்க்கும் உயிர்கள் தமது கண்களின் பிம்பத்தை கண்ணாடியில் காண முடியுமே தவிர தமது கண்களால் தமது கண்களையே காண முடியாது. அதுபோலவே மாயையால் மறைந்திருக்கும் இறைவன் உள்ளத்துக்குள்ளேயே இருந்து அனைத்தையும் உணர்த்தினாலும் அவனை மட்டும் உணர முடியாமல் இருக்கும்படி உயிர்களை மாயையால் மறைத்து வைத்திருக்கின்றான்.

பாடல் #441: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் [அருளல்]

எட்டுத் திசையும் அடிக்கின்ற காற்றவன்
வட்டத் திரையனல் மாநிலம் ஆகாசம்
ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை
கட்டி அவிழ்க்கின்ற கண்ணுதல் காணுமே.

விளக்கம்:

எட்டுத் திசைகளிலும் வீசுகின்ற காற்றும், வட்ட வடிவ உலகைச் சூழ்ந்து இருக்கும் அலை கடல் நீரும், உலகம் தனக்குள்ளிருந்தும் தன்னைச் சுற்றியிருக்கும் வளி மண்டலங்களிலிருந்தும் பெறும் நெருப்பும், உள்ளிருக்கும் நெருப்பை மூடி விரிந்து பரவி இருக்கும் இந்த மாபெரும் நிலமும், உலகத்தைச் சுற்றியிருக்கும் வளிமண்டலத்தைத் தாண்டி இருக்கும் ஆகாயமும் ஆகிய பஞ்ச பூதங்களையும் உள்ளடக்கி ஆன்மாவோடு உயிரைச் சேர்த்து அதை நிலைபெற வைக்கும் மூச்சுக்காற்றை அடைத்து வைத்த தோலால் ஆன பையைப் போன்ற உடலை அவரவர் வினைகளுக்கு ஏற்ப இறக்கும் காலம் வரும் வரை பாதுகாப்பாக கட்டி வைத்தும் காலம் வரும்போது அவிழ்த்துப் போட்டும் விளையாடுவது நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானின் அருளே.

உட்கருத்து:

வினைகள் முடியும் வரை உயிர்களை உலகத்தில் பஞ்ச பூதங்களை அடக்கிய உடலில் பிறக்க வைத்து அவற்றை காலம் வரும் வரை காப்பாற்றி வந்து முடியும் காலம் வந்தபின் அழித்து அடுத்த நிலைக்குச் செல்லும்படி செய்வது அனைத்தும் இறைவனின் திருவருளே ஆகும்.

பாடல் #442: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் [அருளல்]

உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமனில்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்கும்
தச்சும் அவனேதான் சமைக்கவல் லானே.

விளக்கம்:

தலை உச்சியிலுள்ள சகஸ்ரரதளத்தில் ஒளிவீசித் திகழும் நாத வடிவான இறைவனை அன்பு செய்து அவனோடு சேர்ந்து பேரின்பத்தை உணர்ந்தவர்களுக்கு மரணம் என்பது இல்லாததால் எமன் கிடையாது. விரிந்து பரந்திருக்கின்ற இந்த உலகத்தில் கண்களால் காணக்கூடிய சூரியன், சந்திரன், நெருப்பில் இருந்து வரும் மூன்றுவித ஒளிகளைக் கொடுத்து அருளிய அவனேதான் கண்களால் காண முடியாத ஒளியாக சகஸ்ரரதளத்தில் கலந்து இருக்கின்றான். அந்த ஒளியில் தன்னை நாடி வருகின்றவர்களுக்கு பேரின்பத்தை வழங்கி மரணமில்லாத பெருவாழ்வை அருளக்கூடியவனாக இறைவன் இருக்கின்றான்.

பாடல் #443: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் [அருளல்]

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசையில் உலகம் அதுவிது வாமே.

விளக்கம்:

குயவன் களிமண்ணைப் பிடித்து தனது மனதுக்கு எதுவெல்லாம் நன்மை தரும் என்று தோன்றுகின்றதோ அந்த மாதிரியெல்லாம் பாத்திரங்கள் வரும்படி வளைத்து உருவாக்குவான். அந்தக் குயவனைப் போலவே குருநாதனாக இருக்கும் எம் இறைவனும் ஆன்மாக்களின் வேண்டுதலுக்கு இணங்கி எதுவாக இருந்தால் அவர்கள் வேண்டிக்கொண்டது நிறைவேறும் என்பதை அறிந்து அதுவாகவே அவர்களை, அசைவில்லாத இந்த அண்டசராசரத்தில் அசைவு பெற்றுச் சுழலும் உலகங்களில் பல்வேறு வித உயிர்களாகப் படைத்து அருளுகின்றான்.

உட்கருத்து:

உயிர்கள் உலகத்தில் பிறப்பது அவற்றின் ஆசையினால்தான். ஆன்மாவாக இருக்கும் உயிர் ஆசைப்பட்டுவிடும் போது இறைவனை வேண்டி உயிர் எடுத்து உலகத்தில் பிறக்கிறது. அப்படிப் பிறக்கும் உயிர் எந்த உருவத்தில் இருந்தால் விரைவில் ஆசைகளைத் தீர்த்துக்கொண்டு தனது வினைகளையும் கழித்துக் கொள்ளும் என்பதை அறிந்த இறைவன் அந்த விதத்திலேயே அவர்களைப் படைத்து அருளுகின்றான்.

பாடல் #444: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் (அருளல்)

விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்
படையுடை யான்பரி சேஉல காக்கும்
கொடையுடை யான்குண மேகுண மாகும்
சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே.

விளக்கம்:

காளையை வாகனமாகக் கொண்டவனும் வேறு பட்ட பலவித உருவங்களில் ஒன்றாக இருப்பவனும் பூத கணங்களைப் படையாகக் கொண்டவனும் ஆன்மாக்களுக்குக் கொடுத்த மிகப்பெரிய பரிசு உலகத்துப் பிறவியாகும். பிறவியைப் பரிசாகக் கொடுத்த மாபெரும் வள்ளலாகிய இறைவன் அந்தப் பிறவியில் உயிர்கள் அனுபவிக்க வேண்டிய ஆசைகளையும் வினைகளையும் அடைய வேண்டிப் பலவித குணங்களையும் வைத்து அருளுகின்றான். குணங்களையும் மீறித் தம்மை சிந்திக்கும் அடியவர்களுக்கு அவர்களின் சிந்தனையிலேயே திரிசடையைத் தலையில் தரித்த இறைவன் பேரின்பமாக சேர்ந்து இருந்து அருளுகின்றான்.

உட்கருத்து:

ஆன்மாக்கள் ஆசைக்கும் வினைக்கும் பிறவி எடுக்கும்போது அதற்கேற்ற உடலையும் உள்ளத்தையும் குணங்களையும் கொடுத்து அருளும் இறைவன் தன் தலையில் திரித்துச் சூடிய சடைபோல வினைகளால் முற்றும் சூழப்பட்ட ஆன்மாக்கள் அதையும் தாண்டி இறைவனை நினைக்கும் போது அவர்களின் சிந்தனையில் பேரின்பமாக வந்து அருளுகின்றான்.

பாடல் #445: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் [அருளல்]

உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்
உகந்துநின் றேபடைத் தான்பல ஊழி
உகந்துநின் றேபடைத் தான்ஐந்து பூதம்
உகந்துநின் றேஉயிர் ஊன்படைத் தானே.

விளக்கம்:

ஆன்மாக்களின் மேல் வைத்த மாபெரும் அன்பினால் அவை ஆசைகளைத் தீர்த்துக் கொள்ளட்டும் என்று ஏழு உலகங்களையும் படைத்து அருளினான். அந்த உலகங்களின் காலம் முடியும் போது அவற்றை அழித்து மீண்டும் புதியதாக உருவாக்கி அருளினான். உலகங்களும் உயிர்களும் தனது தொழிலை செய்வதற்காக பஞ்ச பூதங்களையும் படைத்து அருளினான். ஆன்மாக்கள் பிறவி எடுக்க உயிரையும் உடலையும் கொடுத்து அருளினான்.

பாடல் #446: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் (அருளல்)

படைத்துடை யான்பண் டுலகங்கள் ஏழும்
படைத்துடை யான்பல தேவரை முன்னே
படைத்துடை யான்பல சீவரை முன்னே
படைத்துடை யான்பர மாகிநின் றானே.

விளக்கம்:

ஏழு உலகங்களைப் படைத்து அவை தம் வினைகளைத் தீர்த்தபின் அவற்றை அழித்து தம்மோடு மீண்டும் சேர்த்துக் கொண்டு அருளுகின்றவன் இறைவன். ஏழு உலகங்களும் தன் தொழில்களை செய்ய பலவித தேவர்களையும் படைத்து அருளினான். பலவித உயிர்களைப் படைத்து தம் வினைகளைத் தீர்த்தபின் அவற்றை அழித்து தம்மோடு மீண்டும் சேர்த்துக் கொண்டு அருளுகின்றவன் இறைவன். அந்த உயிர்கள் தன்னை நாடி வரும்போது அனைத்திற்கும் மேலான பரம்பொருளாகவும் நின்று அருளுகின்றான்.

பாடல் #447: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் [அருளல்]

ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதங்கள்
ஆதி படைத்தனன் ஆயபல் ஊழிகள்
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவையும் தாங்கிநின் றானே.

விளக்கம்:

அனைத்திற்கும் ஆதியான இறைவனே உயிர்கள் வாழ்வதற்க்காக ஆகாயம், நீர், நெருப்பு, காற்று, மண் என ஐந்து பெரும் பூதங்களைப் படைத்து அருளினான். அந்த உயிர்கள் வினைகள் முடியும் வரை வாழ்ந்து தன்னை வந்து அடைவதற்காக பல ஊழிக்காலங்களையும் அருளினான். அந்த உயிர்கள் தவமிருந்து தன்னை நாடி வரும் போது அவர்களை எண்ணிலடங்காத பல தேவர்களாகக்கி அருளுகின்றான். இப்படி அனைத்தையும் படைத்த இறைவனே தான் படைத்த அனைத்தையும் தாங்கிக் கொண்டு பாதுகாத்து அருளுகின்றான்.

பாடல் #448: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் [அருளல்]

அகன்றான் அகலிடம் ஏழுமொன் றாகி
இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்
சிவன்றான் பலபல சீவனும் ஆகி
நவின்றான் உலகுறு நம்பனு மாமே.

விளக்கம்:

பரந்து விரிந்த ஏழு உலகங்கள் முழுவதும் அகன்று பரவி இருந்தாலும் அனைத்தும் ஒருவனாய் இருப்பவன் இறைவன் ஒருவனே. இவன் தான் இறைவன் என்று சுட்டிக் காட்டி உணர்த்தக் கூடிய அளவிற்கு இறைவன் எளிமையானவன் இல்லை. அவனே பலவித ஆன்மாக்களின் உயிரோடு உயிராக உடனே இருந்து பாதுகாத்து அருளுகின்றவன். அவனே பல்வேறு குருநாதர்களாய் வந்து உயிர்களுக்கு நல் வழியை போதித்து அருளிய அவனே உலகத்து உயிர்களெல்லாம் நம்பியிருக்கும் தலைவனும் ஆவான்.

பாடல் #449: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் [அருளல்]

உண்ணின்ற சோதி உறநின்ற ஓருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வானோர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி மாபோதக மாமே.

விளக்கம்:

உயிர்களின் உள்ளத்திற்குள் ஒளியாக இருக்கும் இறைவனே உயிரோடு உயிராகவும் கலந்து ஒரே உடலாக இருக்கின்றான். அவனே விண்ணுலக அமரர்களெல்லாம் விரும்பித் தொழும் அனைத்திற்கும் மேலான பரம்பொருள். அவனே மண்ணுலக அடியவர்களெல்லாம் புகழ்ந்து போற்றும் பல்வேறு உருவங்களாகத் திருமேனி தரித்து இருப்பவன். அவனே கண்களுக்குள் இருந்து காட்சியைக் காட்டும் கருமணியாகவும் இருந்து கண்களால் காண முடியாத பேருண்மைகளைக் குருநாதனாய் இருந்து போதிப்பவனும் ஆவான்.

பாடல் #450: இரண்டாம் தந்திரம் - 13. அநுக்கிரகம் [அருளல்]

ஆரும் அறியாதவ் வண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணும் சுகமுமறிந் தேனே.

விளக்கம்:

யாராலும் அறிந்துவிட முடியாத அண்டசராசரங்கள் அடங்கிய திருமேனியைக் கொண்ட இறைவன் நீரில் பால் சேர்க்கும் போது எப்படி இரண்டும் ஒன்றாகிக் கலந்து விடுகின்றதோ அதுபோலவே உலகத்தில் பிறக்கும் உயிர்களுடன் உயிராகக் கலந்து உடலாகி ஒன்றாக இருப்பதை இடைவிடாமல் கண்டு பேரின்பம் அடையும் பாக்கியத்தை அவனது திருவருளால் யான் பெற்றிருக்கின்றேன்.

பாடல் #451: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

ஆக்குகின் றான்முன் பிரிந்த இருபத்தஞ்
சாக்குகின் றான்அவன் ஆதிஎம் ஆருயிர்
ஆக்குகின் றான்கர்ப்பக் கோளகை யுள்ளிருந்
தாக்குகின் றான்அவன் ஆவது அறிந்தே.

விளக்கம்:

உயிர்கள் உலகத்தில் பிறவி எடுக்கும் முன்பு அவற்றின் முன் ஜென்மத்தில் அவற்றை விட்டும் பிரிந்து இருந்த இருபத்தைந்து தத்துவங்களை ஒன்றாகச் சேர்த்து ஆதியாக இருக்கும் எமது ஆருயிரான இறைவன் உயிரை உருவாக்குகின்றான். உடலுடன் கூடிய உயிர் இந்த உலகத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிந்து அந்தக் கரு உருவாகும் போதே அதற்கு ஏற்றவாறு அந்தக் கர்ப்பப் பையின் உள்ளிருந்தே உடலுடன் கூடிய உயிரை உருவாக்கி அருளுகின்றான் இறைவன்.

இருபத்தைந்து தத்துவங்கள்:

5 பூதங்கள்: நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம். 5 புலன்கள்: கண்களால் பார்த்தல், காதுகளால் கேட்டல், வாயால் சுவைத்தல், மூக்கால் நுகருதல், தோலால் தொடுதல். 5 ஞானேந்திரியங்கள்: ஓசை - கேட்பது, ஊறு - உணர்தல், ஒளி - பார்ப்பது, சுவை - உண்பது, நாற்றம் - முகர்வது. 5 கன்மேந்திரியங்கள்: வாய் - பேச்சு, கைகள் - செயல், கால்கள் - போக்குவரவு, எருவாய் - கழிவு நீக்கம் பகுதி, கருவாய் - இன்பமும் பிறப்பும். 4 அந்தக்கரணங்கள்: மனம் - எண்ணங்கள், புத்தி - அறிவு, சித்தம் - சிந்தனை, அகங்காரம் - நான் எனும் நினைப்பு. 1 புருடன்: ஆன்மா.

பாடல் #452: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்
செறிகின்ற தானத்துச் செந்தாள் கொளுவிப்
பொறைநின்ற இன்னுயிர் போந்துறை நாடப்
பறிகின்ற பத்தெனும் பாரஞ்செய் தானே.

விளக்கம்:

தியானத்தின் மூலம் உயிர்கள் அறியக்கூடிய ஆறு ஆதார சக்கரங்களில் முதலாவதான மூலாதரத்திற்கு மேல் இருக்கின்ற சுவாதிட்டான சக்கரத்தின் அருகில் மூச்சுக்காற்றின் வெப்பமும் பித்த நீரும் கலந்து இருக்கின்ற கர்ப்பப் பைக்குள் செக்கச் சிவந்த சிறு கால்களோடு தலையையும் சேர்த்து உடலை வைத்திருக்கின்ற கருவை உடலில் இருக்கின்ற வெப்பமும் நீரும் சிதைத்துவிடாத படி பொறுமையோடு உயிருக்கு உயிராய் உடன் இருந்து பாதுகாக்கும் இறைவன் அந்தக் கரு வெளியே போக வழி தேடும் போது அது இன்னமும் வளர்ச்சி பெற்று முழுமையடைந்த பிறகே வெளியே போக வேண்டும் என்று அதற்கான தேவையாக பத்து மாதங்களை காலக் கெடுவாக வைத்து அந்தக் காலக் கெடு முடியும் வரை கருவையும் காத்து அதைத் தாங்கிக் கொண்டு இருக்கின்ற தாய்க்கும் அதன் பாரம் பாதிக்காத படி பாதுகாத்து அருளுகின்றான் இறைவன்.

பாடல் #453: இரண்டாம் தந்திரம் – 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

இன்புறு காலத் திருவர்முன் பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வானுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத்து அமைத்தொழிந் தானே.

விளக்கம்:

ஆணும் பெண்ணும் சிற்றின்பத்தில் மகிழ்ந்து கூடுகின்ற போதே அவர்களின் முன் ஜென்ம வினைகளாலும் புதிதாக பிறக்கும் உயிரின் முன் ஜென்ம வினைகளாலும் இவர்களுக்கு இந்த உயிர் பிறக்க வேண்டும் என்பதை முடிவு செய்து அந்த உயிரினால் பெற்றவர்களும் பெற்றவர்களால் அந்த உயிரும் அடையும் துன்பத்திற்கு காரணமாக இருக்கும் பாசம் எனும் துயரமாகிய பந்தத்தால் கட்டி வைத்து அந்த உயிர் உலகத்தில் எத்தனைக் காலம் வாழ வேண்டும் என்பதையும் அந்த உயிரின் பண்புகளையும் அந்த உயிரின் வாழ்க்கை முறையையும் முன்பே முடிவு செய்து ஆணும் பெண்ணும் அன்பாக சேர்ந்த போதே அதற்கு ஏற்றவாறு கருவை அமைத்து முடிக்கின்றான் இறைவன்.

பாடல் #454: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

கருவை ஒழிந்தவர் கண்டநால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்துமற் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்த
துருவம் இரண்டாய் ஓடி விழுந்ததே.

விளக்கம்:

இருபத்தைந்து தத்துவங்களும் (பாடல் #451 இல் காண்க) ஒன்றாகச் சேர்ந்து ஆணும் பெண்ணும் சேரும் பொழுது உருவாகும் கருமுட்டை கருவாக மாறி அதுவே ஆண் பெண் என்கிற இரண்டுவித உருவங்களாகவும் மாறுகின்ற உண்மையை பிறவி இல்லாத நிலையை அடைந்த ஞானிகள் கண்டு உணர்ந்திருக்கின்றார்களே தவிர மற்றவர்கள் அறியவில்லை.

பாடல் #455: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதலைந்தும் ஈரைந்தோ டேறிப்
பொழிந்து புனல்பூதம் போற்றுங் கரணம்
ஒழிந்த நுதல்உச்சி உள்ளே ஒளித்ததே.

விளக்கம்:

ஆணும் பெண்ணும் சேர்ந்த போது இருபத்தைந்து தத்துவங்களில் (பாடல் #451 ல் காண்க) ஐந்து புலன்களைத் தவிர்த்து ஆணிடமிருந்து ஐந்து ஞானேந்திரியங்களும் ஐந்து கன்மேந்திரியங்களும் சேர்ந்து பெண்ணின் கருப்பைக்குள் பனிக்குட நீரில் உருவான கருமுட்டைக்குள் ஐந்து பூதங்களும் நான்கு அந்தக் கரணங்களும் சேர்த்து கருவாகி அதன்பின் உருவம் பெறும் போது ஐந்து புலன்களும் சேர்ந்து விட மீதி இருக்கும் புருடன் மட்டும் அந்தக் கருவுடம்பின் நெற்றி உச்சியின் உள்ளே சென்று ஒளிந்து கொண்டது.

உட்கருத்து:

கரு உற்பத்தியில் இருபத்தைந்து தத்துவங்களும் அடங்கியிருக்கும் முறையில் முதலில் ஆணிடமிருந்து ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் சேர்ந்து பிறகு பெண்ணின் கருப்பைக்குள் செல்லும் போது ஐந்து பூதங்களும் அந்தக் கரணங்களும் சேர்ந்து கருவிலிருந்து குழந்தையாகும் போது ஐந்து புலன்களும் சேர்ந்து அந்தக் குழந்தை பிறக்கும் போது ஆன்மா புருவ மத்தியில் சென்று மாயையால் தன்னை மறைத்துக் கொள்கின்றது. மற்ற இருபத்து நான்கு தத்துவங்களையும் உயிர்கள் அறியவும் உணரவும் முடியும். கருவில் ஐந்து புலன்கள் கிடையாது உடல் முழுமையடைந்து பிறந்த பின்பே ஐந்து புலன்களும் தன் வேலைகளை செய்யும்.

பாடல் #456: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவும்
கூவியே அவிழுங் குறிக்கொண்ட போதே.

விளக்கம்:

பூக்களின் மகரந்தத்தில் கலந்த காற்று உலகத்தில் பூவின் நறுமணத்தை பரப்பி காற்றிலேயே தங்க வைத்து அந்தக் காற்றை மற்ற உயிர்கள் சுவாசிக்கும் போது பூவின் நறுமணத்தை நுகரச் செய்வது போல தாயின் கருப்பைக்குள் இருக்கும் கருவிற்குள் புகுந்து இருக்கும் உயிரில் கலந்து இருக்கும் தனஞ்சயன் என்கிற காற்று அது குறிப்பிட்ட காலத்தில் குழந்தையாகப் பிறந்து முதன் முதலில் கூவி அழும் போது வெளிவந்து குழந்தையை முதன்முதலில் சுவாசிக்கச் செய்கிறது.

அறிவியல் விளக்கம்:

கருப்பைக்குள் இருக்கும் சிசு சுவாசிப்பது இல்லை. அதற்கு நுரையீரல்கள் உருவானாலும் அந்த நுரையீரல்களுக்குள் அமிலம் கலந்த நீரே நிரம்பியிருக்கும். கரு வளர்வதற்குத் தேவையான காற்றுக்களையும் சத்துக்களையும் தாயின் தொப்புள் கொடியின் மூலம்தான் எடுத்துக் கொள்கிறது. தொப்புள் கொடியில் இரண்டு நரம்புகள் இருக்கின்றது. அதில் முதலாவது நரம்பின் வழியே வரும் இரத்தத்தில் தாயின் மூச்சுக் காற்றும் தாய் சாப்பிட்ட உணவிலிருந்த சத்துக்களும் குழந்தைக்கு கிடைக்கின்றன. குழந்தை வெளிவிடும் நச்சுக் காற்றும் மற்ற கழிவுகளும் அமில நீரோடு சேர்ந்து இரண்டாவது நரம்பின் வழியே தாயிடம் வந்து தாயின் உடல் கழிவுகளோடும் மூச்சோடும் கலந்து வெளியேறுகின்றது. குழந்தையின் உடலில் காற்று இருந்தாலும் அது பிறந்த பிறகு வாய்விட்டு கூவி அழும்போது தான் மூச்சுக்காற்றை முதன் முதலில் சுவாசிக்கின்றது. இதற்குக் காரணமாக இருப்பது தனஞ்சயன் எனும் காற்றாகும்.

2018-7-13 09:05

பாடல் #457: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விரட்டானெனிற் பன்றியு மாமே.

விளக்கம்:

கரு உருவாகும் போது அதனுடன் போகின்ற எட்டுவிதமான சூட்சும உருவங்களும், பத்துவிதமான வாயுக்களும், எட்டுவிதமான குணங்களும், இவற்றில் மூழ்கி இருக்கின்ற ஆன்மாவும் அது உயிராக உடலெடுக்கும் போது உருவாகும் ஒன்பது வாயில்களும், உடலின் மூலாதாரத்தில் இருக்கும் நாகமாகிய குண்டலினியும் பன்னிரண்டு அங்குலம் (கழுத்துக்குக் கீழே எட்டு அங்குலம் மனிதர்களுக்கும் கழுத்துக்கு மேலே நான்கு அங்குலம் யோகிகளுக்கும்) ஓடிக் கொண்டிருக்கும் மூச்சுக் காற்றும் இவை அனைத்தையும் அடக்கி ஆளும் இறைவன் தனது அருளால் பாதுகாத்து வழி நடத்தாமல் இருந்தால் கருவில் பிறக்கும் குழந்தை இழி பிறப்பாக போய் விடும்.

சூட்சும உருவங்கள் 8 - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், புத்தி, மனம், அகங்காரம்.
வாயுங்கள் 10 - பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.
குணங்கள் 8 - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், துன்பம், அகங்காரம்.
உடலின் வாயில்கள் 9 - 2 கண்கள், 2 காதுகள், 2 மூக்குத் துவாரங்கள், வாய், நீர்வாய், ஆசனவாய்.

பாடல் #458: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

ஏற எதிர்க்கில் இறையவன் றானாகும்
மாற எதிர்க்கில் அரியவன் றானாகும்
நேரொக்க வைக்கின் நிகர்போதத் தானாகும்
பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே.

விளக்கம்:

ஆணின் சுக்கிலம் பெண்ணின் சுரோணிதத்தை எதிர்த்துச் சென்றால் பிறக்கும் குழந்தை உருத்திரனை ஒத்த தாமச குணம் உடையதாக இருக்கும். பெண்ணின் சுரோணிதத்தை ஆணின் சுக்கிலம் எதிர்த்து சென்றால் பிறக்கும் குழந்தை திருமாலை ஒத்த சத்துவ குணம் உடையதாக இருக்கும். ஆணின் சுக்கிலமும் பெண்ணின் சுரோணிதமும் சமமாக எதிர்த்து இணைந்தால் பிறக்கும் குழந்தை பிரம்மனை ஒத்த இராசத குணம் உடையதாக இருக்கும். ஆணும் பெண்ணும் சமமான இன்பத்தில் இணைந்திருந்தால் பிறக்கும் குழந்தை மாபெரும் அரசன் போல ஆளும் தன்மையைக் கொண்டு இருக்கும்.

குணங்களின் விளக்கம்:

தாமச குணம் (தாமசம்) - காமம், வெகுளி, மயக்கம், கலக்கம், கோபம், பேராசை, பொய் பேசுதல், இம்சை, யாசித்தல், வெளிவேசம், சிரமம், கலகம், வருத்தம், மோகம், கவலை, தாழ்மை, உறக்கம், அச்சம், சோம்பல், காரணமில்லாமல் பிறரிடம் பொருட்களை எதிர்பார்த்தல் மற்றும் பிறர்க்கு கேடு விளைவிக்கும் செயல்கள் செய்வது, பகட்டுக்காக செயல்கள் செய்வது.

சத்துவ குணம் (சாத்விகம்) - நற்காரியங்களில் மனதைச் செலுத்தும் குணம், மன அடக்கம், புலன் அடக்கம் (தமம்), துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு (சகிப்புத் தன்மை), விவேகம், வைராக்கியம், தவம், வாய்மை, கருணை, மகிழ்ச்சி, நம்பிக்கை, பாவம் செய்வதற்கு கூச்சப்படுதல், தன்னிலேயே மகிழ்ந்திருத்தல், தானம், பணிவு மற்றும் எளிமை.

இராசத குணம் (இராட்சதம்) - ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தானம், கல்வி, ஆசை, முயற்சி, இறுமாப்பு, வேட்கை, திமிர், தெய்வங்களிடம் செல்வங்கள் வேண்டுவது, வேற்றுமை எண்ணம், புலனின்பப் பற்று, சண்டைகளில் உற்சாகம், தன் புகழில் ஆசை, மற்றவர்களை எள்ளி நகையாடுவது, பராக்கிரமம், பிடிவாதத்துடன் ஒரு முயற்சியை மேற்கொள்ளுதல்.

பாடல் #459: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

ஏயங் கலந்த இருவர்தஞ் சாயத்துப்
பாயுங் கருவும் உருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்
மாயங் கலந்த மனோலய மானதே.

விளக்கம்:

எத்தனையோ பிறவிகளை எடுத்து முடிந்த பின் எடுத்த இந்த பிறவியில் வினைப் பயனால் ஆண் பெண் இருவரும் சந்தித்து இன்பத்தில் கலந்து அவர்களது உருவங்களிலிருந்தும் அவர்களின் முன்னோர்களது உருவங்களிலிருந்தும் பலவிதமான அம்சங்களை எடுத்துக் கொண்டு அந்த அம்சங்களின் சாயலிலேயே உருவம் கொண்டு கரு உருவாகின்றது. ஆணும் பெண்ணும் இன்பத்தில் கலந்து பின் பெண்ணிடம் உருவான அந்தக்கரு புதிதாக உருவானதாக அனைவராலும் அறிந்து கொள்ளப்பட்டாலும் அந்தக் கரு உருவாகுவதற்கு முன்பே இந்த ஆணுக்கும் இந்த பெண்ணுக்கும் தான் இந்தக் கரு உருவாக வேண்டும் என்பது வினைப் பயனால் முடிவு செய்யப்பட்ட ஒன்று என்பதை உணராத ஆணும் பெண்ணும் மாயையில் ஒருவரோடு ஒருவர் கலந்து கரு உருவாகக் காரணமாகி அந்தக் கருவுக்கும் தங்களது மாயையோடு சேர்த்து தங்களது பலவித குணங்களையும் கொடுத்து விடுகின்றார்கள்.



பாடல் #460: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

கர்ப்பத்துக் கேவல மாயாள் கிளைகூட்ட
நிற்குந் துரியம் பேதித்து நினைவெழ
வற்புறு காமியம் எட்டாதல் மாயேயஞ்
சொற்புறு தூய்மறை வாக்கினாஞ் சொல்லே.

விளக்கம்:

கரு உருவாகும் போது முதலில் கரு தனித்து கேவல நிலையில் இருக்கும். அதன் பிறகு மாயை அதன் தத்துவங்களை கருவோடு சேர்த்து விடும்போது அதுவரை துரிய நிலையில் உறக்கத்தில் இருந்த கரு அந்த நிலையிலிருந்து மாறி விழித்துக் கொண்டு நினைவு தோன்ற ஆரம்பிக்கும். நினைவு தோன்றிய பின் அந்தக் கருவின் முற்பிறவிகளிலிருந்து தொடர்ந்து வரும் வினைப் பயன்களால் வரும் கன்மத்துடன் (மும்மலங்களில் ஒன்று) மாயேயம் என்கிற அசுத்த மாயையின் ஏழுவித காரியங்களும் (காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை) சேர்ந்து மொத்தம் எட்டுவித மாயைகளை அந்தக் கரு பெற்றுவிடும். இதுவே கருவுடன் மாயைகள் சேரும் முறைமை என்று தூய்மையான வேதங்கள் சொல்லும்.

பாடல் #461: இரண்டாம் தந்திரம் – 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

என்பால் மிடைந்து நரம்பு வரிகட்டிச்
செம்பால் இறைச்சித் திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நண்பால் ஒருவனையே நாடுகின் றேனே.

விளக்கம்:

உயிர்கள் தாம் ஆசைப்பட்ட இன்பத்தை அடைய வேண்டும் என்று எலும்புகளை இணைத்து நரம்புகளால் வரிசையாகக் கட்டி வைத்து சிவந்த இரத்தத்தை வைத்து தோலால் அழகாக மூடி திருத்தமாக செய்யப்பட்ட இந்த வீடாகிய உடலுக்கு உயிர் கொடுத்த இறைவனின் கருணையை எண்ணி அவன் மீது பொங்கிய நட்பினால் அவன் ஒருவனை மட்டுமே அன்பினால் தேடி அடைகின்றேன்.

உட்கருத்து:

ஆன்மா ஆசைப்பட்டுவிடும் போது அந்த ஆசையைத் தீர்க்க பிறவி கொடுத்து அருமையான உடலைக் கருவிலிருந்தே செதுக்கி அழகான வீடாக்கி அதனுள் உயிராக உலவ விட்ட இறைவனை உயிர்கள் எப்போதும் நினைத்து அவன் கருணையை எண்ணி அன்பு கொண்டு அவனைத் தமக்குள் தேடி அடைய வேண்டும்.

பாடல் #462: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

பதஞ்செய்யும் பால்வண்ணன் மேனிப் பகலோன்
இதஞ்செய்யும் ஒத்துடல் எங்கும் புகுந்து
குதஞ்செய்யும் அங்கியின் கோபம் தணிப்பான்
விதஞ்செய்யும் மாறே விதித்தொழிந் தானே.

விளக்கம்:

நிலவைப் போன்ற வெள்ளை நிறத்தில் சூரியனைப் போன்ற பிரகாசிக்கும் ஒளி உடலாக இருக்கின்ற இறைவன் தாயின் சூரிய கலை [வலது நாசி] மூச்சுக்காற்றின் மூலம் இதமான சூட்டையும் சந்திர கலை [இடது நாசி] மூச்சுக்காற்றின் மூலம் இதமான குளிர்ச்சியையும் கொண்டு கருவின் உடலோடு கலந்து எங்கும் பரவி நின்று தாயின் அடிவயிற்றில் உணவைச் செரிப்பதற்காக சூடாக உருவாகும் நெருப்பினாலும் நீராலும் கரு ஒருவித பாதிப்பும் அடையாமல் இருக்கும்படி காத்து நின்று குழந்தை எந்த விதமாக வளர வேண்டுமோ அப்படியெல்லால் வளர வைத்து குழந்தை பிறக்கும் வரை காத்து அருளுகின்றான்.



பாடல் #463: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

ஒழிபல செய்யும் வினையுற்ற நாளே
வழிபல நீராட்டி வைத்தழு வாங்கிப்
பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே.

விளக்கம்:

ஆன்மா தான் இருக்கும் உடலின் மூலம் அனுபவிக்க வேண்டிய வினைகளை எப்போது அனுபவித்து முடிக்கின்றதோ அப்போதே அதனது அடுத்த பிறவியை எடுக்க உதவும் பலவிதமான வழிகளை உருவாக்கி விடுகின்றான் இறைவன். ஆன்மா இருக்கும் உடல் இறந்த பின் சுற்றத்தாரால் நீராட்டப்பட்டு சுடுகாட்டிற்கு சுட்டெரிக்க எடுத்துச் செல்லும்போதே அதிலிருந்து வெளிப்பட்ட ஆன்மாவை இன்னும் அனுபவிக்க வேண்டிய பலவிதமான வினைகளான பந்த பாசத்தால் கட்டி புதிய கருவாக உருவாக்கி கர்ப்பப் பைக்குள் வைத்து அங்கே பெண்ணின் அடிவயிற்றில் இருக்கும் நெருப்பினாலும் நீராலும் பாதிக்கப் படாதபடி காப்பாற்றி அருளுகின்றான் இறைவன்.

பாடல் #464: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்
புக்கிடும் எண்விரல் புகுந்து நால்விரல்
அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே.

விளக்கம்:

ஆணின் சுக்கிலமும் பெண்ணின் சுரோணிதமும் சிவப்பு நிற கருமுட்டையாக வளர்கிறது. இதற்காக ஆணின் சுக்கிலம் எட்டு விரற்கடை அளவும் பெண்ணின் சுரோணிதம் நான்கு விரற்கடை அளவும் பயணிக்கின்றது. இப்படி பயணிக்கின்ற அனைத்தும் கருமுட்டையாக வளர்வது இல்லை. இறைவன் அருளால் பிழைத்த ஒன்றோ அல்லது சமயத்தில் பலவும் ஒன்றாக ஒரே சமயத்தில் கருமுட்டையாக வளர்கிறது. அப்படி உருவான கருமுட்டை உடல்தான் எட்டு ஜான் அளவிற்கு வளர்கிறது.

அறிவியல் விளக்கம்:

கருவில் உருவாகும் குழந்தையிலிருந்து பிறந்து வளர்ந்து இறக்கும் மனிதன் வரை அனைவருக்குமே அவர்களது விரல்களால் அளவிட்டால் எட்டு ஜான் அளவிற்கே உடல் இருக்கும் இதைத்தான் திருமூலரும் எண் சாண் அது ஆகுமே என்று அருளுகின்றார்.

பாடல் #465: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனும்
கோசத்துள் ஆகம் கொணர்ந்த கொடைத்தொழில்
ஓகத்துள் ஆங்கே இரண்டெட்டு மூன்றைந்து
மோகத்துள் ஆங்குஒரு முட்டைசெய் தானே.

விளக்கம்:

ஆண் பெண் இருவரின் இன்பத்தில் உருவான கருவின் மூலமாக ஆன்மாவை உயிராக உருவாக்கும் கொடைத் தொழிலைப் புரிந்து அருளுகின்றான் புனிதனான இறைவன். கருவிற்குள் இருபத்தைந்து தத்துவங்களையும் [பாடல் #451 இல் காண்க] சேர்த்து ஆண் பெண்ணின் இன்பத்தின் விளைவாக அங்கே ஒரு சினைமுட்டையைச் செய்து அருளுகின்றான்.

உட்கருத்து:

ஆணும் பெண்ணும் எத்தனை முறை இன்பம் கொண்டாலும் கரு எளிதில் உருவாகி விடுவதில்லை. அப்படி நடந்தால் பெண் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பெற வேண்டும். பெண்ணிடம் உருவாகும் அனைத்து கருமுட்டைகளும் சினைமுட்டையாக மாறுவதில்லை. அப்படி நடந்தால் பெண் கோடிக்கணக்கான குழந்தைகள் பெற வேண்டும். கருமுட்டை சினைமுட்டையாகிவிட்டால் மட்டும் குழந்தை உருவாகிவிடுவதில்லை. அப்படி நடந்தால் கருத்தரித்த அனைத்து பெண்களும் உயிரோடு இருக்கும் குழந்தையைப் பெற்று இருக்க வேண்டும். அறிவியலின்படி பல பெண்கள் கரு கலைந்தோ அல்லது இறந்த குழந்தைகளை பெற்றெடுக்கின்றார்கள். ஆணும் பெண்ணும் இன்பமாக இருக்கும் போதே இவர்களுக்கு இப்படிப்பட்ட குழந்தைதான் பிறக்க வேண்டும் என்பதை முடிவு செய்து அதன்படி சினைமுட்டைகளை கருவாக்கி அதைக் குழந்தையின் உடலாக்கி இருபத்து ஐந்து தத்துவங்களையும் சேர்த்த உயிராக்கி பிறக்கும் வரை பாதுகாத்தும் அருளுகின்றான் இறைவன்.

பாடல் #466: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

பிண்டத்தில் உள்ளூறு பேதைப் புலனைந்தும்
பிண்டத்தி னூடே பிறந்து மரித்தது
அண்டத்தின் உள்ளூறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத்தில் அமர்ந்திடுந் தானே.

விளக்கம்:

பெண்ணின் கருப்பைக்குள் உருவாகும் குழந்தையின் உடலினுள் மாயையால் ஒன்றும் அறியாத ஐந்துவகைப் புலன்களும் சேர்ந்து உடலோடு வளர்ந்து உடலோடு இறக்கின்றன. அதுபோலவே அண்டசராசரங்கள் அனைத்திலும் நிறைந்திருக்கும் இறைவனின் நாதத் தத்துவத்திலிருந்து உருவாகிய ஆன்மா கருவுக்குள் உயிரோடு பிறந்து உடலோடு இறந்தபின் மீண்டும் இறைவனின் நாத தத்துவத்திலேயே சென்று அமர்ந்து இருக்கின்றது.

உட்கருத்து:

அசையா சக்தியாகிய இறைவனிடமிருந்து உருவாகிய ஒளி ஓசை ஆகிய இருவகைத் தத்துவங்களாலேயே ஆன்மா உருவாகின்றது. அத்தகைய ஆன்மா வினைப் பயனால் கருவுக்குள் புகுந்து உடலோடு உயிராகி வளர்ந்து உடல் இறந்த பின் பிரிந்து மீண்டும் அந்தத் தத்துவங்களுடனே சேர்ந்து அடுத்த பிறவி வரை காத்திருத்து பிறவி எடுக்கும். எப்போது அனைத்து பிறவிக்கான வினைகளும் தீர்ந்துவிடுகின்றதோ அப்போது இறைவனுடனே சென்று இரண்டறக் கலந்துவிடும்.



பாடல் #467: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

இலைப்பொறி ஏற்றி எனதுடல் ஈசன்
துலைப்பொறி யிற்கரு ஐந்துட னாட்டி
நிலைப்பொறி முப்பது நீர்மை கொளுவி
உலைப்பொறி ஒன்பதில் ஒன்றுசெய் தானே.

விளக்கம்:

பெண்ணின் உடல் என்ற இயந்திரத்தினுள் ஆணின் உடல் என்ற இயந்திரத்தை இயக்கி பெண்ணின் கர்ப்பப்பை என்னும் இயந்திரத்தினுள் கருவை உருவாக வைத்த இறைவன் அந்த கருவை ஐந்து பூதங்களால் ஆட்டி வைத்து ஆன்மாவையும் முப்பது தத்துவங்களையும் சேர்த்து உடல் என்ற இயந்திரத்தைக் கொடுத்து குழந்தையாக்கி அதைப் பித்த நீரினுள் பத்து மாதங்கள் மூழ்கி இருக்கச் செய்து மூச்சுக்காற்றினால் உணவைச் சுட்டு எரிக்கும் வயிறாகிய இயந்திரத்துடன் ஒன்பது துவாரங்களைக் கொண்ட உடம்பில் ஆன்மாவையும் உயிரையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து அருளுகின்றான் இறைவன்.

ஒன்பது துவாரங்கள்:

கண்கள் 2, காதுகள் 2, மூக்குத்துவாரம் 2, வாய், பிறவிக்குறி, ஆசனவாய்.

முப்பத்தாறு தத்துவங்கள்:

5 சிவ தத்துவங்கள்: நாதம் - தூய அறிவாலான பரம்பொருளின் முழுமையான நிலை, விந்து - இயங்கிக் கொண்டிருக்கும் கிரியா சக்தி, சாதாக்கியம் - சதாசிவன், ஈசுரம் - மறைத்தல் சக்தியான மகேசுரன், சுத்த வித்தை - படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலுக்கு அடிப்படையான இறைதத்துவம்.

7 வித்தியா தத்துவங்கள்: காலம், நியதி, கலை, வித்தை, இராகம், மாயம், புருடன் (ஆன்மா)

24 ஆன்ம தத்துவங்கள்: 5 பூதங்கள் - நிலம் (உடல்), நீர் (இரத்தம் மற்று பித்த நீர்கள்), நெருப்பு (உணவைச் செரிக்கும் நெருப்பு மற்றும் உடல் சூடு), காற்று (மூச்சுக் காற்று மற்றும் பத்துவிதமான வாயுக்கள்), ஆகாயம் (உயிர் மற்றும் ஆன்மா). 5 புலன்கள் - கண்களால் பார்த்தல், காதுகளால் கேட்டல், வாயால் சுவைத்தல், மூக்கால் நுகருதல், தோலால் தொடுதல். 5 ஞானேந்திரியங்கள் - ஓசை (கேட்பது), ஊறு (தொடுவது), ஒளி (பார்ப்பது), சுவை (உண்பது), நாற்றம் (முகர்வது). 5 கன்மேந்திரியங்கள்: வாய் (பேச்சு), கைகள் (செயல்),

கால்கள் (போக்குவரவு), எருவாய் (கழிவு நீக்கம்), கருவாய் (இன்பமும் பிறப்பும்). 4 அந்தக்கரணங்கள் - மனம் (எண்ணங்கள்), புத்தி (அறிவு), சித்தம் (சிந்தனை), அகங்காரம் (நான் என்ற எண்ணம்).

பாடல் #468: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்
துன்பக் கலசம் அணைவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளையில் விளைந்தது தானே.

விளக்கம்:

இன்பத்தில் கலந்த ஆண் பெண் இருவரும் மனமொத்து வைத்த கருவாகிய மண் (பிண்டம்) பந்த பாசத்தால் சிக்குண்டு துன்பத்தைப் பெறும் களிமண்ணாலான கலசம் போன்றது. அதைக் குயவன் போல குழைத்து உருவாக்குபவன் இறைவன் ஒருவனே. இந்தக் களிமண்ணாலான கலசத்தில் ஒன்பது துவாரங்களும் (கண்கள் 2, காதுகள் 2, மூக்குத்துவாரம் 2, வாய், பிறவிக்குறி, ஆசனவாய்) பதினெட்டு அச்சாரங்களும் (எலும்புகள்) உள்ளன. எப்படி குயவன் தான் குழைத்து உருவாக்கிய கலசம் உறுதியாக இருக்க வேண்டும் என்று சூளையில் இட்டு சுடுகின்றானோ அதுபோல இறைவனும் கருவை தாயின் சூடான அடிவயிற்றுக் கருப்பை எனும் சூளையில் வைத்துப் பத்து மாதங்கள் சுட்டுப் பாதுகாத்து குழந்தையாக உருவாக்கி அருளுகின்றான்.

பாடல் #469: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

அறியீர் உடம்பினி லாகிய ஆறும்
பிறியீர் அதனிற் பெருகுங் குணங்கள்
செறியீர் அவற்றினுட் சித்திகள் இட்ட
தறிவீர் ஐந்தினுள் ளானது பிண்டமே.

விளக்கம்:

உடம்பு அடையும் ஆறு வகையான நிலைகளை அறியாமல் இருக்கின்றீர்கள். அந்த நிலைகளில் வினைப் பயனால் உருவாகிப் பெரியதாக வளரும் பலவித குணங்களில் நல்லது எது கெட்டது எது என்று பிரித்துப் பார்த்து கெட்டதை விட்டுப் பிரியாமல் இருக்கின்றீர்கள். பஞ்ச பூதங்களால் ஆன இந்த பிண்டமாகிய உடம்பினுள் எட்டுவிதமான மாபெரும் சித்திகளையும் இறைவன் வைத்திருப்பதை அறிந்து அதை அடைந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவதற்கும் முயற்சி செய்யாமல் இருக்கின்றீர்கள்.

உடலின் ஆறு நிலைகள்:

1. பேறு - இன்பம்.
2. இழவு - பற்றாக்குறை.
3. துன்பம் - துயரம்.
4. பிணி - நோய்கள்
5. மூப்பு - முதுமை
6. சாக்காடு - இழிவு நிலை.

வினைப் பயனால் பெறும் குணங்கள்: பாடல் #458 இல் காண்க.

உடலின் பஞ்ச பூதங்கள்:

1. நிலம் - எலும்பு தோலால் ஆன உடல்.
2. நீர் - இரத்தம் மற்றும் பித்த நீர்கள்.
3. நெருப்பு - உணவைச் செரிக்கும் நெருப்பு மற்றும் உடல் சூடு.
4. காற்று - மூச்சுக் காற்று மற்றும் உடலில் உள்ள பத்துவிதமான வாயுக்கள்.
5. ஆகாயம் - உயிர் மற்றும் ஆன்மா.

எட்டு மாபெரும் சித்திகள்:

1. அணிமா - அணுவைப் போல மிகவும் நுண்ணிய உருவம் எடுத்தல்.
2. மகிமா - மலையை விடவும் மிகப் பெரிய உருவம் எடுத்தல்.

3. இலகிமா – இலவம் பஞ்சை விடவும் மிகவும் லேசான எடையை எந்த உருவத்திலும் எடுத்தல்.

4. கரிமா – மலையை விடவும் மிகவும் கனமான எடையை எந்த உருவத்திலும் எடுத்தல்.

5. பிராந்தி – நினைத்த இடத்திற்கு கண் இமைக்கும் நேரத்திற்குள் உடனே சென்றுவிடுதல்.

6. பிரகாமியம் – மனதில் நினைத்ததை உடனே கைகொள்ளுதல்.

7. ஈசத்துவம் – வேண்டிய எதையும் கட்டுப் படுத்தி ஆட்டி வைத்தல்.

8. வசித்துவம் – எதையும் அல்லது எவரையும் தன் வசமாக்கி ஆட்கொள்ளுதல்.

பாடல் #470: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

உடல்வைத்த வாறும் உயிர்வைத்த வாறும்
மடைவைத்த ஒன்பது வாய்தலம் வைத்துத்
திடம்வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்
கடைவைத்த ஈசனைக் கைகலந் தேனே.

விளக்கம்:

ஆன்மா தனது வினையின் பயனால் பிறவி எடுக்க உடலை படைத்து உடலுக்குள் ஆன்மாவை வைத்து தேவையான காலத்திற்கு வாழும்படி உயிரையும் வைத்து தேவைக்கேற்ப திறந்து மூடிக்கொள்ளுகின்ற ஒன்பது துவாரங்களைக் கொண்ட உறுதியான உடலையும் வைத்து அந்த உயிர் பிறவியில்லா நிலையை அடைய அந்த உடலின் தலையின் உச்சியின் இறுதியில் சகஸ்ரரதளத்தில் ஆயிரம் இதழ் தாமரையின் மேல் நெருப்பு வடிவமாகத் தங்கியும் இருப்பதைக் கண்டு அவனோடு பேரின்பத்தில் கலந்து திளைத்து நின்றேன்.

உட்கருத்து:

ஆன்மா தான் கொண்ட ஆசையினாலும் வினையினாலும் பிறவி எடுக்கின்றது. அந்தப் பிறவிச் சுழலிலிருந்து தப்பிக்க உடலில் ஆறு ஆதார சக்தி மயங்களிலும் உச்சியில் ஏழாவது இடமாக சகஸ்ரர தளத்தில் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலரின் மேலே நெருப்பு வடிவமாக இருக்கும் இறைவனை உயிர்கள் உணர்ந்தால் பிறவி இல்லாத பேரின்பத்தில் திளைத்திருக்கலாம்.

பாடல் #471: இரண்டாம் தந்திரம் – 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

கேட்டுநின் றேன்எங்குங் கேடில் பெருஞ்சுடர்
மூட்டுகின் றான்முதல் யோனி மயமவன்
கூட்டுகின் றான்குழம் பின்கரு வையுரு
நீட்டுகின் றான்ஆகத்து நேர்பட்ட வாறே.

விளக்கம்:

பாடல் #470 பாடலின் படி ஈசனுடன் பேரின்பத்தில் கலந்து திளைத்து இருந்த போது ஈசன் அருளியவற்றை கேட்டு வியந்து நின்றேன். அது என்னவென்றால் எங்கும் கலந்திருக்கும் ஒரு மாசும் இல்லாத மாபெரும் சுடராக இருக்கும் இறைவனே வினைகளின் பொருட்டு உயிர்களைப் பிறக்க வைக்க முழுமுதல் காரணமாக இருக்கின்றான் என்பதையும் உயிர்கள் அவர்களின் வினைகளை அனுபவிக்க வேண்டிய மாயையாகவும் அவனே இருக்கின்றான் என்பதையும் சுக்கிலத்தை சுரோனிதத்தையும் சேர்த்து கர்ப்பப் பைக்குள் கொண்டு சென்று கருவாக்கி அதை குழந்தையின் உருவமாக அதை நீட்டிக் காப்பாற்றி அது பிறந்தபின் அதனுடன் உள் ஒளியாகக் கலந்து மாயையால் மறைந்து நின்று அந்த குழந்தை வாழும் காலம் வரை அதை உள்ளிருந்தே வழி நடத்துகின்றான் என்பதையும் கேட்டு உணர்ந்தேன்.

பாடல் #472: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்
காவுடைத் தீபங் கலந்து பிறந்திடும்
நீரிடை நின்ற குமிழி நிழலதாய்ப்
பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே.

விளக்கம்:

பூவிதழ் போன்ற யோனியில் நுழைந்த மொட்டு போன்ற லிங்கத்தின் நுனியிலிருந்து வெளிவந்த சுக்கிலம் சென்று கர்ப்பப் பையின் வாசலில் இருக்கும் கருமுட்டையுடன் கலந்தபின் கருமுட்டை கர்ப்பப் பைக்குள் சென்று விரியும். அப்போது விரிந்த முட்டையிலிருந்து வெளிவந்த நீர்க் குழம்பில் ஒளி வடிவான இறைவனின் அம்சமும் ஜென்ம சுமைகளைச் சுமந்த ஆன்மாவும் சேர்ந்து கலந்து பிறவி எடுக்கும். ஆண் பெண்ணின் உயிர் அணுக்கள் சேர்ந்து ஆண் பெண்ணின் சாயலிலேயே உலகத்தில் பிறக்கும் உடம்பாக மாறிவிடும். அந்த உடம்பு முழுவதும் இறைவனின் அம்சம் பரவி எட்டுவிதமான காரணிகள் பற்றிக்கொள்ளும்.

உடலின் எட்டுவித காரணிகள்:

1. உடல். 2. வாய். 3. கண். 4. மூக்கு. 5. காது. 6. மனம். 7. புத்தி. 8. அகங்காரம்.

பாடல் #473: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களும்
கட்டிய மூன்று கரணமு மாய்விடும்
ஒட்டிய பாச உணர்வென்னும் காயப்பைக்
கட்டி அவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே.

விளக்கம்:

பாடல் #472 ல் உள்ளபடி குழந்தையின் உடலெங்கும் பரவி ஒட்டிக்கொள்ளும் அந்த எட்டுவித சூட்சும காரணிகளாக இருப்பவை ஐந்து ஞானேந்திரியங்களும் மூன்று அந்தக் கரணங்களும் ஆகும். இவற்றோடு குழந்தையை ஒட்டியே பிறப்பது வினைப் பயனால் பெற்ற பந்தம் பாசம் எனும் உணர்வுகள். இப்படி எல்லாம் கலந்து உருவாகிய பை போன்ற உடலை வினையின் படி கட்டி வைத்து உருவாக்குவதும் பிறவி முடிவில் அவிழ்த்து அழிப்பதும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானே.

பாடல் #474: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

கண்ணுதல் நாமங் கலந்துடம் பாயிடப்
பண்ணுதல் செய்து பசுபாசம் நீக்கிட
எண்ணிய வேதம் இசைத்த பரப்பினை
மண்முத லாகவே வகுத்துவைத் தானே.

விளக்கம்:

ஆன்மா பிறவி எடுப்பதற்காக நெற்றிக் கண்ணையுடைய சிவனின் திருநாமமாகிய ஐந்தெழுத்தும் (நமசிவாய) பிரணவமும் (ஓம்) கலந்து வினைப்படி பந்த பாச மாயையை வைத்து ஆன்மாவை சேர்த்து உடம்பாக செய்த இறைவனே அந்த ஆன்மா தனது பந்த பாச மாயையை நீக்கி இறைவனிடம் வந்து சேருவதற்கான வழிமுறைகளை வேதங்களாக கொடுத்து அருளினான். அந்த வேதங்களின் பொருளை புரிந்து உணர்ந்து கொள்ள கருவினுள் முப்பத்தாறு தத்துவங்களையும் (பாடல் #467 இல் காண்க) வகை பிரித்து வைத்து அருளினான்.

உட்கருத்து:

ஆன்மாவிற்கு ஆசையை தீர்த்துக்கொள்ள பிறவி கொடுத்து அதற்கேற்ற வினையையும் மாயையையும் கொடுத்த இறைவனே அதிலிருந்து விடுபட்டு பிறவிச் சுழலில் இருந்து தப்பிக்க வழிமுறையான வேதங்களையும் கொடுத்து அதன் பொருளைப் புரிந்து கொள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் குழந்தைக்கு கொடுத்து அருளுகின்றான்.

பாடல் #475: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

அருளல்ல தில்லை அரனவன் அன்றி
அருளில்லை யாதலி னாலோர் உயிர்க்குத்
தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே.

விளக்கம்:

அருளைத் தருகின்ற சக்தியில்லாமல் சிவம் இல்லை. அசையா சக்தியாகிய சிவம் இல்லாமல் அருளுகின்ற சக்தியும் இல்லை. உயிர்களுக்கு உடலைத் தருகின்ற போதே சிவத்தையும் சக்தியையும் இரண்டு வளர்ப்புத் தாய்களாக கூடவே வந்து விடுகின்றான் இறைவன். சிவமும் அன்பும் வேறு வேறு இல்லை வளர்ப்புத் தாய்களாக வந்த சிவமும் சக்தியும் அன்போடு கருவை வளர்த்து பாதுகாத்து அதைப் பிறக்க வைக்கின்றார்கள்.

பாடல் #476: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

வகுத்த பிறவியின் மாதுநல் லாளும்
தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய பல்வகை எங்கும்
வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே.

விளக்கம்:

வினைப் பயனால் எடுக்கும் பிறவி எத்தகையது என்பதை முடிவு செய்து அதன்படி உயிர்களை படைக்கின்றது ஒலி வடிவமான சக்தி. வினைகளைக் கழிக்கும் உயிர்களுக்கு மாயையாகிய இருளை அகற்றி அருளுகின்றது ஒளி வடிவான சிவம். இவர்கள் இருவரும் இணைந்தே உயிர்களை ஓர் அறிவு ஜீவியிலிருந்து ஆறு அறிவு மனிதன் வரை வகை வகையாகப் பிரித்து அவர்களின் வினைகளுக்கு ஏற்ற வகையில் படைத்து அருளுகின்றார்கள். படைப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அந்த உயிர்களுக்குள்ளேயும் உயிரோடு உணர்வாகக் கலந்து நிற்பதே சிவ சக்தியின் கருணையாகும்.

பாடல் #477: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

மாண்பது வாக வளர்கின்ற வன்னியைக்
காண்பது ஆண்பெண் அலியெனும் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தானச் சோதிதன் ஆண்மையே.

விளக்கம்:

இறைவனது கருணையினால் தாயின் வயிற்றில் வளர்கின்ற ஜோதி வடிவமான ஆன்மாவை ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும் பார்ப்பது மாயையாகும். அப்படியெல்லாம் உருவைக் கொடுப்பது அந்தக் குழந்தையின் தாய் தந்தையரின் வழிமுறைகளால் தானே தவிர ஆன்மாவிற்கு என்று ஒரு உருவமும் கிடையாது. தந்தை தாயின் வழியாகவே அவர்களின் சாயலில் கருவைப் பதித்து அதை ஆண், பெண், அலி என்ற உருவமாகச் செய்வது இறைவனின் வல்லமையே ஆகும்.

பாடல் #478: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே.

விளக்கம்:

ஆண் பெண் இன்பத்தின் முடிவில் கலக்கும் நீரில் ஆணின் சுக்கிலம் பெண்ணின் சுரோணிதத்தை விட அதிகமாக இருந்தால் பிறப்பது ஆண் குழந்தையாக இருக்கும். அப்படி இல்லாமல் ஆணின் சுக்கிலத்தை விட பெண்ணின் சுரோணிதம் அதிகமாக இருந்தால் பிறப்பது பெண் குழந்தையாக இருக்கும். அப்படியும் இல்லாமல் ஆணின் சுக்கிலமும் பெண்ணின் சுரோணிதமும் சமமாக இருந்தால் பிறப்பது அலியாக இருக்கும். இதில் ஆணின் சுக்கிலத்தில் உயிரணுவின் சக்தி மிகவும் அதிகமாக இருந்தால் பிறக்கின்ற குழந்தை உலகத்தையே ஆளுகின்ற அரசன் போல சீரும் சிறப்பும் மிகுந்ததாக இருக்கும். பெண்ணின் சுரோணிதத்தின் உயிரணு அழிப்பு சக்தி மிகவும் அதிகமாக இருந்தால் சுக்கிலம் பாய்ந்தும் ஒரு பயனும் இல்லாமல் கரு உருவாகாமல் போய்விடும்.

பாடல் #479: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

பாய்ந்தபின் அஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நாலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் தவ்வகை
பாய்ந்திடும் யோகியர்க்குப் பாய்ச்சலும் ஆமே.

விளக்கம்:

ஆண் பெண் இன்பத்தின் முடிவில் ஆணிடமிருந்து சுக்கிலம் வெளிவந்து பெண்ணின் யோனியில் பாய்ந்த பிறகு ஆண் விடும் மூச்சுக்காற்றின் அளவு ஐந்து வினாடிகள் அளவிற்கு வெளிவந்தால் பிறக்கும் குழந்தை நூறு ஆண்டுகள் ஆயுளோடு பிறக்கும். ஆண் விடும் மூச்சுக்காற்றின் அளவு நான்கு வினாடிகள் அளவிற்கு வெளிவந்தால் பிறக்கும் குழந்தை எண்பது ஆண்டுகள் ஆயுளோடு பிறக்கும். எந்த அளவு மூச்சுக்காற்று வெளிவருகின்றது என்பதை பிரித்துப் பார்த்து அறிந்து கொண்டு தமக்கு வேண்டிய அளவிற்கு வெளிவரும் படி செய்வது யோக சாதனைகளைப் புரிந்து சாதனைகள் கைவரப்பெற்ற யோகியர்களுக்கே முடியும் என்பதால் அவர்களுக்கு ஆயுள் அளவு கிடையாது.

குறிப்பு :

மூச்சுக்காற்றைத் தம் வசம் பழக்கி அளவு அறிந்து இழுத்து அளவு அறிந்து வெளிவிடும் ஆற்றலைப் பெற்றவர்கள் யோகியர்கள். அவர்களால் தாம் வெளிவிடும் மூச்சுக்காற்றின் நேர அளவைக் கூட்டி தங்களது ஆயுளை எவ்வளவு வேண்டுமானாலும் நீட்டிக்க முடியும்.

பாடல் #480: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லை பார்க்கிலே.

விளக்கம்:

ஆண் பெண் இன்பத்தின் முடிவில் ஆணிடமிருந்து சுக்கிலம் வெளிவந்து பெண்ணின் யோனியில் பாய்ந்த பிறகு ஆண் விடும் மூச்சுக்காற்றின் அளவு நான்கு வினாடிக்கும் குறைவான அளவு வெளிவந்தால் பிறக்கும் குழந்தை குட்டையாகப் பிறக்கும். ஆணின் மூச்சுக்காற்று மெலிந்து வெளிவந்தால் பிறக்கும் குழந்தை முடமாகப் பிறக்கும். ஆணின் மூச்சுக்காற்று சீராக வராமல் தடை பட்டு தடை பட்டு வந்தால் பிறக்கும் குழந்தை கூனுடன் பிறக்கும். இப்படி வெளிவருகின்ற மூச்சுக்காற்றின் அளவைக் கணக்கிடும் முறை ஆண்களுக்குத் தானே தவிர பெண்கள் விடும் மூச்சுக் காற்றின் அளவு கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுவதில்லை.

குறிப்பு:

ஆணின் மூச்சுக்காற்று சுக்கிலத்திலிருந்து உயிரணுக்களைத் தருகின்றது. பெண்ணின் மூச்சுக்காற்று சுரோணிதத்திலிருந்து அழிக்கும் சக்தியைத் தருகின்றது (பாடல் #478 இல் இதற்கான விளக்கம் காண்க). உயிரின் ஆயுள் காலம் ஆணின் மூச்சுக்காற்றின் அளவிலிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்படுகின்றது.

பாடல் #481: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

மாதா உதரம் மலமிகின் மந்தனாம்
மாதா உதரம் சலமிகின் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே.

விளக்கம்:

ஆண் பெண் இன்பத்தின் முடிவில் சுக்கிலம் கருமுட்டையுடன் சேரும் போது தாயாகப் போகின்ற பெண்ணின் வயிற்றில் மலக்கழிவு அதிகமாக இருந்தால் பிறக்கும் குழந்தை மந்த புத்தியுடன் பிறக்கும். அவள் வயிற்றில் சிறுநீர் அதிகமாக இருந்தால் பிறக்கும் குழந்தை ஊமையாகப் பிறக்கும். மலக்கழிவும் சிறுநீரும் சமமான அளவு இருந்தால் பிறக்கும் குழந்தை குருடாகப் பிறக்கும். உடலுறவின் போது பெண்கள் தங்களின் வயிற்றில் மலக்கழிவோ சிறுநீரோ அதிகமாக இல்லாமல் பார்த்துக் கொள்வது ஆரோக்கியமான குழந்தைக்கு வழிவகுக்கும்.

பாடல் #482: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவி இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாம் கொண்டகால் ஒக்கிலே.

விளக்கம்:

ஆண் பெண் இன்பத்தின் போது ஆணின் மூச்சுக்காற்று வலது புற நாசியான சூரியகலையின் வழியே சென்றால் பிறக்கும் குழந்தை ஆணாகப் பிறக்கும். ஆணின் மூச்சுக்காற்று இடது புற நாசியான சந்திரகலையின் வழியே சென்றால் பிறக்கும் குழந்தை பெண்ணாகப் பிறக்கும். ஆணின் மூச்சுக்காற்று இரண்டு நாசிகளின் வழியாகவும் ஒன்றாக சென்றால் பிறக்கும் குழந்தை அலியாகப் பிறக்கும். உடலுறவின் போது பெண்ணின் மூச்சுக்காற்றை எதிர்த்துக் கொண்டு மலக்காற்று வந்தால் பிறக்கும் குழந்தை இரட்டைக் குழந்தைகளாகப் பிறக்கும்.

குறிப்பு:

அபானன் என்பது மனித உடலின் வயிற்றிலிருந்து கீழ் நோக்கிப் பாயும் ஒரு வாயு. இது மலக்காற்று என்று அறியப்படுகின்றது.

பாடல் #483: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியும் கோமள மாயிடுங்
கொண்ட வாயு இருவர்க்குங் குழறிடில்
கொண்டதும் இல்லையாங் கோல்வளை யார்கட்கே.

விளக்கம்:

ஆண் பெண் இன்பத்தின் போது உடலுக்கு நன்மை தரும் மூச்சுக் காற்றை இருவரும் சீராக இழுத்து விட்டால் பிறக்கும் குழந்தை மிகவும் அழகாகப் பிறக்கும். இருவருக்கும் மூச்சுக் காற்று தடுமாறி சீரில்லாமல் ஓடினால் பெண்ணின் வயிற்றில் கருத்தரித்தாலும் அது குழந்தையாக மாறாமல் சிதைந்து போய்விடும்.

பாடல் #484: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியுந்
தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்
பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே பொருந்துஉரு வாமே.

விளக்கம்:

ஆண் பெண் இன்பத்தின் முடிவில் பெண்ணின் வயிற்றில் தங்கிய கருவானது மனித உடலின் உள் நாக்கிற்கு மேலே இருக்கும் சுழு முனை நாடித் துளை வழியே தரிசிக்கும் ஜோதி வடிவான இறைவனின் அம்சமாகும். அந்தக் கரு குழந்தையாக மாறும் போது சூரியனைப் போன்ற தகதகக்கும் தங்க நிறத்தில் இருக்கும். பிறகு அதுவே உடலின் பல்வேறு உறுப்புகளாக வளரும் போது தந்தை தாயின் உருவத்திற்கு ஏற்ற மாதிரி குழந்தையின் உருவமும் பொருத்தமாக வளரும்.

உட்கருத்து:

உடலின் ஆறு ஆதாரச் சக்கரங்களும் நடுவில் இருக்கும் சுழுமுனை நாடியின் வழியில்தான் இருக்கின்றன. அதன் வழியே குண்டலினி சக்தியை மேலே ஏற்றினால் அது ஏழாவது இடமான தலை உச்சியில் இருக்கும் சகஸ்ரர தளத்தைச் சென்று சேர்ந்து அங்கே ஒளி வடிவமாக வீற்றிருக்கும் இறைவனோடு கலந்து பிறகு அங்கிருந்து கீழே வந்து உள் நாக்கிற்கு மேலே இருக்கும் துளை வழியே அமிர்தமாகப் பொழிந்தால் பிறவி இல்லாத பெரும் வாழ்வு கிடைக்கும். இந்தத் துளை வழியே இறைவனை ஜோதி வடிவாக தரிசிக்க முடியும். அங்கே ஜோதியாக வீற்றிருக்கும் இறைவனின் அம்சம்தான் தந்தையின் உடலிலிருந்து குழந்தையின் உயிராகத் தாயின் வயிற்றில் சென்று சேருகின்றது. பெண்ணின் வயிற்றில் தங்கிய கரு குழந்தையாக மாறும் போது சூரியனைப் போன்ற நிறத்திலும் பிறகு எல்லா உறுப்புகளும் உருவாகும் போது தந்தை தாயின் சாயலிலேயே உருவாகும்.

பாடல் #485: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்தில்
பருவம தாகவே பாரினில் வந்து
மருவி வளர்ந்திடும் மாயையி னாலே
அருவம தாவதிங் காரறி வாரே.

விளக்கம்:

குழந்தையின் உருவம் பத்து மாதங்களாகத் தாயின் கர்ப்பப் பைக்குள் கருவாக வளர்ந்து பூமியில் குழந்தையாக பிறந்து இளைஞன் முதியவன் ஆகிய பலவித பருவங்களாக வளர்ந்தாலும் தனக்குள் இருக்கும் இறைவனையும் தான் யார் என்பதையும் மாயையினால் அறியாமலேயே வளரும். எப்பொழுது அந்த உயிர் இறக்கின்றதோ அப்போது அதனின் உடலை விட்டு சூட்சுமமான ஆன்மாவாகத் திரும்பி போய்விடுவதை உலகத்தவர்கள் எவரும் அறிய மாட்டார்கள். மாயையினால் கட்டுண்டு இருக்கும் உலகத்தவர்கள் உயிர் ஆன்மாவாக இருப்பதையோ ஆன்மா இறைவனின் அம்சமாக இருப்பதையோ என்றும் அறியாமலேயே பிறந்து வாழ்ந்து இறந்து போகின்றனர்.

பாடல் #486: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

இட்டார் அறிந்திலர் ஏற்றவர் கண்டிலர்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன்இம் மாயையின் கீழ்மையைஇவ் வாறே.

விளக்கம்:

சுக்கிலத்தை இட்ட ஆண்களும் அது கருவாகியதா என்பதை அறிந்திருக்க மாட்டார்கள். அந்த சுக்கிலத்தை ஏற்றுக் கொண்ட பெண்களும் அது கருவாகியதா என்பதை அறிந்திருக்க மாட்டார்கள். தங்கத்தை நகையாகச் செய்யும் தச்சன் போல ஆன்மாவை வினைப்படி உயிராகச் செய்யும் பிரம்மன் இதை அறிந்திருந்தாலும் அதை யாருக்கும் அவன் சொன்னதில்லை. அனைத்தும் அறிந்த இறைவனும் உயிர்களிடம் கலந்து இருந்தாலும் அவனும் யாருக்கும் ஒன்றும் சொல்வதில்லை. இதையெல்லாம் உயிர்கள் அறியாதது அவர்களின் மாயையினால் தான். இறைவனின் அருளால் யான் இறைவனை எனக்குள்ளேயே கண்டு உணர்ந்துவிட்டதால் அந்த மாயையை அழித்து இதை அறிந்து கொண்டேன்.

உட்கருத்து:

மாயையினால் உயிர்கள் எதையும் அறியாமல் இருக்கின்றார்கள். உண்மையை அறிந்த பிரம்மனும் இறைவனும் உயிர்களுக்கு தாமாகவே எதையும் சொல்லுவதில்லை. இறைவனை அறிந்து தமக்குள்ளேயே உயிர்கள் உணர்ந்து விட்டால் மாயை அழித்து உண்மையை உள்ளபடியே அறிந்து கொள்ளலாம். [இதை எவ்வாறு செய்வது என்பதை அடுத்த பாடல் #487 இல் விளக்குகின்றார்]

பாடல் #487: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

இன்புற நாடி இருவருஞ் சந்தித்துத்
துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்
முன்புற நாடி நிலத்தின்முன் தோற்றிய
தொன்புற நாடிநின்று ஓதலு மாமே.

விளக்கம்:

ஆண் பெண் இருவரும் சந்தித்து இன்பத்தில் உறவாடுகின்றார்கள். அவர்களின் உறவினால் துன்பத்தையே கொடுக்கும் பந்த பாசம் எனும் மாயையால் கட்டப்பட்ட கரு உருவாகி குழந்தையாக பிறந்து உயிராக வளர்கிறது. வளரும் அந்த உயிர் மாயையிலிருந்து விடுபட வேண்டும் என்று எண்ணினால் தன்னை உயிராகப் பிறக்க வைத்த இறைவன் ஒருவன் ஆதி காலத்திலிருந்தே எப்போதும் இருக்கின்றான் என்பதை உணர்ந்து அவனைத் தேடி அடைய ஆசைப்பட்டு அவனின் திருநாமத்தை (ஓம் நமசிவாய) மந்திரமாக ஓதி தியானத்தில் இருந்து அவனைத் தமக்குள்ளே அறிந்து மாயையிலிருந்து விடுபடலாம்.

குறிப்பு:

உயிர்கள் தங்களுக்கு பிடித்த தனது இஷ்ட தெய்வத்தின் நாமத்தையும் மந்திரமாக ஓதி தியானத்தில் இருந்து அவனைத் தமக்குள்ளே அறிந்து மாயையிலிருந்து விடுபடலாம்.

பாடல் #488: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை (கரு உருவாகும் முறை)

குயிற்குஞ்சு முட்டை காக்கைதன் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லை போக்கில்லை ஏனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே.

விளக்கம்:

குயில் தனது முட்டையை காக்கையின் கூட்டில் கொண்டு போய் போட்டுவிட்டு வந்துவிடும். காக்கைக்கு குயிலின் முட்டைக்கும் தன்னுடைய முட்டைக்கும் வித்தியாசம் தெரியாததால் அதைத் தனது குஞ்சு என்றே நினைத்துக் கொண்டு எந்தவித சந்தேகமும் இல்லாமல் அடை காத்துப் பொரித்து பிறந்து அது கூவும் வரை குயிலின் குஞ்சு என்பதை அறியாமல் வளர்க்கும். அதுபோலவே இறைவன் தாயின் கருவில் இட்ட உயிரை தாய் தனது குழந்தை என்றே எண்ணிக் கொண்டு எந்தவித சந்தேகமும் இல்லாமல் உடல் அதிர்ந்து வேலை செய்யாமல் கருவை அழிந்துவிடாமல் பாதுகாத்து அது ஏன் வந்தது எதற்கு வந்தது என்கிற எண்ணம் இல்லாமல் இறைவனின் உயிரை தனது சொந்த உயிர் என்று எண்ணி பந்தம் பாசம் என்கிற மாயையினால் நினைத்துக் கொண்டு தாய் வளர்க்கிறாள்.

உட்கருத்து:

உலகத்தில் பிறக்கும் அனைத்து உயிர்களும் இறைவனின் அம்சமான ஆன்மாவாக இறைவனின் பிள்ளைகளாகவே பிறக்கின்றன. இதை மாயையால் அறியாத உயிர்கள் தான் பெற்ற குழந்தை என்று நினைத்துக் கொண்டு பந்த பாசத்தில் கிடந்து தவிக்கின்றார்கள்.

பாடல் #489: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

முதற்கிழங் காய்முளை யாய்அம் முளைப்பின்
அதற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்
அதற்கது வாம்இன்ப மாவது போல
அதற்கது வாய்நிற்கும் ஆதிப் பிரானே.

விளக்கம்:

ஒரு விதை முதலில் முளைத்து செடியாய் வளர்ந்து பின்பு வேர் மண் மற்றும் நீருடன் வினைபுரிந்து தன்னைப்போலவே பலத்துடன் தன்னுடைய தன்மையுடன் பல செடிகளை புதர் போல் உருவாக்குகின்றது. ஒரு வகை செடி தனது வகை செடியை மட்டுமே உருவாக்கும் வேறு வகை செடியை உருவாக்காது. உலகத்தில் எத்தனை வகை தாவரங்கள் அதன் வகைகளை உருவாக்குகின்றதோ அத்தனை வகை தாவரங்களாகவும் ஆதியாய் இருக்கும் இறைவனே இருக்கின்றான்.

குறிப்பு:

கர்ப்பக்கிரியை தலைப்பில் இதுவரை மனித உயிர்கள் எப்படி உருவாகின்றது என்று மட்டுமே சொல்லப்பட்டு இருந்தது. இந்த பாடலில் உலகில் உள்ள தாவரங்கள் உருவாக்கம் பற்றி அருளியிருக்கின்றார்.

பாடல் #490: இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

ஏனோர் பெருமைய னாகினும் எம்இறை
ஊனேய் சிறுமையுள் உட்கலந் தாங்குளன்
வானோர் அறியும் அளவல்ல மாதேவன்
தானே அறியும் தவத்தினது உள்ளே.

விளக்கம்:

அனைத்து தெய்வங்களையும் விட மாபெரும் பெருமையை உடைய எமது இறைவன் வினைகள், கர்மாக்கள், மலங்கள் கொண்ட குற்றம் குறைகள் நிறைந்த உயிர்களின் உடல்களிலும் கலந்து இருக்கின்றான். வானுலகத்திலுள்ள தேவர்களாலும் அறிய முடியாத அளவு இருக்கும் மகாதேவனாகிய இறைவனை உயிர்கள் தனக்குள் தவம் செய்து தமக்குள்ளேயே அறியலாம்.

பாடல் #491: இரண்டாம் தந்திரம் – 14. கர்ப்பக் கிரியை [கரு உருவாகும் முறை]

பரத்திற் பதிந்து பதிந்தநற் காயம்
உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டில்
திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்
திரித்தும் பிறக்கும் திருவரு ளாலே.

விளக்கம்:

இறைவனின் பரமான்மாவோடு கலந்திருந்த நல்ல ஆன்மா உலகில் உயிராகப் பிறந்து தனது ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டு விட்டால் கடல் தண்ணீர் சூரியனின் வெப்பத்தினால் திரண்டு உப்புக் கட்டிகளாக மாறுவதுபோல இறைவனது திருவருளால் பேரான்மாவோடு கலந்திருக்கும் ஆன்மா உடல் பெற்று ஒரு உயிராகப் பிறவி எடுக்கின்றது.

பாடல் #492: இரண்டாம் தந்திரம் - 15. மூவகைச் சீவவர்க்கம் (மூன்று விதமான உயிர்கள்)

சத்தி சிவன்விளை யாட்டால் உயிராக்கி
ஒத்த இருமாயா கூட்டத் திடைபூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமய மாக்குமே.

விளக்கம்:

அசையா சக்தியாகிய சிவமும் அசையும் சக்தியாகிய சக்தியும் தங்கள் திருவிளையாட்டால் ஆன்மா ஆசைப்படும் போது அதைத் தீர்த்துக் கொள்ள வினைகளைச் சேர்த்து உயிராக்கி உலகத்தில் பிறக்க வைத்து அந்த உயிருக்கு சுத்த மாயை அசுத்த மாயை என்ற இரண்டு விதமான மாயைகளையும் வினைகள் தீரும் வரை உடலுக்குள் வைத்து பூட்டுகின்றார்கள். பின்பு உயிர்களின் எண்ணத்தில் புகுந்து சுத்த மாயை அசுத்த மாயை ஆகிய இரண்டு விதமான மாயைகளையும் நீங்கி உயிர் உருவாகுவதற்கு முன்பு இருந்த துரியம் எனும் ஆழ்நிலை உறக்க நிலையில் ஆன்மாவை சிவமாக்குகின்றார்கள்.

உட்கருத்து:

இறைவன் தனது திருவிளையாட்டினால் தன்னிடம் துரிய நிலையில் கலந்திருக்கும் ஆன்மாவை மாயையை சேர்த்து பிறக்க வைத்து பின்பு மாயை நீக்கி தன்னிடமே சேர்த்துக்கொள்கிறார். துரிய நிலையையும் மாயை சேரும் நிலையையும் பாடல் #460 இல் காண்க.

பாடல் #493: இரண்டாம் தந்திரம் - 15. மூவகைச் சீவவர்க்கம் (மூன்று விதமான உயிர்கள்)

விஞ்ஞானர் நால்வர் மெய்பிரள யாகலத்
தஞ்ஞானர் மூவருந் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்
விஞ்ஞான ராதிகளும் வேற்றுமை தானே.

விளக்கம்:

உடலோடு இருக்கும் போதே இறைவனை உணர்ந்து உண்மை ஞானத்தை அடைந்தவர்கள் அதமர், மத்திமர், உத்தமர், சித்தர் என நான்கு வகைப்படுவார்கள். இவர்கள் ஆணவ மலத்தை மட்டுமே கொண்ட விஞ்ஞானர் ஆவார்கள்.

மாயை நீங்கப் பெற்றாலும் ஆணவமும் கன்மமும் நீங்கப் பெறாததால் பிரளய ஊழிக்காலம் வரை இறைவனோடு கலப்பதற்கு காத்திருப்பவர்கள் அபக்குவர், பரமுத்தர், அபரமுத்தர் என மூன்று வகைப்படுவார்கள். இவர்கள் மெய்பிரளய அகலர் ஆவார்கள்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் கொண்டவர்கள் முத்தர், சாதகர், சகலர் என்று மூன்று வகைப்படுவார்கள். இவர்கள் அஞ்ஞானர் ஆவார்கள்.

விஞ்ஞானர், மெய்பிரளய அகலர், அஞ்ஞானர் என உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் 3 பகுதியாக பத்து வகையினராக வேறுபட்டு இருக்கின்றார்கள்.

குறிப்பு:

முதல் வகையினர் கன்மம், மாயை அனைத்தும் நீங்கப்பெற்று நான் என்ற எண்ணம் நீங்கி ஞானம் அடைந்தாலும் இறைவனுடன் கலக்காமல் தனிப்பட்ட தனது பெயரினால் அழைக்கப்படுவதினால் ஆணவமலம் இருக்கின்றது. இவர்கள் மரணமில்லாத உடலுடன் இருக்கும் சித்தர்கள், யோகிகள், ரிஷிகள், தேவர்கள் ஆகின்றார்கள்.

2 வது வகையினர் மாயை நீங்கி ஆணவம் கன்மம் ஆகிய இரண்டு மலங்களை மட்டுமே உடையவர்கள். இவர்கள் இறைவனை உணர்ந்து ஞானம் அடைந்தாலும் இறைவனோடு கலக்காமல் உலக நன்மைக்காக அவ்வப்போது மீண்டும் மீண்டும் உடலேடுத்து பிறந்து இறப்பார்கள் இவர்கள் பிரளய ஊழிக்காலம் வரை இறைவனோடு கலப்பதற்கு காத்திருக்கும் ஞானிகள் ஆவார்கள்.

3 வது வகையினர் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் கொண்டு உலக வாழ்க்கையிலேயே மூழ்கி இருக்கின்றவர்கள்.

ஆன்மாவின் மூன்று வகைகளும் பத்து உப வகைகளும்:

1. விஞ்ஞானர் = 1. அதமர், 2. மத்திமர், 3. உத்தமர், 4. சித்தர்.
2. மெய்ப்பிரளய அகலர் = 5. அபக்குவர், 6. பரமுத்தர், 7. அபரமுத்தர்.
3. அஞ்ஞானர் = 8. முத்தர், 9. சாதகர், 10. சகலர்.

பாடல் #494: இரண்டாம் தந்திரம் - 15. மூவகைச் சீவவர்க்கம் (மூன்று விதமான உயிர்கள்)

விஞ்ஞானர் கேவலத் தாரது விட்டவர்
தஞ்ஞானர் அட்டவித் தேசுரஞ் சார்ந்துளோர்
எஞ்ஞானம் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவமும் விட்டுநின் றாரே.

விளக்கம்:

உயிர்களின் வகைகளில் முதலாவதாக இருக்கும் விஞ்ஞானர் மாயையும் கன்மமும் நீங்கப் பெற்ற ஜீவன் முக்தர்களாக நான்கு வகைப்பட்டு இருப்பவர்கள். முதலாவது வகையினர் ஞானம் பெற்றும் ஆணவம் நீங்காத தஞ்ஞானர் (அதமர்). இரண்டாவது வகையினர் அட்டவித்தீசுர நிலையை அடைந்த எஞ்ஞானர் (மத்திமர்). மூன்றாவது வகையினர் ஏழு கோடி மந்திரங்களின் நிலையை அடைந்த மந்திர நாயகர் (உத்தமர்). நான்காவது வகையினர் உண்மை ஞானமாகிய பேரறிவை பெற்று ஆணவ மலத்தையும் விட்டு நின்ற மெய்ஞ்ஞானர் (சித்தர்).

1, அதமர் விளக்கம்: (ரிஷிகள்)

ஞானம் அடைந்தாலும் தனிப்பட்ட தனது பெயரினால் அழைக்கப்பட்டு இறைவனுடன் கலக்காலம் இறைவனுக்காக யாகங்கள், பூஜைகள், செய்து கொண்டிருப்பவர்கள் அதமர் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

2, அட்டவித்தீசுர நிலை பெற்ற மத்திமர் விளக்கம்: (யோகிகள்)

யோகத்தின் வழியாக எட்டு விதமான ஞானம் தத்துவ நிலைகளைப் பெற்று ஈஸ்வர நிலையை அடைந்து எட்டுவிதமான ஞானத்தைப் பெற்றவர்கள் மத்திமர் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

3, ஏழு கோடி மந்திர நிலை பெற்ற உத்தமர் விளக்கம்: (தேவர்கள்)

மந்திரங்களில் முக்கியமான 1. நம, 2. சுவாஹா, 3. சுவதா, 4. வௌஷட், 5. வஷ்ட், 6. பட், 7. ஹம் ஆகிய ஏழு விதமான வார்த்தைகளில் முடிகின்ற மந்திரங்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி வீதம் மொத்தம் ஏழு கோடி ஆகும். இந்த ஏழு கோடி மந்திரங்களாலும் உச்சரித்துப் போற்றி வணங்கப்படும் நிலையை அடைந்தவர்கள் மந்திர நாயகர் என்றும் உத்தமர் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

4, சித்தர்கள் விளக்கம்:

இறத்தால் தானே பிறப்பதற்கு என்று என்றும் இறப்பில்லாமல் இருப்பதற்கு பல தியான, யோகமுறைகளை கையாண்டு அட்டமா சித்திகள் அடைந்து ஆணவம், கன்மம், மாயை நீங்கி இறைவனை உணர்ந்து ஞானத்தை அடைந்து உடலோடு தானே இறைவன் என்ற நிலையில் இருப்பவர்கள்.

பாடல் #495: இரண்டாம் தந்திரம் - 15. மூவகைச் சீவவர்க்கம் (மூன்று விதமான உயிர்கள்)

இரண்டா வதில்முத்தி எய்துவர் அத்தன்
இரண்டாவ துள்ளே இருமல பெத்தர்
இரண்டாகு நூற்றெட்டு ருத்திரர் என்பர்
முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே.

விளக்கம்:

உயிர்களின் வகைகளில் இரண்டாவதாக இருக்கும் மெய்பிரளய அகலர் அனைவரும் பிரளயகாலப் பேரழிவில் முக்தியைப் பெறுபவர்கள். ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலங்களை மட்டும் கொண்டிருக்கும் இவர்கள் அபக்குவர், பரமுத்தர், அபரமுத்தர் என்ற பெயருடன் இருக்கின்றனர். அபக்குவர், பரமுத்தர் என்கிற இரண்டு வகையாக 54, 54 என்ற எண்ணிக்கையில் நூற்று எட்டு உருத்திரர்களாக இருக்கின்றனர். அபரமுக்தர் ஒரு வகையாகவும் மொத்தம் மூன்று வகைகளாக இருக்கின்றனர். பாடல் #494ல் உள்ள விஞ்ஞானர். இந்த பாடலில் கூறிய மெய்பிரளய அகலர் ஆகிய இரு வகையில் இல்லாத மற்ற அனைவரும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் கொண்ட அஞ்ஞானர் ஆவார்கள்.

அபரமுக்தர் விளக்கம்:

இவர்கள் ஞானம் அடைந்து உலகத்தில் படைத்தல், மறைத்தல், காத்தல், அருளல், அழித்தல் ஆகிய இறைவனின் தொழில்களை செய்து பிறவி இல்லாத நிலையில் ஆணவம், கன்மம் என இரண்டு மலங்களை மட்டுமே கொண்டு பிரளய ஊழிக்காலம் வரை இறைவனோடு கலப்பதற்கு காத்திருக்கும் ஞானிகள் ஆவார்கள்.

பரமுக்தர் விளக்கம்:

உலக நன்மைக்காக உயிர்களை உய்விக்க உலகத்தில் பிறப்பதற்கு வானுலகத்தில் இறைவனின் கட்டளைக்காக காத்திருப்பவர்கள் பரமுக்தர் என்கின்ற ஞானிகள் ஆவார்கள். இவர்கள் 54 வகையான ருத்திரர் என்கின்ற பதவியில் இருக்கின்றார்கள்

அபக்குவர் விளக்கம்:

உலக நன்மைக்காக உயிர்களை உய்விக்க உலகத்தில் பிறந்து அனைத்து உயிர்களோடு வாழ்ந்து வருபவர்கள் அபக்குவர் என்கின்ற ஞானிகள் ஆவார்கள். இவர்கள் 54 ருத்திரர் வகையான என்கின்ற பதவியில் இருக்கின்றார்கள்

குறிப்பு:

பரமுக்தர் அபக்குவர் இருவகையினரும் உலக நன்மைக்காக உயிர்களை உய்விக்க உலகத்தில் பிறந்து உயிர்களோடு உயிராக வாழ்ந்து பல நல்கருத்துக்களை கூறி ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் கொண்ட அஞ்ஞானர்களை பிறவியில்லா நிலையை அடையச்செய்வதற்கும் இறைவனை உணர்வதற்க்கான காரியத்தையும் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

பாடல் #496: இரண்டாம் தந்திரம் – 15. மூவகைச் சீவவர்க்கம் [மூன்று விதமான உயிர்கள்]

பெத்தத்தர் சித்தொடு பேண்முத்திச் சித்தது
ஒத்திட் டிரண்டிடை யூடுற்றார் சித்துமாய்
மத்தத்து மும்மலம் வாடுகை மாட்டாதார்
சத்தத்து அமிழ்ந்து சகலத்து ளாரே.

விளக்கம்:

உயிர்களின் வகைகளில் மூன்றாவதாக இருப்பவர்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் கொண்ட அஞ்ஞானர். இவர்கள் முத்தர், சாதகர், சகலர் ஆகிய மூன்று விதமாக இருக்கிறார்கள்.

முக்தர்:

முன் ஜென்ம நல்வினைப் பயனால் இறைவனே குருவாக மனித உருவில் வந்து கொடுத்த ஞானத்தைப் பெற்று மும்மலம் கொண்ட தங்களின் ஆன்மாவை சிவத்தோடு இரண்டறக் கலந்து முக்தி பெற்ற முத்தர் ஆவார்கள்.

சாதகர்:

முன் ஜென்ம வினைப் பயனால் இறையருளைப் பெற்று தியானம், தவம், யோகப்பயிற்சிகள், பூஜைகள் செய்து கொண்ணிருப்பார்கள். இவர்கள் சாதகர் ஆவார்கள். இவர்கள் தாம் மேற்கொண்ட சாதகங்களின் பயனால் மும்மலங்களால் உருவாகும் துன்பங்களிலிருந்து பாதிக்காமல் இருப்பார்கள்.

சகலர்:

இவர்கள் மாயையால் உலக வாழ்க்கையிலேயே அமுங்கிக் கிடந்து மும்மலங்களின் வலிமை அதிகமாகப் பெற்ற சகலர் ஆவார்கள்.

பாடல் #497: இரண்டாம் தந்திரம் - 15. மூவகைச் சீவவர்க்கம் (மூன்று விதமான உயிர்கள்)

சிவமாகி ஐவகைத் திண்மலஞ் செற்றோர்
அவமாகாச் சித்தர்முத் தாந்தத்து வாழ்வார்
பவமான தீர்வோர் பசுபாசம் அற்றோர்
நவமான தத்துவம் நாடிக்கண் டாரே.

விளக்கம்:

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து வலிமை மிகுந்த மலங்களை வென்று தாமே சிவமாகி சித்தர்கள் சாயுச்சியம் என்னும் பேரின்பப் பெருவாழ்வு பெற்று அதிலேயே என்றும் திளைத்து இருப்பார்கள். இவர்கள் இறவாத நிலை பெற்றதால் எப்போதும் பிறவி இல்லாத நிலையைப் பெற்று பசு பாசம் ஆகிய இரண்டும் நீங்கி பதியாக இருக்கும் ஒன்பது வகை தத்துவங்களை தமது தவத்தினால் உணர்ந்து அடைந்தார்கள்.

பதி, பசு, பாசம் விளக்கம்:

பதி என்பது இறைவனின் பேரான்மா. பசு என்பது இறைவனின் பேரான்மாவிலிருந்து பிரிந்து வந்து உலகங்களில் பிறந்த ஜீவ ஆன்மா. பாசம் என்பது பேரான்மாவுடம் ஜீவ ஆன்மா சேராதவாறு பிரித்து ஐந்து வகை மலங்களால் கட்டி இருப்பது. எப்போது பசுவாகிய ஜீவ ஆன்மா தனது பாசமாகிய மலங்களை அறுத்துக் கொண்டு பதியாகிய பரமாத்மாவை சென்று அடைகிறதோ அப்போது அது முக்தியைப் பெற்று இனி பிறவி இல்லாத நிலையை அடைகிறது.

ஒன்பது தத்துவ விளக்கம்:

உலகம் உருவாகுவதற்கும் உலக தொழில்கள் நடைபெறுவதற்கு காரணமாய் இருப்பவை ஒன்பது தத்துவங்களாகும். இந்த ஒன்பது தத்துவங்களையும் சித்தர்கள் தமது தவத்தினால் தமக்குள் கண்டு உணர்பவர்கள்.
1. சிவம் - அசையா சக்தி
2. சக்தி - அசையும் சக்தி
3. ஒலி - சத்தம்
4. ஒளி - வெளிச்சம்
5. சதாசிவம் - அருளல்
6. மகேசுவரன் - மறைத்தல்
7. உருத்திரன் - அழித்தல்
8. திருமால் - காத்தல்
9. பிரம்மன் - படைத்தல்

பாடல் #498: இரண்டாம் தந்திரம் – 15. மூவகைச் சீவவர்க்கம் (மூன்று விதமான உயிர்கள்)

விஞ்ஞானர் ஆணவங் கேவல மேவுவோர்
தஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்
அஞ்ஞானர் அச்சக லத்தர் சகலராம்
விஞ்ஞான ராதி ஒன்பான்வே றுயிர்களே.

விளக்கம்:

விஞ்ஞானர் என்பவர் ஆணவம் மலம் மட்டுமே கொண்டு கன்மம் மாயை ஆகிய இரண்டு கேவல நிலைகளுக்கும் மேலே இருப்பவர்கள். இவர்கள் கன்மம் மாயை ஆகியவற்றில் சிக்க மாட்டார்கள். மெய்பிரளய அகலர் என்பவர் ஆணவம் கன்மம் ஆகிய இரண்டு மலம் கொண்டு இருப்பவர்கள். இவர்கள் மாயையில் சிக்க மாட்டார்கள். அஞ்ஞானர் என்பவர் இந்த மூன்று மலங்களும் கொண்ட மற்ற அனைவரும் ஆவார்கள். சித்தர்களைத் தவிர்த்து விஞ்ஞானர், மெய்பிரளய அகலர், அஞ்ஞானர் மொத்தம் ஒன்பது வகையினராக இருக்கின்றனர்.

குறிப்பு

இந்த பாடலில் ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்கள் இந்த பாடலிலும் இருந்தாலும் மூவகைச் சீவவர்க்கம் தலைப்பில் உள்ள மூன்று விதமான உயிர்களில் 10 வகையினரில் சித்தர்களை மேன்மையானவர்களாக இந்த பாடல் கூறிப்பிடுகின்றது.

பாடல் #499: இரண்டாம் தந்திரம் – 15. மூவகைச் சீவவர்க்கம் (மூன்று விதமான உயிர்கள்)

விஞ்ஞான கன்மத்தால் மெய்யகங் கூடிய
அஞ்ஞான கன்மத்தினால் சுவர் யோனிபுக்
கெஞ்ஞான மெய்த்தீண்டி யேயிடை யிட்டுபோய்
மெய்ஞ்ஞான ராகிச் சிவமேவல் உண்மையே.

விளக்கம்:

விஞ்ஞானர் தன்னுடைய ஞான கன்மத்தினால் எடுத்த பிறவியிலேயே தன் உள்ளமும் மெய்யான இறைவனும் கூடி ஒன்றாக கலந்து தாமே சிவமாகி இருப்பார்கள்.

மெய்பிரளய அகலர் அஞ்ஞான கன்மத்தினால் ஞானிகளாகப் பிறந்து பாடல் #493 ல் உள்ள குறிப்பின் படி பிரளய ஊழிக்காலம் வரை இறைவனோடு கலப்பதற்கு காத்திருந்து பிரளய ஊழிக்காலத்தில் சிவத்தோடு கலப்பார்கள்.

அஞ்ஞானர்கள் தன்னுடைய சாதகத்தினாலோ அல்லது மெய்பிரளய அகலர்களாக உள்ள ஞானிகளாலோ உயர்வதற்கு ஏதுவாகிய ஞானம் பெற்று ஒரு நாள் மெய்பிரளய அகலர்களாகவோ விஞ்ஞானர்களாகவோ மாறி சிவத்தோடு கலப்பார்கள்.

அசையா சக்தியாக இருக்கும் இறைவனுடன் கலந்து பேரின்பத்தில் இருக்கும் சிவசாயுச்சியம் என்பது அனைவருக்கும் உறுதியாகக் கிடைக்கும் இது உண்மை.

பாடல் #500: இரண்டாம் தந்திரம் - 15. மூவகைச் சீவவர்க்கம் (மூன்று விதமான உயிர்கள்)

ஆணவத் துற்ற வவித்தா நனவற்றோர்
காணிய விந்துவா நாத சகலாதி
ஆணவ மாதி அடைந்தோ ரவரன்றே
சேணுயர் சத்தி சிவதத்துவ மாமே.

விளக்கம்:

ஆணவம் முதலான 5 மலங்களும் இருப்பதினால் கண்ணால் பார்த்தும் அறியாமையால் அதில் உள்ள உண்மை தெரிந்து கொள்ளாதவர்கள் ஒளி ஒலி முதலான அனைத்து இறை தத்துவங்களையும் உணர முடியாது. ஆணவம் முதலான 5 மலங்களும் கடந்தவர்கள் உயர்வான இடத்தில் இருக்கும் சிவசக்தி தத்துவத்தை உணரலாம்

உட்கருத்து:

ஆணவம் என்கிற மலத்தை விட்டு நீங்காத வரை இறைவனை முழுவதுமாக உணர முடியாது. ஐந்து மலங்களையும் இறையருளால் வென்றவர்கள் மட்டுமே ஆதிப்பரம்பொருளாக இருக்கும் சிவம் (அசையா சக்தி) சக்தி (அசையும் சக்தி) எனும் இரண்டு தத்துவங்களையும் உணர முடியும்.

பாடல் #501: இரண்டாம் தந்திரம் – 16. பாத்திரம் [கொடுப்பதற்கும் பெறுவதற்கும் தகுதியானவர்கள்]

திலமத் தனைபொன் சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோகம் தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகங் குன்றுமே.

விளக்கம்:

உண்மையான அறிவைப் பெற்ற சிவ ஞானியர்களுக்கு ஒரு எள்ளின் அளவு தங்கத்தைக் கொடுத்தாலும் அதனை இறைவனே ஏற்றுக் கொண்டு அதன் பயனாக முக்தியையும், எண்ணியதை அடைகின்ற சக்தியையும் பேரின்பப் பெருவாழ்விற்கான வழியையும் தந்து அருளுவான். உலக அறிவை மட்டும் கொண்டு தமக்கு ஞானம் இருப்பதாக எண்ணி ஞானியர் போல வேஷம் போட்டுக் கொண்டு இருக்கும் முடர்களிடம் இந்த உலகத்திலுள்ள அனைத்து தங்கத்தையும் தானமாக கொடுத்தாலும் அதனால் ஒரு பயனும் கிடைக்காதது மட்டுமில்லாமல் கொடுத்த வீண் தானத்தின் பயனால் அடுத்த பிறவியிலும் பேரின்பப் பெருவாழ்வு கிடைக்காமல் போய்விடும்.

பாடல் #502: இரண்டாம் தந்திரம் – 16. பாத்திரம் [கொடுப்பதற்கும் பெறுவதற்கும் தகுதியானவர்கள்]

கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தனை
நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுஉணர்ந் தார்சிலர் தேவரு மாமே.

விளக்கம்:

எமனால் உயிர்கள் ஒரு நாள் இறந்து போவதைப் பார்த்தாலும் தாமும் அப்படி ஒரு நாள் இறந்து போவோம் என்பதை உணராமல் உயிர்கள் இருக்கின்றனர். அதுபோலவே ஒவ்வொரு உயிருக்குள்ளும் அந்த உயிரையே தனது அம்சமாகக் கொண்டு இருக்கும் இறைவன் தமக்குள்ளும் இருக்கின்றான் என்பதையும் உணராமல் இருக்கின்றனர். உலக வாழ்க்கையை விட நன்மை தருவது பேரின்பப் பெருவாழ்வு என்பதை உணர்ந்து அன்பாலும் தவத்தாலும் தேடிச் சென்று தமக்குள் இருக்கும் இறைவனை உணர்ந்து கொள்ளும் சிலர் மட்டுமே இறைவனின் அருள் பெற்று தேவர்களாக பதவி பெறுகிறார்கள்.

உட்கருத்து:

விரைவில் முடியும் உலக வாழ்க்கை மேல் ஆசை வைக்காமல் என்றும் நிரந்தரமான பேரின்பப் பெருவாழ்வுதான் வேண்டும் என்று உணர்ந்த உயிர்கள் மட்டுமே இறைவனின் அருளைப் பெறுவதற்கு தகுதியான பாத்திரமாக இருக்கிறார்கள்.

பாடல் #503: இரண்டாம் தந்திரம் – 16. பாத்திரம் [கொடுப்பதற்கும் பெறுவதற்கும் தகுதியானவர்கள்]

கைவிட்டி லேன்கரு வாகிய காலத்தும்
மெய்விட்டி லேன்விகிர் தன்னடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட்டு இலாத இடிஞ்சிலு மாமே.

விளக்கம்:

வினைப் பயனால் பிறவி எடுத்த போது கருவாக உருவான போதிலிருந்தே யாம் இறை நினைப்பை கைவிடாது பற்றிக் கொண்டேன். உயிர்கள் அனைத்துமாக இருக்கும் உண்மை இறைவனின் திருவடிகளையே எனக்குள் தேடி கயிறு போல பின்னிய சடையை தலையில் அணிந்த இறைவனின் திருஉருவத்தை எனக்குள் கண்டு அவனது திருவடிகளையே சரணடைந்தேன். அதனால் நெய் விட்டு எரிக்கப்படுகின்ற உலக விளக்குகளைப் போல இல்லாமல் நெய்யே விடாமல் தானாக ஒளிரும் விளக்காக எனக்குள் இறைவன் வந்து இருக்கின்றான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

உட்கருத்து:

பொய்யான உலகப் பற்றுக்களை விட்டுவிட்டு உண்மையான இறைவனையே முழுவதுமாகப் பற்றிக்கொண்ட உயிர்கள் தான் இறைவனைத் தமக்குள் ஒளி வடிவமாகத் தரிசிக்கத் தகுதியான பாத்திரமாக இருக்கிறார்கள்.

பாடல் #504: இரண்டாம் தந்திரம் - 16. பாத்திரம் [கொடுப்பதற்கும் பெறுவதற்கும் தகுதியானவர்கள்]

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்கின்ற இளங்கிளை யோனே.

விளக்கம்:

உலகங்களும் உயிர்களும் உருவாகும் காலத்தில் உருவாகி அழியும் காலத்தில் அழிகின்றன. உயிர்களின் வினைகள் தீர்க்க தீர்க்க வினைகள் சென்று விடும். உயிர்கள் செய்யும் கர்மங்களால் வினைகள் வந்தும் சேரும். இவை எல்லாவற்றையும் கட்டிக் காக்கும் குருவாக இருக்கும் இறைவன் காட்டியருள அதைக் கண்டவர்கள் இறைவனின் கட்டளையைப் பெற்று அதைச் செயல்படுத்தும் தகுதி பெற்ற புதிய அடியவர்கள் ஆவார்கள்.

உட்கருத்து:

அனைத்தும் இறைவனே என்ற உண்மையை இறைவன் காட்டத் தமக்குள் கண்டு உணர்ந்தவர்கள் இறைவனின் கட்டளையை செயல் படுத்தும் தகுதியான பாத்திரமாக இருக்கிறார்கள்.

பாடல் #505: இரண்டாம் தந்திரம் – 17. அபாத்திரம் [கொடுப்பதற்கும் பெறுவதற்கும் தகுதி இல்லாதவர்கள்]

கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தேயொக்கும்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே.

விளக்கம்:

மடி வற்றிப்போன பசுமாடு அழகாக இருக்கிறதே என்று குனிந்து அதற்கு புற்களை உணவாகக் கொடுத்து அதன் மடியிலிருந்து பாலைக் கறந்து குடித்து விடலாம் என்று நினைப்பது ஒழுக்கமும் தவமும் இல்லாதவர்களுக்கு தானம் கொடுத்து பேரின்ப வாழ்வைப் பெற்று விடலாம் என்று நினைப்பது போலாகும். ஒழுக்கமும் தவமும் இல்லாதவர்களுக்கு கொடுக்கும் தானம் பருவம் முடிந்த பிறகு விதைத்த பயிர் எப்படி வளர்ந்து செழிக்காதோ அதுபோல எந்தப் பயனையும் கொடுக்காமல் வீணாகிவிடும்.

உள்விளக்கம்:

ஒழுக்கமும் தவமும் இல்லாதவர்கள் தானம் பெற தகுதி இல்லாதவர்கள் ஆவார்கள்.

பாடல் #506: இரண்டாம் தந்திரம் – 17. அபாத்திரம் [கொடுப்பதற்கும் பெறுவதற்கும் தகுதி இல்லாதவர்கள்]

ஈவது யோக இயம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்
கீவது பெரும்பிழை யென்றுகொள் ளீரே.

விளக்கம்:

தவம் யோகம் செய்து தீய குணங்களை போக்கி நன்மைகளைச் செய்து அனைத்து உயிர்களிடமும் அன்பாக இருக்கும் அடியவர்களுக்கு மட்டுமே தானம் கொடுக்க வேண்டும். வேஷம் போட்டுக் கொண்டு நடித்தால் தானம் கிடைக்கும் என்கிற ஆசையில் மனதில் உண்மையான அன்பில்லாமல் இருப்பவர்களுக்கு தானம் கொடுப்பது மிகப்பெரிய தவறு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

பாடல் #507: இரண்டாம் தந்திரம் - 17. அபாத்திரம் (கொடுப்பதற்கும் பெறுவதற்கும் தகுதி இல்லாதவர்கள்)

ஆமா றறியான் அதிபஞ்ச பாதகன்
தோமாறும் ஈசற்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தரல்தந்து கற்றோன்
போமா நரகிற் புகான்போதங் கற்கவே.

விளக்கம்:

ஒழுக்கத்தில் செல்லும் வழியை அறியாமல் பஞ்சமகா பாவங்களை செய்கின்ற மகா பாவியாக இருந்தாலும் குற்றமில்லாத சிவனடியார்களுக்கும் தூய்மையான சிவஞானத்தைப் போதிக்கும் குருக்களுக்கும் காமம் மற்றும் பஞ்சமாக தீயகுணங்களை கைவிட்ட சிவயோகியர்களுக்கும் தரக்கூடிய தானத்தை தந்து அதன் பயனால் ஞானம் பெற்றுவிட்டால் மகா பாவங்கள் செய்திருந்தாலும் நரகத்திற்குப் போக மாட்டார்கள்.

உட்கருத்து:

மகாபாவத்தை செய்தவர்களாக இருந்தாலும் முறையான தானத்தை சரியானவர்களுக்குச் செய்துவிட்டால் அதன் பயனால் பாவ வினைகள் தீர்ந்து நல் வினைகளைச் சேர்த்து நரகத்திலிருந்து தப்பித்துக் கொள்வார்கள்.

ஐந்து மகா பாவங்கள் (பாடல் #200 இல் காண்க):

1. கொலை - தெரிந்தே ஒரு உயிரைக் கொல்வது
2. களவு - அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டு திருடுவது
3. கள் - போதையில் மயங்கிக் கிடப்பது
4. காமம் - மோகத்தில் மயங்கிக் கிடப்பது
5. பொய் - உண்மையை மறைத்துப் பொய் பேசுவது

ஐந்து மகா தீய குணங்கள்:

1. காமம் - மோகம்
2. குரோதம் - கோபம்
3. லோபம் - சுயநலம்
4. மதம் - கர்வம், ஆணவம்
5. மாச்சரியம் - பொறாமை

பாடல் #508: இரண்டாம் தந்திரம் - 17. அபாத்திரம் [கொடுப்பதற்கும் பெறுவதற்கும் தகுதி இல்லாதவர்கள்]

மண்மலை யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென்று அஞ்சலி யத்தனாய்
எண்ணி இறைஞ்சாதார்க் கீந்த இருவரும்
நண்ணுவர் ஏழா நரகக் குழியிலே.

விளக்கம்:

தம்மை ஆளுகின்ற தந்தையான இறைவனே மனித வடிவில் வந்து தானம் கொடுக்கின்றான் என்று கைகூப்பித் தொழுது இறைவனை நினைத்துத் தானம் கேட்காதவர்களுக்கு மலையளவு மாபெரும் பொருளை தானமாகத் தந்தாலும் அதனால் ஒரு பயனும் கிடையாது. இறைவனை நினைக்காமல் தானம் கொடுத்தவனும் இறைவனை நினைக்காமல் தானம் பெற்ற இருவருமே ஏழு வித நரகங்களின் குழியை சென்று அடைவார்கள்.



பாடல் #509: இரண்டாம் தந்திரம் – 18. தீர்த்தம் (உள்ளத்தின் புனிதம்)

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடையக் கல்வியி லோரே.

விளக்கம்:

உயிர்களின் உள்ளத்துக்குள் பலவித புனித தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றை தியானத்தின் மூலம் மெள்ள ஆராய்ந்து உணர்ந்து அதனுள் மூழ்கிக் குளித்து தங்களின் வினைகளை நீங்க முயற்சி செய்யாமல் தங்களின் வினைகளைக் கழிக்க உலகத்தில் இருக்கும் புனித தீர்த்தங்களைத் தேடி பள்ளத்தாக்குகளுக்கும் மலை மேடுகளுக்கும் அலைந்து திரிகின்றவர்கள் பொய்யான மனதைக் கொண்ட உண்மை ஞானமில்லாதவர்கள்.

உட்கருத்து:

உயிர்களின் உள்ளத்துக்குள் இறைவன் பலவித குணங்களாக இருக்கின்றான். இவற்றை ஆராய்ந்து நல்ல குணங்களை வளர்த்துக் கொண்டு தீய குணங்களை நீக்கிக் கொண்டால் வினைகள் நீங்கி விடும். இதை அறியாமல் உலகத்தில் இருக்கும் நதிகளிலும் குளங்களிலும் குளித்துவிட்டால் எல்லா பாவங்களும் போய்விடும் என்று தம்மைத் தாமே பொய்யாக ஏமாற்றி கொள்ளுபவர்கள் உண்மை ஞானமில்லாதவர்கள்.

பாடல் #510: இரண்டாம் தந்திரம் – 18. தீர்த்தம் (உள்ளத்தின் புனிதம்)

தளியறி வாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றும்
குளியறி வாளர்க்குக் கூடவும் வொண்ணான்
வளியறி வாளர்க்கு வாய்க்கிலும் வாய்க்கும்
தெளியறி வாளர்தஞ் சிந்தையு ளானே.

விளக்கம்:

கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபடும் முறையை அறிந்தவர்க்கு இறைவனின் அருள் குளிச்சியாய் தோன்றும். அவனே அந்த கோவிலில் உள்ள தீர்த்தக்குளத்தில் குளித்தால் பாவங்கள் தீர்ந்து விடும் என்றும் இறைவனை அடைந்து விடலாம் என்று எண்ணினால் இறைவன் பக்கத்தில் கூட நிற்க மாட்டான். அவனே மூச்சை அடக்கி அளவாக விட்டு முறைப்படி தியானம் செய்யத் தெரிந்து அதை செயல்படுத்தினால் இறைவனின் அருள் கிடைத்தாலும் கிடைக்கும். அவனே தமது உள்ளத்தில் இருக்கும் தீர்த்தத்தை உணர்ந்து தெளிந்து விட்டால் அவன் சிந்தனையில்தான் இறைவன் எப்போதுமே குடிகொண்டிருக்கின்றான்.

பாடல் #511: இரண்டாம் தந்திரம் - 18. தீர்த்தம் (உள்ளத்தின் புனிதம்)

உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தி னாலுங் கலந்தறி வார்இல்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்தில் இட்டதுஓர் பத்தலுள் ளாமே.

விளக்கம்:

உயிர்கள் தமது உள்ளத்தில் இருக்கும் தீர்த்தத்தில் மூழ்கி குளித்தால் தமக்குள் இருக்கும் இறைவன் ஒருவனை உணரலாம். அந்த இறைவனுக்கு அடியவர் போல நடித்துக் கொண்டாவது அவனோடு கலந்து அவனை அறிந்து கொள்ளுபவர்கள் எவரும் இல்லை. நதிகளுக்கும் குளங்களுக்கும் சென்று மூழ்கி எழுபவர்களது பாவ வினைகள் கிணற்றில் விட்ட ஓட்டைக் குடம் போன்றதே ஆகும்.

உள்விளக்கம்:

ஓட்டையான குடத்தில் எவ்வளவு முறை அள்ளினாலும் தண்ணீர் நிற்காதது போல உலகத்திலுள்ள எத்தனை குளங்களுக்கும் நதிகளுக்கும் சென்று குளித்தாலும் பாவ வினைகள் தீராது.

பாடல் #512: இரண்டாம் தந்திரம் - 18. தீர்த்தம் (உள்ளத்தின் புனிதம்)

அறிவார் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொள்
மறியார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனல்மூழ்கப் புண்ணிய ராமே.

விளக்கம்:

உயிர்கள் அனைத்துக்குள்ளும் வீற்றிருக்கும் ஆதிமூல நாயகனாகிய இறைவனை தேவர்கள் தங்களுக்குள் இருக்கும் தீர்த்தத்தைத் தேடி அடைந்து அதன் மூலம் தங்களைப் பக்குவப் படுத்திக்கொண்டே அடைந்திருக்கிறார்கள். அது போலவே உயிர்கள் தங்களிடம் இருக்கும் 5 வித தீய குணங்களை நீக்கித் தங்களைப் பக்குவப் படுத்திக்கொண்டு தங்களுக்குள் மூலப்பொறியாக இருக்கும் குண்டலினி சக்தியை மேலெழுப்பிச் சென்று தங்களின் தலைக்குள் இருக்கும் கங்கைத் தீர்த்தத்தில் மூழ்கி எழுந்து விட்டால் புண்ணியர்களாக ஆகலாம்.

5 வித தீய குணங்கள்

1. காமம் - மோகம்
2. குரோதம் - கோபம்
3. லோபம் - சுயநலம்
4. மதம் - கர்வம், ஆணவம்
5. மாச்சரியம் - பொறாமை

பாடல் #513: இரண்டாம் தந்திரம் - 18. தீர்த்தம்
[உள்ளத்தின் புனிதம்]

கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
உடலுறத் தேடுவார் தம்மையொப் பாரே
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் புகுந்தமை ஒன்றறி யாரே.

விளக்கம்:

கடலினில் ஒரு பொருளைத் தொலைத்து விட்டு அதை கடலினில் தேடாமல் குளத்தில் தேடி அலைவதைப் போல உடலில் இறைவனே பல தீர்த்தங்களாக இருப்பதை அறியாமல் வெளியே தேடி அலைகின்றனர். உயிர்களின் உயிரை உறுதியாக பற்றிக்கொண்டிருக்கும் குருநாதனாகிய இறைவன் தனது திருவருளால் உடலுக்குள்ளேயே புகுந்து இருப்பதை ஒருவரும் அறியாமல் இருக்கின்றனர்.

பாடல் #514: இரண்டாம் தந்திரம் - 18. தீர்த்தம் (உள்ளத்தின் புனிதம்)

கலந்தது நீர துடம்பிற் கறுக்கும்
கலந்தது நீர துடம்பிற் சிவக்கும்
கலந்தது நீர துடம்பிற் வெளுக்கும்
கலந்தது நீர்நிலங் காற்றது வாமே.

விளக்கம்:

உயிர்கள் பிறக்கும் போது உள்ளத்தில் பலவகை குணங்கள் உள்ளது. அவை தாமசம், இராசதம், சாத்வீகம் ஆகிய 3 வகை குணங்களுக்கு உட்பட்டவை. தாமச குணங்கள் இருக்கும் போது குண்டலினி சக்தியாக இருக்கும் தீர்த்தமானது கறுப்பாக இருக்கும். இந்த தாமச குணம் இராசத குணங்களாக மேலோங்கும் போது அந்த தீர்த்தமானது சிவப்பாக மாறும். இந்த இராசத குணம் சாத்வீக குணங்களாக மேலோங்கும் போது அந்த தீர்த்தமானது வெளுப்பாகி மேலே சென்று சகஸ்ரதளத்தை அடையும். அவ்வாறு சகஸ்ரதளத்தை அடைந்ததும் தமது உடலாகவும் உடலுக்குள் உயிராகவும் இறைவனே இருப்பதை உயிர்கள் உணரலாம்.

குணங்களின் விளக்கம்:

தாமச குணம் (தாமசம்) - காமம், வெகுளி, மயக்கம், கலக்கம், கோபம், பேராசை, பொய் பேசுதல், இம்சை, யாசித்தல், வெளிவேசம், சிரமம், கலகம், வருத்தம், மோகம், கவலை, தாழ்மை, உறக்கம், அச்சம், சோம்பல், காரணமில்லாமல் பிறரிடம் பொருட்களுக்கு ஆசைப்படுதல் மற்றும் பிறர்க்கு கேடு விளைவிக்கும் செயல்கள் செய்வது, பகட்டுக்காக செயல்கள் செய்வது.

இராசத குணம் (இராட்சதம்) - ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தானம், கல்வி, ஆசை, முயற்சி, இறுமாப்பு, வேட்கை, திமிர், தெய்வங்களிடம் செல்வங்கள் வேண்டுவது, வேற்றுமை எண்ணம், புலனின்பப் பற்று, சண்டைகளில் உற்சாகம், தன் புகழில் ஆசை, மற்றவர்களை எள்ளி நகையாடுவது, பராக்கிரமம், பிடிவாதத்துடன் ஒரு முயற்சியை மேற்கொள்ளுதல்.

சத்துவ குணம் (சாத்விகம்) - நற்காரியங்களில் மனதைச் செலுத்தும் குணம், மன அடக்கம், புலன் அடக்கம் (தமம்), துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு (சகிப்புத் தன்மை), விவேகம், வைராக்கியம், தவம், வாய்மை, கருணை, மகிழ்ச்சி, நம்பிக்கை, பாவம் செய்வதற்கு கூச்சப்படுதல், தன்னிலேயே மகிழ்ந்திருத்தல், தானம், பணிவு மற்றும் எளிமை.

குறிப்பு: இப்படாலில் 4வது வரியில் குறிப்பிட்டுள்ள நீர் அமிர்தத்தையும் நிலம் மண்ணாகிய உடம்பையும், காற்று மூச்சுக்காற்றாகிய உயிரையும் குறிக்கும்.



பாடல் #515: இரண்டாம் தந்திரம் - 19. திருக்கோயிலிழிவு

தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடும்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே.

விளக்கம்:

ஒரு திருக்கோயிலில் உள்ள சுயம்பு சிவலிங்கத்தைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு போய் வேறொரு திருக்கோயிலில் நிறுவினால் அச்செயல் அந்த வேறொரு திருக்கோயில் கட்டி முடிப்பதற்கு முன்பே அரசனது ஆட்சி நிலைகுலையும். அந்தச் செயலை செய்தவன் இறப்பதற்கு முன்பு தொழுநோய் வந்து துன்புற்று இறப்பான். இவ்வாறு எம் உயிர்க் காவலனாகிய நந்திபெருமான் உறுதிபட கூறினார்.

பாடல் #516: இரண்டாம் தந்திரம் - 19. திருக்கோயிலிழிவு

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே.

விளக்கம்:

திருக்கோயில் சுற்றுச்சுவரைக் கட்டியவரே பின்பு பொருள் மீது ஆசை கொண்டு அந்தச் சுவற்றிலிருந்து ஒரு கல்லை எடுத்தாலும் தவம் புரியும் முனிவரோ வேதங்களைச் சொல்லும் அந்தணரோ என கல்லை எடுத்தவர் யாராக இருந்தாலும் அவர்களையும் அந்தக் குற்றம் நிகழாதவாறு பாதுகாப்பாக வைக்காததால் அப்பொழுது முடிசூடி ஆள்கின்ற அந்நாட்டு அரசனையும் ஆகமங்களை அருளிச்செய்த சிவபெருமானின் ஆணை அழித்துவிடும்.

பாடல் #517: இரண்டாம் தந்திரம் - 19. திருக்கோயிலிழிவு

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

விளக்கம்:

சிவபெருமானது திருக்கோயில்களில் அன்றாட வழிபாடுகள் சிறப்பு நாள் வழிபாடுகள் [பிரதோஷம், சிவராத்திரி] ஆகியவற்றை முறையாகச் செய்யாமல் விட்டாலோ அல்லது ஆகமங்களில் சொல்லப்பட்ட முறை தவறி அக்கோவில்களில் ஏதேனும் தவறாக செய்தால் அந்த நாட்டில் தீர்க்க முடியாத நோய்கள் பரவும். மழை பெய்யாது. அந்த நாட்டை ஆளும் அரசன் பேரரசனாக இருந்தாலும் தனது எதிரிகளைப் போரில் வெல்லும் வலிமை குறைந்து போய்த் தன் நாட்டையே இழப்பான்.

பாடல் #518: இரண்டாம் தந்திரம் - 19. திருக்கோயிலிழிவு

முன்னவ னார்கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங் குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
யென்னருமை நந்தி யெடுத்துரைத் தானே.

விளக்கம்:

அனைத்திற்கும் முதலாய் இருக்கும் இறைவன் கோவில்களில் தினந்தோறும் நடக்கும் பூஜைகள் தடைப்பட்டால் அந்த நாட்டை ஆளும் மன்னனுக்குத் தீமைகள் உண்டாகும். மழை இல்லாமல் நீர் குறைந்து நாட்டின் வளம் குன்றும். பொறி வைத்து திருடும் திருடர்கள் அதிகரித்து களவு பெருகும். இவ்வாறு உலகத்தில் நடக்கும் என்று எமது குருவாய் இருக்கும் இறைவன் எடுத்துரைத்தான்.

பாடல் #519: இரண்டாம் தந்திரம் - 19. திருக்கோயிலிழிவு

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.

விளக்கம்:

தான் ஒரு அந்தணன் என்று பெயரை மட்டும் கூறிக்கொண்டு சிவபெருமானிடம் அன்பும் சிவனைப் பற்றிய அறிவும் ஒழுக்கமும் இல்லாத அந்தணன் திருக்கோயிலில் சிவபெருமானுக்குப் பூஜைகள் செய்தால் அக்கோயில் உள்ள நாட்டில் உள்நாட்டுக் கலகங்களும் வெளிநாட்டுப் போர்களும் நடப்பதோடு அந்நாட்டில் கொடிய நோய்களும் விவசாய நிலங்களில் ஒன்றும் விளையாமல் பஞ்சமும் உண்டாகும் என்று எமது குருவாய் இருக்கும் இறைவன் எடுத்துரைத்தான்.

குறிப்பு:

திருமந்திரம் பாடல் எண் 224 முதல் 237 வரை அந்தணர் ஒழுக்கம் என்ற தலைப்பில் 14 பாடல்களில் அந்தணர் என்பவர் யார் அவர் எப்படி இருக்க வேண்டும் என்று திருமந்திர பாடல்களில் உள்ளது. அந்தணர் யார் என்பதைப்பற்றி 224 எண்ணில் வரும் முதல் பாடலை மட்டும் கீழே கொடுத்துள்ளோம். மேலும் அந்தணர்கள் யார் என்பது பற்றி தெரிந்து கொள்ள மீதம் உள்ள 13 பாடல்களையும் கீழே உள்ள லிங்கில் க்ளிக் செய்து வரும் வலைதளத்தில் பாடல்களே படித்து அறிந்து கொள்ளலாம்.

https://kvnthirumoolar.com/topics/thirumanthiram/page/30/

பாடல் #224: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் (அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்)

அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தம்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே.

விளக்கம் : அந்தணர் என்பவர் வேதங்களை ஓதுதல், கற்ற வேதங்களை பிறருக்கு கற்றுக்கொடுத்தல், வேத முறைப்படி யாகம் வளர்த்தல், பிறருக்கு யாகம் செய்யும் முறையை கற்றுக்கொடுத்தல், தானம் கேட்டு வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் தானம் தருதல், பிறரிடமிருந்து தானம் பெறுதல்,

ஆகியவற்றை செய்பவர்களே அந்தணர்கள் ஆவார்கள். அதுமட்டுமின்றி 1.தூய்மையாக இருத்தல், 2. இறையருளோடு இருத்தல், 3. அளவான உணவு, 4. பொறுமையோடு இருத்தல், 5. நேர்மையுடன் இருத்தல், 6. பொய் பேசாது சத்தியத்தைக் கடைபிடித்தல், 7. சத்தியத்திற்காக வைராக்கியத்தை வளர்த்தல், 8. காமத்தை எண்ணாதிருத்தல், 9. களவு [திருடு] எண்ணாமலிருத்தல், 10. கொலை எண்ணாமலிருத்தல் ஆகிய பத்து குணங்களையும் தானும் அறிந்து பிறர் அறித்துகொள்ளச் செய்து நியமத்தின் வழி நடக்க வேண்டும். தாம் கடைபிடிக்கும் தவத்திலும், நல்ல காரியங்களைச் செய்யும் கருமங்களிலிருந்தும் எப்போதும் தவறாமல் நின்று நல்லது தீயது ஆகிய அனைத்து சடங்குகளையும் பிறருக்காக செய்து கொடுப்பவர்களே அந்தணர்கள் அவர்கள்.

வலைதளத்திற்கான குறிப்பு:

திருமந்திரம் பாடல் எண் 224 முதல் 237 வரை அந்தணர் ஒழுக்கம் என்ற தலைப்பில் 14 பாடல்களில் அந்தணர் என்பவர் யார் அவர் எப்படி இருக்க வேண்டும் என்று திருமந்திர பாடல்களில் உள்ளது. இந்த 14 பாடல்களையும் நமது வலைதளத்தில் படித்து அறிந்து கொள்ளலாம். வலைப்பகுதியில் தேடுவதற்கு சிரமமாக இருந்தால் தேடல் பகுதியில் எண்களை டைப் செய்து என்டர் செய்தால் சிரமம் இல்லாமல் பாடல்களை பாடிக்கலாம்.

பாடல் #520: இரண்டாம் தந்திரம் - 20. அதோமுக தரிசனம்

எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவழ் மேனி அறுமுகன் போய்அவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே.

விளக்கம்:

தேவர்களை விட அசுரர்கள் வலிமை பெற்றுத் தேவர்களை துன்புறுத்திட தேவர்கள் சிவபெருமானை நோக்கி எம்பெருமானே இறைவா நாங்கள் அசுரர்களால் துன்பப்படுகின்றோமே இது சரியா எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கூறி வேண்டிட சிவபெருமான் தற்பரன் நிலையில் நின்று (நெற்றிக் கண் நெருப்பால் அனைத்தையும் அழித்துத் தானே அனைத்திற்கும் மேலானவன், நிரந்தரமானவன், ஆனந்தமானவன், எதனாலும் அழிக்க முடியாதவன் என்கின்ற நிலை) தன் இதயத்திலிருக்கும் ஒளியாகிய அழகிய பவளம் போன்ற திருமேனியுடைய ஆறுமுகனை யாம் அளிக்கும் படையுடன் சென்று தேவர்களின் பகைவர்களான அசுரர்களை அழித்து வருவாயாக என்று கூறினார்.

பாடல் #521: இரண்டாம் தந்திரம் - 20. அதோமுக தரிசனம்

அண்டமொ டெண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே.

விளக்கம்:

சிவபெருமானின் ஐந்து முகங்களில் ஒன்றான அதோமுகம் பூமி, அனைத்துக் கோள்கள், பல நட்சத்திரங்கள் உள்ளடக்கிய விண்வெளிப் பிரதேசங்கள் கொண்ட அண்டங்கள் அனைத்தையும், வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு என எட்டுத் திசைகளையும் தாங்கிக் கொண்டிருப்பதை யாரும் அறியவில்லை. அதனால்தான் அவருடைய அதோமுகத்திற்கு அடியில் இருக்கும் கழுத்து அண்டவெளியைப் போல கண்டங் கருமையாய் உள்ளது என்கிற உண்மையை யாரும் அறிந்துகொள்ளாமல் சிவபெருமான் நஞ்சை உண்டதால்தான் [அமுதம் எடுக்கப் பாற்கடலை வாசுகி பாம்பினால் கடைந்தபோது வெளிப்பட்ட ஆலகால விஷம்] அவருடைய கழுத்து கருமையாய் இருக்கிறது என்று கூறுவார்கள் அவரை உணராதவர்கள். இதுபோலவே இறந்தவர்களின் ஆன்மாக்களைத் தாங்கிக் கொண்டிருப்பதை உணர்த்தும் வகையில் அவர்களின் வெள்ளை நிறத்திலான மண்டையோடுகளை மாலையாக அணிந்து விரிந்த சடையைக் கொண்டிருக்கும் சிவபெருமானின் தன்மையை யாரும் அறியவில்லை.

அதோமுகம்:

சிவபெருமானின் அதோமுகம் என்பது சூட்சும உடலில் எங்கும் செல்லும் ஆற்றலை உடையது. தீயவர்களை அழிக்க முற்படும்போது தோன்றுவது அதோமுகம். அதோமுகத்தைக் கொண்ட சிவபெருமான் அழித்தலின் தலைவன் ஆவார். அவர் சூரபதுமன் என்ற அசுரனை அழிக்கத் தன் அதோமுகத்தை வெளிப்படுத்திய போது சக்தி தேவியே அதைக் கண்டு பயந்து மறைந்து கொண்டாள். இந்த அதோமுகத்தை உலக அழிவின் போதும் முருகப்பெருமானைப் படைத்த போதும் உக்கிரமாக வெளிப்படுத்திய சிவன்பெருமான் தன்னை வணங்கும் யோகிகளுக்கும் முனிவர்களுக்கும் அருள் கொடுக்கும் போது மட்டும் சாந்தமாக வெளிப்படுத்துவதே அதோமுக தரிசனம்.

பாடல் #522: இரண்டாம் தந்திரம் - 20. அதோமுக தரிசனம்

செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே யுரைத்துப் புகழும் மனிதர்கள்
மெய்யே யுரைத்திடில் விண்ணோர்தொழச் செய்வன்
மைதாழ்ந்து இலங்கும் மிடறுடை யோனே.

விளக்கம்:

செழுமையான கடல்களால் சூழப்பட்டிருக்கும் இந்த உலகத்தைப் படைத்த இறைவனுக்கு மனிதர்களில் யாரெல்லாம் தம்மீது உண்மையான பக்தி இல்லாமல் பொய்யாகப் புகழ்ந்து போற்றுகின்றனர் என்பது நன்றாகத் தெரியும். யாரெல்லாம் தம்மீது உண்மையான பக்தி கொண்டு போற்றி வணங்குகின்றார்களோ அவர்களை வானுலகத்து தேவர்களும் வந்து வணங்கச்செய்வான் அதோமுகம் கொண்ட கருத்த தொண்டையை உடைய இறைவன்.



பாடல் #523: இரண்டாம் தந்திரம் - 20. அதோமுக தரிசனம்

நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்தீக் கலந்துட் சிவனென நிற்கும்
முந்திக் கலந்தங் குலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே.

விளக்கம்:

குண்டலினிசக்தி முதலாவது சக்கரமான மூலாதாரத்திலிருந்து சுழுமுனை [முதுகெலும்பு] வழியாக மேலே ஏறிச்சென்று சிரசிலுள்ள [தலை உச்சி] சகஸ்ரர தளத்தில் உள்ள செஞ்சிவப்பு நிற ஒளியுடன் கலந்து சிவமாகி நிற்கும். அவ்வாறு மேலெழுந்து நின்றவுடன் முன் வினைகள் அனைத்தையும் அழித்து உலகப்பற்றை அறுத்து உலகமும் உடலும் ஒன்றே என்ற நிலையை அடைவித்து ஆட்கொள்வது சிவபெருமானின் அதோமுகம் ஆகும்.

பாடல் #524: இரண்டாம் தந்திரம் – 20. அதோமுக தரிசனம்

அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகந் தன்னொடும் எங்கும் முயலுஞ்
சதோமுகத் தொண்மலர்க் கண்ணிப் பிரானும்
அதோமுகன் ஊழித் தலைவனு மாமே.

விளக்கம்:

ஆதியான அதோமுகம் கொண்ட சிவபெருமான் தனது அதோமுகத் தத்துவத்தில் தனக்குக் கீழே உள்ள அண்டம் முழுவதும் எங்கும் வியாபித்திருக்கின்றார். அவரே ஓம் எனும் பிரணவ ஒலியை மாலையாக அணிந்துகொண்டு அழித்தலின் தலைவனாகவும் நின்று அருள் புரிகின்றார்.

பாடல் #525: இரண்டாம் தந்திரம் – 20. அதோமுக தரிசனம்

அதோமுக மாமல ராயது கேளும்
அதோமுகத் தாலொரு நூறாய் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தானே.

விளக்கம்:

அதோமுகம் பெரிய தாமரை மலராக மாறிய அதிசயத்தைக் கேளுங்கள். பாடல் 523 ல் உள்ளபடி குண்டலினி சக்தி உயிர்களின் தலையின் உச்சியிலுள்ள சகஸ்ரர தளத்தை அடைந்து நூற்றுக்கணக்கான இதழ்களைக் கொண்ட தாமரை மலராக விரிந்தவுடன் அழிவில்லாத சக்தியாகி அந்த சிவபெருமானே அதோமுகமாகி அமர்ந்திருக்கின்றார்.

பாடல் #526: இரண்டாம் தந்திரம் – 21. சிவ நிந்தை

தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவுறு வாரம ராபதி நாடி
எளியனென் றீசனை நீசர் இகழில்
கிளியொன்று பூஞையாற் கீழது வாகுமே.

விளக்கம்:

தெளிந்த ஞானம் உள்ளவர்கள் சிந்தனை செய்து தமக்குள்ளே இருக்கும் தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய சிவபெருமானை உணர்ந்து அவருடைய அருளைப் பெறுவார்கள். தெளிந்த ஞானமில்லாத கீழான மக்கள் அச்சிவபெருமானை சிறுதெய்வமாக எண்ணி இகழ்ந்து புறக்கணித்தால் அவர்களின் நிலை பூனையால் கிழிக்கப்பட்ட கிளிபோல ஆகும்.

பாடல் #527: இரண்டாம் தந்திரம் - 21. சிவ நிந்தை

முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞானம் உணரார்
அளிந்தமு தூறிய ஆதிப் பிரானைத்
தளிந்தவர்க் கல்லது தாங்கவொண் ணாதே.

விளக்கம்:

ஆசையால் அனுபவித்து வாடிப்போன தேகத்தை உடையவர்கள், தேவர்கள், அசுரர்கள் ஆகியவர்கள் உண்மை ஞானத்தை உணரவில்லையென்றால் இறந்தவர்களைப் போலானவர்களே. அன்பினால் கசிந்து அமுதம்போல் சுரக்கும் ஆதியாகிய சிவபெருமானைத் தன் உள்ளக் கோவிலில் வைத்து வழிபடுபவர்களால் மட்டுமே உண்மையான ஞானத்தைப் பெற இயலும்.

பாடல் #528: இரண்டாம் தந்திரம் - 21. சிவ நிந்தை

அப்பகை யாலே அசுரருந் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் ஒன்றுபத் தாமே.

விளக்கம்:

அறியாமையால் வரும் அகங்காரத்தினால் தேவர்களும் அசுரர்களும் சிவபெருமானுடன் பகைமை கொண்டு விரைவில் அழிந்து போனார்கள். சிவபெருமானுடன் எந்த வகையான பகைமை கொண்டாலும் அவரை அடைய முடியாது. அது பொய்யான பகையாக இருந்தாலும் அதனால் வரும் தீமை ஒன்றுக்குப் பத்து மடங்காகப் பெருகி அழிக்கும்.

பாடல் #529: இரண்டாம் தந்திரம் - 21. சிவ நிந்தை

போகமும் மாதர் புலவி யதுநினைந்
தாகமும் உள்கலந் தங்குள ராதலில்
வேதிய ராயும் விகிர்தனாம் என்கின்ற
நீதியுள் ஈசன் நினைப்பொழி வாரே.

விளக்கம்:

மாதருடன் கூடியும் ஊடியும் அச்சிறிய இன்பத்தையே நினைத்து அந்த வேட்கையை உள்ளத்தில் வைத்திருப்பவர்கள் வேதம் கற்று அறிந்த வேதியர்களாக இருந்தாலும் தாமே இன்னொரு உயிரை உருவாக்குகின்றோம் என்கின்ற தவறான எண்ணத்தில் சிவபெருமானைப் பற்றிய எண்ணங்களை மறந்து விடுவார்கள்.

உள்விளக்கம்:

மாதர் இன்பத்தை நினைத்து இறைவனை மறப்பதும் சிவநிந்தையே ஆகும்.

பாடல் #530: இரண்டாம் தந்திரம் - 22. குரு நிந்தை

பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்கள்
உற்றிருந் தாரை உளைவன சொல்லுவர்
கற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே.

விளக்கம்:

ஞானத்தை அறிந்த பெரியோர்களை மதிக்காத கீழான எண்ணமுடையவர்கள் அப்பெரியோர்களின் உடனிருப்பவர்களையும் வருந்தும்படி கீழ்மையாக பேசுபவர்கள் ஆகிய இவர்கள் ஞானமில்லாமல் கல்வியை மட்டுமே அறிந்தவர்களின் வழியில் சென்று ஞானம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் ஞானத்தை அடைய முயற்சிப்பார்கள். ஞானத்தை அறிந்த பெரியோர்களால் கிடைக்காத ஞானம் வேறு யாரிடம் கிடைக்கும்?

பாடல் #531: இரண்டாம் தந்திரம் - 22. குரு நிந்தை

ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் பழகுவர் மண்ணிலே.

விளக்கம்:

ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருளை சீடனுக்கு உணர்த்திய குருவின் பெருமை குலையும்படி தவறாகப் பேசுகின்ற சீடர்கள் ஊர் சுற்றித் திரியும் நோயுள்ள நாயாகப் பிறந்து பின்னர் ஒரு யுகத்திற்குப் பூமியில் புழுவாக கிடப்பார்கள்.

பாடல் #532: இரண்டாம் தந்திரம் – 22. குரு நிந்தை

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

விளக்கம்:

இல்லறத்தில் இருக்கும் ஞானிகள் மற்றும் இறை தத்துவத்தை உணர்ந்த ஞானிகளை அவர்களுடைய மனம் வருந்தும்படி தீங்கு செய்தவர்களின் சொத்துக்களும் உயிரும் ஒரே ஆண்டில் அழிந்துவிடும் இது உண்மை இதுவே சதாசிவத்தின் ஆணை.

பாடல் #533: இரண்டாம் தந்திரம் - 22. குரு நிந்தை

மந்திரம் ஓரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.

விளக்கம்:

ஓம் என்ற பிரணவ மந்திரத்தில் பெரிய தவங்களைச் செய்தவர்களின் மனம் வருந்தும்படி தீமைகள் செய்தவர்கள் பசியால் வருந்தி அலைகின்ற நாயாகப் பிறந்து பின்னர் மனிதப் பிறவி எடுத்தாலும் எண்ணில் அடங்காத தாழ்ந்த பிறப்பு எடுத்து இறப்பார்கள்.

பாடல் #534: இரண்டாம் தந்திரம் – 22. குரு நிந்தை

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி யாணையே.

விளக்கம்:

சிவனடியார்கள் மனம் வருந்தினால் அவர்களிருக்கும் நாடும் அது தேடும் பெருமைகளும் அழிந்துபோகும். அதுமட்டுமில்லாமல் இந்திரனது ஆட்சியும் பேரரசர்களுடைய ஆட்சியும் அதற்குப் பொறுப்பாகி அழிந்துவிடும் என்பது சிவபெருமானின் ஆணையாகும்.

பாடல் #535: இரண்டாம் தந்திரம் - 22. குரு நிந்தை

சன்மார்க்க சற்குருச் சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க முங்குன்றி ஞானமுந் தங்காது
தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே.

விளக்கம்:

உண்மையான ஞான வழியைக் கூறிய குருவின் முன்பாகப் பொய் பேசினால் இருக்கும் நல்லொழுக்கம் குறைந்து போவது மட்டுமன்றி அவர் கொடுத்த ஞானமும் அழிந்துவிடும். தொன்றுதொட்டு [பழங்காலத்திலிருந்து] வருகின்ற ஞானத்தை அடையும் வழிகளும் மறந்துபோய் ஆத்ம வளர்ச்சிக்கான பிற வழிகளும் அழிந்து போய் வறுமையும் உண்டாகும்.

பாடல் #536: இரண்டாம் தந்திரம் - 22. குரு நிந்தை

கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்றும்
கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத் தானறக்
கைப்பிட்டுண் பான்போன்றும் கன்மிஞானிக் கொப்பே.

விளக்கம்:

ஞானத்தைப் பெற்ற குரு இருக்கும் போது அவரை விட்டுவிட்டு கர்மத்தின் வழியில் நடப்பவரை குருவாக ஏற்பது கையில் இருக்கும் மாணிக்கத்தைத் தவற விட்டுவிட்டு காலில் பட்ட கல்லை எடுத்துச் சுமப்பவரின் விதியைப் போன்றதாகும். அதுமட்டுமின்றி கையில் இருக்கும் நெய், பால், தயிரை விட்டுவிட்டு தனக்கு நன்மை தராத உணவை சாப்பிடுவது போன்றதாகும்.

பாடல் #537: இரண்டாம் தந்திரம் – 23. மாகேசுர நிந்தை

ஆண்டான் அடியவ ரார்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே.

விளக்கம்:

உலகத்தவர்களிடம் எந்தப் பற்றும் இல்லாத சிவனடியார்கள் யாருக்கு விரோதிகள்? தங்கள் வயிற்றுப் பசிக்குப் பிச்சை எடுத்து உண்ணும் அந்த அடியவர்களை தான் கொண்ட வெறுப்பினால் இகழ்ந்து பேசுபவர்கள் தமக்குத் தாமே செய்துகொண்ட தீவினையால் நரகத்திலேயே மிகவும் கொடியதான கடைசி நிலை நரகத்தில் சென்று விழுவார்கள்.

பாடல் #538: இரண்டாம் தந்திரம் – 23. மாகேசுர நிந்தை

ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன்வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே.

விளக்கம்:

சிவஞானியை நிந்தித்தலே (திட்டுதலே) நல்லது என்றுத் தவறாக நினைத்து நிந்திப்பவர்களுக்கு இருக்கும் நல்ல வினைகளும் தீய வினைகளாக மாறி துன்புறுவார்கள். சிவஞானியை வந்தித்தலே (வணங்குதலே) நல்லது என்று நினைத்து வணங்கியவர்களுக்கு இருக்கும் தீய வினைகளும் நல்ல வினைகளாக மாறி சிவஞானிகளின் அடியவர்களாக ஆகியவுடன் அவர்களின் அருளால் பேரின்பமான சிவபோகத்தை அடைவார்கள்.

பாடல் #539: இரண்டாம் தந்திரம் – 24. பொறையுடைமை [பொறுமை]

பற்றிநின் றார்நெஞ்சில் பல்லிதான் ஒன்றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையுந்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றா தொழிவது மாகமை யாமே.

விளக்கம்:

உண்மை வழியைப் பற்றி அதிலிருந்து விலகாமல் நிற்கும் யோகியர்களின் நெஞ்சில் இறைவனோடு இரண்டறக் கலக்கவேண்டும் என்கின்ற எண்ணம் இருக்கின்றது. பல்லி எப்படி தான் பற்றியதை விடாதோ அதுபோல எண்ணமும் தான் எண்ணியதை விடாது. இந்திரியங்களை [மூக்கின் வழியாக பிராணாயாமமும், நாக்கின் வழியாக மந்திரமும்] அடக்கி சிந்தனையை பல எண்ணங்களில் வீணாக சிதறவிடாமல் பொறுமையாக இருப்பவர்களுக்கு வற்றாத அமுதம் சுரக்கும்.

பாடல் #540: இரண்டாம் தந்திரம் - 24. பொறையுடைமை [பொறுமை]

ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனியன் பாதம் பணிந்துய்ய
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் மன்னவன்
ஞாலத் திவன்மிக நல்லனென் றாரே.

விளக்கம்:

சிவபெருமானின் திருச்சபையைச் சுற்றி இருக்கும் அழிவில்லாத தேவர்கள் அவரின் பால் போன்ற வெண்ணிற உடலின் பாதத்தைப் பணிந்து தாங்கள் முக்தி பெற வேண்டி பொறுமையுடன் காத்திருப்பார்கள். அவ்வாறு பொறுமையுடன் இருக்கும் தேவர்களை திருமாலுக்கும் ஆதிபிரம்மனுக்கும் மன்னராக இருக்கின்ற சதாசிவமூர்த்தி உலகத்தில் மிகவும் நல்லவர்கள் என்று அருளினார்.

பாடல் #541: இரண்டாம் தந்திரம் - 24. பொறையுடைமை (பொறுமை)

ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்
சேனை வளைந்து திசைதொறுங் கைதொழ
ஊனை விளைத்திடும் உம்பர்தம் ஆதியை
ஏனை வளைந்தருள் எட்டலு மாமே.

விளக்கம்:

உண்மை ஞானம் அடைந்தவர்கள் உலகத்தில் இருக்கும் உயிர்களுக்கு மன்னர்கள் ஆவார்கள். படைகள் எவ்வாறு மன்னரைச் சுற்றி நின்று கைகூப்பி வணங்குவார்களோ அதுபோல உண்மை ஞானம் அடைந்தவர்களை ஞானம் பெறவேண்டி பொறுமையுடன் வணங்கி நிற்பவர்கள் தேவர்களுக்குத் தலைவனும் உயிர்களின் உடலை வளர்ப்பவனுமாகிய ஆதி சிவபெருமானின் அருளை அடைவார்கள்.

பாடல் #542: இரண்டாம் தந்திரம் - 24. பொறையுடைமை (பொறுமை)

வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செய்யுங்
கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத விலயமுண் டாமே.

விளக்கம்:

ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்ப உடலிலும் உள்ளத்திலும் பலவகையில் இன்பங்களையும் துன்பங்களையும் கொடுத்து பக்குவம் செய்யும் சிவபெருமான் பொறுமையுடன் தவமிருப்பவர்களின் மூலாதாரத்தில் இருந்து திருக்கூத்து ஆடுவதின் பயனால் அவர்களின் மனம் இறைவனுடன் ஒன்றுபட்டு நிற்கும்.

பாடல் #543: இரண்டாம் தந்திரம் – 25. பெரியாரைத் துணைக்கோடல்
[ஞானம் பெற்ற பெரியவர்களின் துணையைப் பெறுதல்]

ஓடவல் லார்தம ரோடு நடாவுவன்
பாடவல் லாரொலி பார்மிசை வாழ்குவன்
தேடவல் லார்க்கருள் தேவர்பி ரானொடுங்
கூடவல் லாரடியே கூடுவன் யானே.

விளக்கம்:

திருத்தலங்களில் யாத்திரை செய்பவர்களுடன் யானும் நடப்போம். இறைவனை பக்தியுடன் பாடக்கூடியவர்களின் பாடலைக் கேட்டு யானும் இன்புற்று இருப்போம். இறைவனைத் தனக்குள்ளே தேடி அடையக்கூடியவர்களுக்கு அருளுகின்ற மகாதேவனுடன் இணையக் கூடிய ஆற்றலுள்ள பெரியோர்களின் திருவடியோடு யானும் இணைந்து இருப்போம்.

உட்கருத்து:

இறைவனை அடையக்கூடிய வழிகளில் செல்பவர்களுக்கு இறைவனே பெரியவராக உடன் இருந்து இறைவனை அடைய வழிகாட்டுவார்.

பாடல் #544: இரண்டாம் தந்திரம் - 25. பெரியாரைத் துணைக்கோடல்
[ஞானம் பெற்ற பெரியவர்களின் துணையைப் பெறுதல்]

தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு வைத்த திலையாகும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத்து என்னொடும் போதுகண் டாயே.

விளக்கம்:

மனமே நீ வருத்தப்படும் காலங்களில் படர்வதற்குப் பிடிமானம் இல்லாத செடிபோல வாடினாலும் இறைவன் மீது நம்பிக்கை வைத்தது இல்லை. இப்படித் தனியாக வருத்தப்பட்டு என்ன செய்யப் போகின்றாய்? இறைவனை நோக்கி யாம் செல்லும்போது எம்மோடு வந்து உன் துன்பங்கள் போவதைக் காண்பாயாக.

பாடல் #545: இரண்டாம் தந்திரம் – 25. பெரியாரைத் துணைக்கோடல்
[ஞானம் பெற்ற பெரியவர்களின் துணையைப் பெறுதல்]

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே.

விளக்கம்:

தேவர்களின் தலைவனான சிவபெருமானை உணர்ந்த பெரியோர்களைத் தேடிச் சென்று அவர்களோடு இணைந்து இருப்பவர்கள் சிவதத்துவத்தைப் பெறுவார்கள். இறைவனை அடையத் தாம் எடுத்துக் கொண்ட நெறியிலிருந்து மாறாமல் நின்று அருள் செய்யும் பெரியாரோடு சேர்ந்திருப்பதே பேரின்பமாகும்.

பாடல் #546: இரண்டாம் தந்திரம் – 25. பெரியாரைத் துணைக்கோடல்
[ஞானம் பெற்ற பெரியவர்களின் துணையைப் பெறுதல்]

தார்சடை யான்றன் தமராய் உலகினிற்
போர்புக ழாவெந்தை பொன்னடி சேருவர்
வாயடை யாவுள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்
கோவடைந் தந்நெறியைக் கூடலு மாமே.

விளக்கம்:

இறைவனின் அடியவர்கள் உலகத்தில் இருக்கும் மன்னர்களை பொய்யாக புகழாமல் கயிறு போல திரித்து விரிந்த சடையைக் கொண்டு வீற்றிருக்கும் எம் தந்தையான இறைவனை உண்மையான பக்தியோடு புகழ்ந்து அவரின் பொன்னான திருவடிகளை சேருவார்கள். இறைவனை வெறும் வார்த்தைகளால் போற்றி வணங்காமல் உண்மையான பக்தியோடு உள்ளம் உருக வேண்டினால் அந்த இறைவனின் அடியவர்களின் துணையைப்பெற்று அவர்களின் வழிசென்று இறைவனை அடையலாம்.



பாடல் #547: இரண்டாம் தந்திரம் - 25. பெரியாரைத் துணைக்கோடல்
[ஞானம் பெற்ற பெரியவர்களின் துணையைப் பெறுதல்]

உடையான் அடியார் அடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனி பதியைப் புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென ஓலமென் றாரே.

விளக்கம்:

அனைத்தையும் தனக்குள் உடைய இறைவனின் அடியவர்களான பெரியோர்களுக்கு அடியவர்களாகி தேவலோகப் படைகளை உடைய ஒளி உடம்போடு இருக்கும் சிவபெருமானின் திருக்கயிலாயத்திற்குச் செல்லுபவர்களை அங்கே வாயிற் காவலர்களாக இருக்கும் சிவகணங்கள் கண்டு இறைவனிடம் கூற அனைத்தும் அறிந்த இறைவன் உமக்கு அபயம் உள்ளே வருக என்று அருள் புரிந்தார்.

பாடல் #548: இரண்டாம் தந்திரம் – 25. பெரியாரைத் துணைக்கோடல்
[ஞானம் பெற்ற பெரியவர்களின் துணையைப் பெறுதல்]

அருமைவல் லோன்கலை ஞானத்துள் தோன்றும்
பெருமைவல் லோன்பிற விச்சுழி நீந்தும்
உரிமைவல் லோன்உணர்ந் தூழி யிருக்குந்
திருமைவல் லாரொடு சேர்ந்தனன் யானே.

விளக்கம்:

கலை ஞானத்தில் சிறந்து இறைவனை அடையக்கூடிய அருமையை உணர்ந்தவர்கள், ஒரு நொடிப் பொழுதும் இறைவனை மறக்காமல் இருப்பதின் பயனால் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கரைசேரும் பெருமையை உடையவர்கள், இறைவனைத் தனக்குள்ளே உணர்ந்து அதிலேயே ஆழ்ந்து அவனது திருவருளைப் பெற்றவர்கள் ஆகியவர்களோடு யாமும் சேர்ந்து இருக்கின்றோம்.

உள்கருத்து:

64 கலைகள் உள்ளது. அதில் ஏதேனும் ஒன்றோ பலவோ கற்று அதில் ஞானம் அடைந்தவர்கள். பக்தி மார்கத்தின் மூலமாக இறைவனை ஒரு நொடிப்பொழுதும் மறக்காமல் இருப்பவர்கள். யோக மார்கத்தின் மூலமாக இறைவனை தனக்குள் உணர்ந்தவர்களுடன் யாம் துணையாக இருக்கன்றோம் என்று அருளுகின்றார்.

இரண்டாம் தந்திரம் முற்றியது.

தொடர்புக்கு: 9677074974
மேலும் அறிந்து கொள்ள:
https://kvnthirumoolar.com